பூஞ்சோலை

மலர் 3	1, ஜூன், 1953	இதழ் 3

பொருளடக்கம்

உபாத்தியாயரைத் திருத்திய மாணவன்	...	3
திருக்குறள் போட்டி முடிவு	...	9
வேடிக்கைக் கதைகள்	...	10
பசுவின் கேள்வி	...	15
மோகன் செய்த வேலை	...	17
மாதவனின் மகிழ்ச்சி	...	21
இளிச்சவாயன் எழுதுகிருன்!	...	28
பளிங்கு மண்டபம்	...	33
கலைவாணியின் கருணை	...	39
கி...கி...கீ!	...	44
கோழை	...	49
புத்தகம் எங்கே?	...	61
காப்பாற்றினுன்!	...	65
கேளுங்கள் : பதில் சொல்லுகிருேம்	...	6
எல்லாம் நன்மைக்கே!	...	
கமலத்தின் பரிசு	...	

COMPLIMENTARY

பெயர் :- ....

தெரு: ....

ஊர் ....

ஜில்லா ....

ஆசிரியர் சொல்லுகிறார்

திருக்குறள் போட்டியின் முடிவு இந்த இதழில் வெளியாகியிருக்கிறது. இந்தப் போட்டியில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே பிரமித்துப் போய்விடுவீர்கள்! ஆம். இதில் 1834 பேர் கலந்துகொண் டிருக்கிறார்கள்!

இந்தப் போட்டி வெளிவருவதற்கு முன்பே நீங்களெல்லோரும் திருக்குறளைப் படித்துத்தான் இருப்பீர்கள். ஆனாலும், அறத்துப் பாலின் முதல் குறளிலிருந்து பொருட்பாலின் கடைசிக் குறள் வரை அலசி அலசிப் படித்திருக்கமாட்டீர்கள். ஆனால், இப்போதோ இந்தப் போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எல்லாக் குறளையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். சாதாரணமாகப் படிக்கவில்லை; நன்றாகப் பொருள் தெரிந்து படித்திருக்கிறீர்கள். இப்போட்டி மூலம் உலகம் போற்றும் திருக்குறளை நீங்கள் ஓரளவாவது நன்றாகத் தெரிந்துகொள்ள நாங்கள் உதவி புரிந்திருக்கிறோம் என்பதை நினைத்து நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம்.

போட்டியில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் 3-வது படத்திற்குத் தவறான குறளை எழுதிவிட்டார்கள். சிலர் சரியான விடையைக் கண்டுபிடித்தும், எழுத்துப் பிழைகளுடன் எழுதியிருக்கிறார்கள். இன்னும் சிலர் வயதைக் குறிப்பிடாததால், அவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்களா, அல்லது மேற்பட்டவர்களா என்பது தெரியாமல் போய்விட்டது. இக்காரணங்...ல் அவர்களின் விடைகளை நம் போட்டி ஆசிரியர் நீக்கி...ர். இப்போட்டியில் அவர்களுக்குப் பரிசு கிடைக்கா...யும், இப்போட்டியை உத்தேசித்துத் திருக்குறளை ...டித்ததால் நிச்சயம் அவர்கள் பலன் அடைவார்கள். ...ந்தகமே இல்லை!

...சென்ற இதழில் வெளிவந்த 'எழுத்தாளரின் தவறுகள்' போட்...க்கும் ஏராளமான விடைகள் வந்து குவிந்திருக்கின்றன. அடுத்த இதழில் அதன் முடிவை அறிவீர்கள்.

—அழ. வள்ளியப்பா

உபாத்தியாயரைத் திருத்திய மாணவன்!

மணி அடித்தது. பூகோள உபாத்தியாயர் வகுப்புக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் மாணவர்கள் எல்லோரும் மரியாதையாக எழுந்து நின்றனர். 'மரியாதையாக எழுந்து நின்றனர்' என்று கூறுவதைவிட 'நடுநடுங்கிக் கொண்டே எழுந்து நின்றனர்' என்று கூறினால் மிகவும் பொருத்தமாயிருக்கும். ஆம், அந்த உபாத்தியாயர் அவ்வளவு பொல்லாதவர். அவருக்குக் கோபம் வந்துவிட்டால், மாட்டை அடிப்பதுபோல் மாணவர்களை அடித்து விடுவார்!

அவர் வகுப்பிலே வந்து உட்கார்ந்ததும், கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்.

"டேய் நரேந்திரா, எழுந்திரு" என்று கூறிவிட்டு, முதல் நாள் நடந்த பூகோளப் பாடத்தில் ஒரு கேள்வி கேட்டார்.

நரேந்திரன் உடனே எழுந்தான். கேட்ட கேள்விக்குச் சிறிதும் தயக்கமில்லாமல் பதில் அளித்தான்.

அவன் கூறிய பதிலைக் கேட்டதும் உபாத்தியாயர், "டேய், என்னடா தப்பும் தவறுமாக உளறுகிறாய்?" என்று மிரட்டினார்.

"இல்லை சார், சரியாகத்தான் சொல்லுகிறேன்"

"என்ன, சரியாகத்தான் சொல்கிறாயா? அப்படியானால், என்னை முட்டாள் என்கிறாயா?"

"இல்லை சார், நான் சொன்ன பதில் சரியானதுதான்"

"தவறான பதிலைக் கூறிவிட்டு எதிர்த்து வேறு பேசுகிறாய்? மடையா" என்று கோபமாய்க் கூறிக் கொண்டே அவர் எழுந்து வந்தார். பிரம்பினால், நரேந்திரனை அடிக்க ஆரம்பித்துவிட்டார்.

அவர் என்னதான் அடித்தாலும் நரேந்திரன், தான் சொல்வதே சரி என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான். திரும்பத் திரும்பச் சொன்னதையே அவன் சொல்லி வந்ததால் அவருடைய கோபம் அதிகமாகி விட்டது. கோபம்

அதிகமாகிவிட்டால்தான், தலை கால் தெரியாதே! ஆத்திரத்தில் அவர் நரேந்திரனை அடி அடி யென்று நன்ருக அடித்துவிட்டார்.

கடைசியில் கை ஓய்ந்த பிறகே அவர் இடத்தில் போய் உட்கார்ந் தார். சிறிது நேரம் சென்றது. அவரது கோபம் அடங்கியது. நிதானமாக யோசித்தார். நரேந் திரன் கூறிய பதில் சரிதான் என் பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. தம் தவறை உணர்ந் தார். உடனே, எழுந்து நரேந்திர னிடம் வந்தார். "நரேந்திரா, உன்னை நான் தவருக அடித்துவிட் டேன். நீ சொன்னதுதான் சரி. என்னை மன்னித்துவிடு" என்று வருத்தத்துடன் கூறினர்.

வகுப்பிலிருந்த மற்ற மாணவர் கள் எல்லோரும் இக்காட்சியைக் கண்டு வியந்தனர். அந்த உபாத்தி யாயரும் அன்று முதல் தம்முடைய 'பிரம்படி வேலை' யை நிறுத்திக் கொண்டார்.

இப்படி அந்த உபாத்தியாயரைத் திருத்திய மாணவன்—அதாவது அந்த நரேந்திரன் பிற்காலத்தில், டாக்டர் நரேந்திரனகவோ, வக் கீல் நரேந்திரனகவோ, இன்ஜினீ யர் நரேந்திரனகவோ, முதலாளி நரேந்திரனகவோ, மந்திரி நரேந் திரனகவோ வரவில்லை. உலகமே போற்றும் ஒரு சிறந்த வேதாந்தி யாக—இந்து மதத்தின் உயர்ந்த கொள்கைகளை உலகுக்கு எடுத்துக் காட்டி வியக்கச் செய்த ஒரு பெரிய மகானக விளங்கலானன். அந்த மாணவன் பிற்காலத்தில் ஒரு சிறந்த மகானக விளங்கியது போலவே, நரேந்திரன் என்ற அவன் பெயரும் பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று விளங்கலாயிற்று!

* * *

விவேகானந்தரின் அப்பா ஒரு பிரபல வக்கீல். அவரிடம் தினந் தோறும் பல கட்சிக்காரர்கள் வரு வார்கள். அவர்கள் ஒவ்வொரு வரும் வெவ்வேறு விதமாக நடந் தப்படுவார்கள். சிலர், வந்ததும் வாட்ட சாட்டமாக அங்கிருக்கும் நாற்காலியில் உட்காருவார்கள். சிலர் தரையிலே உட்காருவார்கள். சிலர் கால் கடுக்க அப்பாவின் முன் நின்றுகொண்டே பேசுவார்கள். சிலர் வீட்டுக்குள் வராமல் வெளியி லேயே கைகட்டி நிற்பார்கள்.

'ஏன் இந்த வித்தியாசமெல் லாம்?' என்று சிறு பையனன விவேகானந்தருக்குப் புரியவில்லை!

'இவர் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்; அவன் தாழ்ந்த ஜாதி யைச் சேர்ந்தவன். அவனைத் தொடக்கூடாது' என்று ஒரு சம யம் அவரிடம் ஒருவர் கூறி ஞர்.

"ஏன், தொட்டால் என்ன? குடி முழுகிப்போய்விடுமா? இல்லை, செத்துப்போய் விடுவோமா? நான் இப்படிப்பட்ட எத்தனையோ பேர் களைத் தொட்டிருக்கிறேனே! அவர்கள் கொடுத்த தின்பண்டங் களையும் வாங்கித் தின்றிருக்கி றேனே! நான் செத்தா போய்விட் டேன்? இன்னும் உயிருடன்தானே இருக்கிறேன்!" என்று விவேகா னந்தர் கூறிச் சிரித்தார்.

'ஜாதி வேற்றுமை கூடாது' என்று அந்தச் சிறு வயதிலேயே அவர் நினைத்தார். நினைத்ததைக்

கடைசிவரை கூறிவந்தார்; எழுதியும் வந்தார்.

* * *

விவேகானந்தர் மாணவராக இருக்கும்போதே அற்புதமாக வீணை வாசிப்பார்; அருமையாக மிருதங்கம் வாசிப்பார்; இனிமையான குரலில் இசையோடு பாடுவார். அவற்றுடன் சிலம்ப விளையாட்டிலும் தீரராக விளங்கினார்!

ஒரு சமயம் சிலம்ப வித்தையில் கெட்டிக்காரனான ஒருவன் வந்தான். அவன் வயதில் பெரியவன்; பல இடங்களில் வெற்றி பெற்றவன். அவனை எதிர்த்து விளையாட விவேகானந்தர் முன் வந்தார்.

சிலருக்கு இது வியப்பாக இருந்தது. 'இவனோ சிறு பையன். அத்துடன் அனுபவம் இல்லாதவன். இவன் அந்த முரடனுடன் சண்டைக்குப் போகிறானே!' என்று கூறி அவர்கள் வியந்தார்கள்.

பலர் கேலி செய்தனர். "ஆளைப் பார்த்தால் ஆளாக்குப்போல் இருக்கிறான். இவனாவது, அவனுடன் சிலம்பம் விளையாடுவதாவது! எங்காவது கையைக் காலை உடைத்துக் கொள்ளப் போகிறான்" என்று கூறி அவர்கள் கேலி செய்தனர். விவேகானந்தர் பின்வாங்கவில்லை; பயப்படவில்லை. வீரமாக அவனுடன் சிலம்பம் விளையாடினார். நெடு நேரம் இருவரும் வெகு மும்முரமாக விளையாடினார்கள்.

விவேகானந்தரின் ஆட்டத்தைப் பார்த்த எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள். அவரது திறமையையும், நுட்பத்தையும் பாராட்டினார்கள். 'ஊம், விடாதே!...... சபாஷ்!......' என்றெல்லாம் ஊக்கமூட்ட ஆரம்பித்தார்கள்.

கடைசியில் விவேகானந்தரே வெற்றி பெற்றார்! சாதாரணமாக வெற்றி பெறவில்லை; எதிரியின் சிலம்பத்தடியை சின்னாபின்னமாக உடைத்தெறிந்து வெற்றிபெற்றார்!

* * *

விவேகானந்தர் சிறுவனாக இருந்தபோது அவருடைய நண்பன் ஒருவனின் வீட்டுக்கு அடிக்கடி விளையாடச் செல்வார். நண்பன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு செண்பக மரம் இருந்தது. அதில் விவேகானந்தரும், அந்த நண்பனும் ஏறி விளையாடுவார்கள். விவேகானந்தர் அதன் உச்சியில் ஏறிக் கிளைகளில் கால்கள் இரண்டையும் மாட்டிக்கொண்டு தலை கீழாகத் தொங்குவார்; கிளைக்குக் கிளை தாவுவார்; மேலிருந்து கீழே குதிப்பார். கீழிருந்து மேலே 'விறு விறு' என்று ஏறுவார். இப்படிப்பட்ட 'சர்க்கஸ்' வேலைகளில் அவருக்கு அபாரப் பிரியம்.

மரத்தில் ஏறி இப்படிச் சேஷ்டைகள் செய்வது அந்த வீட்டிலிருந்த ஒரு கிழவருக்குப் பிடிக்க

வில்லை. அதனால் அவர், ஒருநாள் விவேகானந்தரிடமும், அவருடைய நண்பனிடமும் வந்து, "நீங்கள் அந்த மரத்தில் ஏறக்கூடாது. ஏறினால் ஆபத்துத்தான்! அந்த மரத்திலே ஒரு பிரம்ம ராட்சசன் இருக்கிறான். அவன் நடு இரவிலே வெள்ளை உடையுடன் இங்குமங்கும் சுற்றித் திரிகிறான். யாராவது மரத்தில் ஏறினால், அவன் அவர்கள் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கைலாசத்துக்கு அனுப்பிவிடுவான்! ஜாக்கிரதை!" என்று கட்டுக் கதை கட்டிப் பயமுறுத்திவிட்டுப் போனார்.

'இந்தக் கதையைக் கேட்டதும் அவர்கள் பயந்து விடுவார்கள். அப்புறம் அந்த மரத்துப் பக்கமே தலைகாட்ட மாட்டார்கள்' என்பது அவர் நினைப்பு.

ஆனால், விவேகானந்தர் இந்த மிரட்டலுக்கெல்லாம் பயப்படவில்லை. தைரியமாக மரத்தில் ஏறி விளையாடச் சென்றார். ஆனால், அவருடைய நண்பனே பயந்தான். விவேகானந்தரையும் விளையாட வேண்டாமென்று கூறித் தடுத்தான்.

அப்போது விவேகானந்தர், "அட பயங்கொள்ளி! அந்த பிரம்ம ராட்சசன் என்னை என்னதான் செய்கிறான் என்று பார்ப்போமே! இவ்வளவு நாட்களாக நாம் இங்கு விளையாடிக்கொண்டுதானே இருக்தோம். அந்தக் கிழவர் சொன்னது உண்மையாக இருந்தால், நம் கழுத்தெல்லாம் எப்போதோ ஒடிந்து போயிருக்க வேண்டுமே!" என்று கூறிவிட்டுச் சிரித்தார். சிரித்துக் கொண்டே மரத்தில் ஏறித் தலை கீழாகத்தொங்கி விளையாடலானார்.

விவேகானந்தரின் வீரத்தைப் பார்த்ததும், அந்த நண்பனுக்கும் வீரம் வந்துவிட்டது. அவனும் மரத்தில் ஏற ஆரம்பித்துவிட்டான்.

பாவம், அந்தக் கிழவரின் எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது!

* * *

ஆள்வார் சமஸ்தானத்தில் ஒரு திவான் இருந்தார். அவருக்கு சுவாமி விவேகானந்தரிடம் அளவற்ற பக்தி. அவர் மாளிகைக்கு ஒரு முறை விவேகானந்தர் விஜயம் செய்திருந்தார். அப்போது, அவரைக் காண ஆள்வார் மகாராஜா வந்தார். வந்தவர் விவேகானந்தருடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே இருந்தார்.

அப்போது அவர், 'என் சுவாமி, கல்லையும் மண்ணையும் வைத்துக் கடவுள் என்று மக்கள் வணங்குகிறார்களே! அது சரி என்று எனக்குத் தோன்றவில்லை. இப்படி நான் சொல்லுவதால் எனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ?" என்று கொஞ்சம் கிண்டலாகக் கேட்டார்.

விவேகானந்தர் அதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை. சிறிது நேரம் சென்றது. விவேகானந்தர் அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைப் பார்த்தார். அது அந்த அரசரின் படம். உடனே, அதை எடுத்து வரும்படி திவானிடம் கூறினார்.

திவான் படத்தை எடுத்துவந்தார். படத்தைக் கையில் வாங்கிய விவேகானந்தர், திவானையும், மற்றும் அங்கிருந்தவர்களையும் பார்த்து, "இதோ இருக்கிறதே படம், இதில் நீங்கள் காரித் துப்புங்கள்" என்று கூறினார்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டனர். "என்ன சுவாமி, இது எங்கள் அரசரின் படமல்லவா!" என்றனர்.

"இதில் கண்ணாடியும் காகிதமும் தானே இருக்கின்றன! உங்கள் அரசரா இருக்கிறார்?"

"அரசர் இதில் இல்லாவிட்டாலும் அரசரின் உருவம் இருக்கிறதல்லவா?"

"ஆம், அரசரின் உருவம்தான் இதில் இருக்கிறது. இந்த உருவத்தின் மூலமாக நீங்கள் உங்கள் அரசருக்கு மரியாதை செலுத்துகிறீர்கள். அதே போலத்தான் நாங்களும் இந்த உலகத்தைப் படைத்த ஆண்டவனுக்கு ஓர் உருவத்தின் மூலமாக வணக்கம் செலுத்துகிறோம். இந்தப் படத்தைப் பார்த்து, 'கண்ணாடியே, காகிதமே' என்று நீங்கள் கூறுவதில்லை, அதே போல்தான் 'கல்லே, மண்ணே, தாமிரமே' என்று நாங்களும் கூறி வணங்குவதில்லை. கடவுளின் உருவங்களாகவே அவற்றைக் கருதுகிறோம், கருதி வணங்குகிறோம்" என்றார், விவேகானந்தர்.

இதைக் கேட்டதும் மன்னனின் மனம் மாறியது. விவேகானந்தரிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

* * *

ஒரு சமயம் விவேகானந்தர் ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

சாதாரணமாக அவர் மூன்றாம் வகுப்பில்தான் செல்வார். ஆனால், அச்சமயம் ஒரு பெரிய பணக்காரர் அவருக்கு இரண்டாம் வகுப்பு 'டிக்கெட்' வாங்கிக் கொடுத்து வழி அனுப்பி வைத்திருந்தார்.

விவேகானந்தர் இருந்த வண்டியில் இரண்டு வெள்ளைக்காரர்களும் இருந்தனர்.

அவர்களுக்கு விவேகானந்தரைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாயிருந்தது.

"இந்தப் பரதேசியைப் பாரடா! பெட்டி இல்லை; படுக்கை இல்லை; சாப்பிட உணவும் இருப்பதாகத் தெரியவில்லை. காவி உடை உடுத்துக் கொண்டு கவலையில்லாமல் 'கொழு கொழு' என்று இருக்கிறானே!" என்றான், ஒருவன்.

"ஆமாம், இவன் கெட்ட கேட்டுக்கு இரண்டாம் வகுப்பு வேறு!" என்றான், மற்றவன்.

உடனே இருவரும் 'கொல்' லென்று சிரித்தனர். இப்படியே அவர்கள் விவேகானந்தரைக் கேலி செய்து பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். விவேகானந்தருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது அவர்களின் எண்ணம். இல்லாவிட்டால், அப்படியெல்லாம் பேசத் துணிச்சல் வருமா?

வழியில் வண்டி ஒரு ஸ்டேஷ

ணில் நின்றது. உடனே, விவேகானந்தர் தலையை வெளியே நீட்டிப் பார்த்தார். அப்போது 'ஸ்டேஷன் மாஸ்டர்' அங்கு வந்தார்.

அவரைப் பார்த்து, "இங்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று அழகாக ஆங்கிலத்தில் கேட்டார், விவேகானந்தர். ஆங்கிலத்தில் அவர் பேசியதைக் கேட்டதும், அந்த ஆங்கிலேயர் இருவரும் திடுக்கிட்டனர். பிறகு, விவேகானந்தரை நோக்கி, "ஏனய்யா, உமக்கு ஆங்கிலம்கூடத் தெரியுமா? அப்படியானல் நாங்கள் இவ்வளவு நேரமாகப் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஏன் சும்மா இருந்தீர்?" என்று கேட்டனர்.

"ஓ, அதுவா!...நான் மூடர்களைக் காண்பது இதுவல்ல முதல் தடவை!" என்று அழுத்தம் திருத்தமாகச் சிரித்துக்கொண்டே பதிலளித்தார்.

"என்ன, நாங்களா மூடர்கள்!" என்று கேட்டுக்கொண்டே இருவரும் விவேகானந்தரைத் தாக்க வந்தனர்.

விவேகானந்தர் பயந்துவிடவில்லை.

"ஓஹோ! புத்தியைத்தான் உபயோகப்படுத்தத் தெரியவில்லை. சக்தியையாவது உபயோகப்படுத்தலாம் என்றுபார்க்கிறீர்களா? நான் அதற்கும் தயார்தான். உம், வாருங்கள்; பார்க்கலாம்" என்று கூறிக்கொண்டே சட்டை விளிம்புகளை மடித்துவிட்டுக்கொண்டு முன் வந்தார். அவருடைய திடமான உடலையும், திரண்ட தோள்களையும், வலிமை மிக்க கைகளையும் பார்த்த அவர்கள் நடுநடுங்கிவிட்டனர். பேசாமல் பெட்டிப் பாம்பு போல் அடங்கிப் பின் வாங்கிவிட்டனர்.

* * *

அமெரிக்காவில் விவேகானந்தர் ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'உண்மையான ஞானத்தைப் பெற்ற யோகி எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் கலங்க மாட்டான்; எவ்வளவு சங்கடங்கள் வந்தாலும் சளைக்க மாட்டான். எடுத்த காரியத்திலேயே கருத்தாயிருந்து முடித்துவிடுவான்' என்று கூறினார்.

விவேகானந்தர் விஷயத்தில் இந்த உண்மையைப் பரிசோதிக்க விரும்பினர், சில கல்லூரி மாணவர்கள்.

ஒரு நாள் விவேகானந்தர் மேடைமேல் நின்று பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது, அவரைச் சுற்றிலும் கைத்துப்பாக்கியால் சுடலானர்கள், அந்த மாணவர்கள். உடலை உரசிக்கொண்டு சென்ற அந்தக் குண்டுகளைக் கண்டோ, அவைகள் 'படார்! படார்' என்று வெடிக்கும் சப்தத்தைக் கேட்டோ அவர் திடுக்கிடவில்லை. அமைதியாகவே அவர் தொடர்ந்து பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். கருமமே கண்ணுயிருந்த விவேகானந்தரைக் கண்டு அந்த மாணவர்கள் வியந்தனர். உண்மையிலேயே அவர் ஒரு பெரிய யோகிதான் என்பதை உணர்ந்தனர்; ஒப்புக்கொண்டனர்; உலகுக்கும் அறிவித்தனர்.

★

திருக்குறள் போட்டி முடிவு

கலந்து கொண்டவர்கள்: 1634. பரிசு பெற்றவர்கள்: 197

★

சரியான விடை

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று

2. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

3. கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

4. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்

5. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

6. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

7. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

8. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

(பரிசு பெற்றவர்களின் பெயர்களைக் கடைசிப் பக்கங்களில் காண்க—போட்டி ஆசிரியர்.)

○

ஏமாற்றம்

“ அம்மா, வெளியிலே போய் விட்டு வருகிறேன்” என்று கத்திக்கொண்டே வெளியே ஓடினான், பாலு.

“ எங்கே போகிறான் அவன்?” என்று கேட்டுக் கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தார், அப்பா.

“ வேறு எங்கே போவான்? ‘போஸ்டாபீ’ ஸிற்குத்தான் போவான். அவனும்தான் எழுதி அனுப்பிக்கொண்டே இருக்கிறான். ஒரு மண்ணும் வரவில்லை. காசுதான் செலவாகுது” என்று அலுத்துக் கொண்டாள் அம்மா.



ஆம், அம்மா சொன்னது சரிதான். பாலு ‘போஸ்டாபீ’ ஸிற்குத்தான் போனான். அவனுக்கு வெகுநாளாக, தான் கதை எழுத வேண்டும், அது பத்திரிகையில் பிரசுரமாக வேண்டும் என்றெல்லாம் ஆசையிருந்தது. இப்பொழுதும் அவன் ஒரு கதையைத் தபாலில் சேர்க்கத்தான் போனான்.

ஒரு வாரத்திற்குப்பின் ஒரு நாள் அப்பா சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது “ சார், போஸ்ட்” என்ற குரல்கேட்டது. அப்பா கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அது பாலுவுக்கு வந்திருந்தது.

"டேய் பாலு" என்று கத்தினார், அப்பா.

"ஏனப்பா" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தான், பாலு.

"இந்தாடா, ஏதோ கடிதம் வந்திருக்கிறது" என்று அவனிடம் கடிதத்தைக் கொடுத்தார், அப்பா. பாலு வாங்கி அவசர அவசரமாக உள்ளே இருந்த கடிதத்தை எடுத்தான்.

" அருமைத் தம்பிக்கு,

உன் கதை மிகவும் நன்ருக இருக்கிறது. வரும் இதழில் வெளியிடுகிறேம்.

ஆசிரியர்,

வைரம்"

பாலுவுக்கு இதைக் கண்டதும் தலைகால் புரியவில்லை. சந்தோஷத்தால் குதித்தான். "லலலா...லலலா" என்று பாடினான். அதற்குள் அந்தக் 'கவரி'லிருந்து மற்ருெரு கடிதம் விழுந்தது. அப்பா அதை எடுத்துப் பார்த்தார். உடனே விழுந்து விழுந்து சிரித்தார்.

பாலு அதை வாங்கிப் பார்த்தான்.

" அன்புள்ள பாலுவுக்கு,

நான் ஒரு கதை எழுதி, வைரம் பத்திரிகைக்கு அனுப்பினேன். ஆசிரியர் அதை வெளியிடுவதாக எனக்குக் கடிதம் எழுதியிருக்கிருர். இத்துடன் ஆசிரியரின் கடிதத்தையும் அனுப்பியிருக்கிறேன்.

இப்படிக்கு,

வேணுகோபால்"

பாலுவின் நண்பன் வேணுகோபால் எழுதிய அக்கடிதத்தைப் படித்ததும் பாலுவின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி மறைந்தது; ஏமாற்றம் குடிகொண்டது!

—'செந்தேள்'

★ ★ ★

ஓடி வந்தது!

'மூன்றும் நம்பர் பஸ்' தூரத்தில் வருவதைக் கண்ட அந்த மனிதருக்கு முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. இவ்வளவு நேரமாகக் கால் கடுக்க நின்று தவம் செய்து கொண்டிருந்த அவருக்கு இப்போதுதான் 'பஸ்' கிடைக்கப் போகிறது!

அவர் அணிந்திருந்த சில்க் ஜிப்பா, விசிறி மடிப்பு அங்கவஸ்திரம், தங்க 'பிரேம்'

போட்ட மூக்குக் கண்ணுடி இவைகளெல்லாம், 'அவர் ஒரு பணக்காரர்' என்பதைப் பறை சாற்றி அறிவித்தன. அவர் அடிக்கடி தமது கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். எங்கோ அவசரமாகப் போக வேண்டியவர் போலும்!

இதே சமயத்தில் நாம் இன்ஞெரு ஜீவனைப்பற்றி அறிய வேண்டியதிருக்கிறது. சுமார் நூறு அடி தூரத்தில் 'புல் சூட்' ஆசாமி ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் 'ஜிப்பா' ஆசாமியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நிலைமை ஏழ்மையை எடுத்துரைத்தது. அவன் ஏதோ முடிவுக்கு வரக் கஷ்டப்படுபவன் போல் காணப்பட்டான்.



மூன்ரும் நம்பர் பஸ், 'ஸ்டாப்'பை நெருங்கிக் கொண்டிருந்தது. இதற்குள் 'புல் சூட்' ஆசாமி, ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவன் போல், 'ஸ்டாப்'பை நோக்கி ஓடினுன்; விழுந்து, விழுந்து ஓடினுன்.

பஸ் நின்றது. ஜிப்பா ஆசாமி ஏறப்போனுர்; ஆனுல், அப்போதுதான் அங்கு இளைக்க, இளைக்க ஓடிவந்த 'புல் சூட்' ஆசாமியின்மீது 'கண்டக்டர்'ருக்குக் கருணை பிறந்துவிட்டது. உடனே அவன் 'புல் சூட்' ஆசாமிக்குக் கை கொடுத்து உதவி, உள்ளே இழுத்தவாறு, ஜிப்பா ஆசாமியைப்பார்த்து, "ஒரு 'சீட்' தான் ஸார் இருக்கு! உங்களுக்கு இடமில்லை" என்று சொல்லிவிட்டு, 'ரைட்!' என்று கத்தினுன்.

பஸ் புறப்பட ஆரம்பித்தது. இதற்குள் 'புல் சூட்' ஆசாமி, "ஹோல்டான்! ஹோல்டான்!!" என்று கத்தினுன். எல்லோருக்கும் ஒன்றும் புரியவில்லை; பஸ் நின்றது.

கண்டக்டர், "எதற்கப்பா நிறுத்தச் சொன்னுய்?" என்று அதட்டிக் கேட்டான், 'புல் சூட்' ஆசாமியை.

"நான் பஸ்ஸில் போவதற்காக ஓடிவரவில்லை!" என்ருன், 'புல் சூட்' ஆசாமி.

"பின் ஏன் அவ்வளவு வேகமாய் ஓடிவந்தாய்?" என்று கேட்டான், கண்டக்டர்.

"நான் 'பஸ்'ஸில் செல்வதற்

காக ஓடிவரவில்லை; பஸ்ஸில் போவதற்கு என்னிடம் பைசாக்கூட இல்லை! நான் ஒரு பி. ஏ. பட்டதாரி. காலம் என்னை ஏழையாக்கிவிட்டது! அந்த ஜிப்பாக்காரரைத் தூரத்திலிருந்து பார்த்த நான், வெகுநேர யோசனைக்குப் பின், 'இவரிடமாவது நம் குறையைக் கூறி, ஏதாவது பண உதவி பெறலாம்' என்ற நோக்கத்தோடுதான் ஓடிவந்தேன்; பஸ்ஸில் அவர் ஏறுவதற்குள் அவரை அடைய எண்ணி வேகமாக வந்தேன்; நீங்கள் என்னவென்றால் தவறாக நினைத்து..." என்று 'புல்சூட்' ஆசாமி கூறலானான்.

உடனே கண்டக்டர் முகம் என்னவோ போல் ஆகிவிட்டது!

—'சேது'

★ ★ ★

டும்..டும்..டும்...!

கோபு வேகமாகக் கடைவீதியிலிருந்து வந்துகொண்டிருந்தான். எதிரே ராமு வருவதைக் கண்டதும் தன் வேகத்தைக் குறைத்து ராமுவின் அருகே போய் நின்றான். பிறகு அவனிடம், "டேய் ராமு, 'பகோடா' பத்திரிகையிலே ஒரு கட்டுரைப் போட்டி வந்திருக்கிறது. அதில் நான் கலந்துகொள்ளப் போகிறேன். எனக்குத்தான் முதல் பரிசு" என்று ஆரம்பித்தான்.

"போடா போ. வேறு வேலை இல்லை. அந்த 'பகோடா'வைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் இதோ பக்கத்திலிருக்கும் ஓட்டலில் பகோடா வாங்கி வருகிறேன். இருவரும் சாப்பிடலாம்."

—இப்படிக் கூறிவிட்டு ராமு பக்கத்து ஓட்டலுக்குச் சென்று ஓரணாக் கொடுத்து ஒரு பொட்டலம் பகோடா வாங்கிக்கொண்டு கோபுவிடம் ஓடிவந்தான்.

பகோடா பொட்டலத்தை ராமு பிரித்து ஒரு பகோடாத் துண்டை எடுத்துக் கோபுவிடம் கொடுத்தான். பிறகு, விழுந்து, விழுந்து சிரித்தான்.

உடனே கோபு விஷயம் புரியாமல், "டேய் ராமு, ஏண்டா சிரிக்கிறாய்? என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"என்ன விஷயமா? இதோ பார்... இந்தப் பொட்டலத்துக்குள்ளே ஓர் அரையணா இருக்கிறது! 'பார்சல்' கட்

டித் தரும்போது ஓட்டல்காரர் இதையும் சேர்த்துக் கட்டித் தந்துவிட்டார்!"

"அடே, பரவாயில்லையே! 'பகோடா' பத்திரிகை மூலம் உனக்குப் பரிசு வராவிட்டாலும், 'பகோடா' பொட்டலத்தின் மூலமாவது பரிசு வந்துவிட்டதே!"

"ஆமாம், என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இன்று நான் நரி முகத்திலே விழித்திருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே சட்டைப் பைக்குள் அரையணாவைப் போட்டுக்கொண்டு பகோடாப் பொட்டலத்தைக் காலி செய்துகொண்டிருந்தான், ராமு.

அப்போது அந்த வழியாகச் சென்றான், ஒரு கடலை மிட்டாய் விற்கும் பையன்.

அவனை அழைத்து, "தம்பி, அரையணாவுக்குக் கடலை மிட்டாய் கொடு" என்று கூறித் தன் பையிலிருந்த காசை எடுத்து அவனிடம் நீட்டினான், ராமு.

பையன் அரையணாவுக்குக் கடலை மிட்டாய் கொடுத்துவிட்டு, "ம்... அப்புறம் என்ன வேண்டும்?" என்றான்.

"ஒன்றும் வேண்டாம். போடா" என்று அதிகாரமாகக் கூறினான், ராமு.

"இல்லை, நான் சொல்கிறதைக் கொஞ்சம்..."

"என்னடா சொல்லப் போகிறாய்? மண்ணாங்கட்டி! போடா போ!" என்று அதட்டி விரட்டினான், ராமு.

அந்தப் பையன் பேசாமல் போய்விட்டான்.

பிறகு ராமுவும் கோபுவும் வீடு நோக்கிச் சென்றனர். பாதித் தூரம் போனதும் வேர்க்கடலை வியாபாரி ஒருவன் எதிரே வந்தான். அவனைக் கண்டதும், ராமு சட்டைப் பைக்குள் கையை விட்டு உள்ளே இருந்த பணத்தை எடுத்தான். எடுத்ததும் திடுக்கிட்டான். "ஐயையோ! கடலை மிட்டாய்ப் பையனிடம் அரையணாவிற்குப் பதில், பையிலிருந்த நாலணாவைக் கொடுத்து விட்டேனே!"

"சரிதான்! அந்தப் பையன் இன்று 'பெரிய நரி' முகத்திலே தான் விழித்திருக்க வேண்டும். அரையணா வந்தது, நாலணாப் போனது டும்...டும்...டும்...!" என்று ராமுவைப் பார்த்துக் கேலி செய்ய ஆரம்பித்தான், கோபு!

—ர. தங்கவேலன்

பசுவின் கேள்வி

கருத்து : ஈசாப் பாடல் : வள்ளியப்பா

மாலை நேரம் நாயொன்று
வைக்கோல் போரின் மீதினிலே

ஏறி அமர்ந்து கொண்டதுவே ;
இங்கும் அங்கும் பார்த்ததுவே.

மிக்கப் பசியுடன் ஒருபசுவும்
விரைந்து வந்தது, அவ்விடத்தே.

வந்ததும் அதனை நாய்பார்த்து
'வள்வள்' என்று குலைத்ததுவே.

குலைத்திடும் நாயைக் கண்டதுமே
கொஞ்சம் பின்னல் வந்தபசு,

வைக்கோல் தின்னும் ஆசையினல்,
மறுபடி நெருங்கிச் சென்றதுவே.

திரும்பத் திரும்ப அந்நாயும்
திசைகள் அதிரக் குலைத்திடவே,

கோபம் கொண்ட பசுஉடனே
கூறிட லானது, இப்படியே:

"தானும் உண்ணுன்; பிறருக்கும்
தருமம் செய்யான்; அவன்போலே

என்னைப் பார்த்துக் குலைக்கின்ருய்.
ஏனே துரத்தி யடிக்கின்ருய்?

வைக்கோல் தின்பது உன்னுடைய
வழக்கம் இல்லை; உலகறியும்.

அப்படி யிருந்தும் வைக்கோலை
அனுதினம் தின்றே உடல்வளர்க்கும்

என்னைத் துரத்துதல் சரியாமோ?
எண்ணிப் பார்ப்பாய், மடநாயே!"



மதுரைக் கட்டுரைப் போட்டி

மதுரைக் கட்டுரைப் போட்டியின் முடிவை இந்த இதழிலேயே வெளியிட வேண்டுமெனக் கருதினேம். ஆயினும், இந்த இதழ் அச்சாவதற்குரிய கடைசி நேரம் வரை மதுரையிலிருந்து முடிவு வராததால், அதை வெளியிட இயலாது போயிற்று. அடுத்த இதழில் நிச்சயம் போட்டி முடிவும், பரிசு பெற்ற கட்டுரையும் வெளி வரும்.

—ஆசிரியர்

மோகன் செய்த வேலை

நாக. முத்தையா

நாராயணனும், சங்கரனும் வண்டிச் சக்கரமும், கடைச் சாவியும் போல ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகிவந்தனர். காலணாவுக்குக் கடலை வாங்கினாலும் சரி; காற்று வாங்கக் கடற்கரைக்குப் போனாலும் சரி; ஒருவருக்கொருவர் கலந்து கொள்ளாமல் எதையுமே செய்வதில்லை.

நாராயணன் மண்ணடியில் வசித்து வந்தான். சங்கரன் வண்ணாரப் பேட்டையில் வாழ்ந்து வந்தான். உண்பது, உறங்குவது இரண்டு நேரமும் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் இருவரும் இணைபிரியாது இருந்து வந்தனர்.

ஒரு முறை நாராயணனும் சங்கரனும் சென்னையிலிருந்து சுற்றுப் பிரயாணம் கிளம்பினர், தெற்கு நோக்கி. தெற்கே பல இடங்களையும் பார்த்துவிட்டு, ராஜபாளையம் சென்று வந்ததன் அறிகுறியாக ஒரு நாய்க் குட்டியை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தனர். நாய்க் குட்டி மிகவும் அழகாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்து வந்தது. அதற்கு நண்பர்கள் இருவருமாகச் சேர்ந்து வைத்த பெயர் 'மோகன்.'

மோகன் எப்பொழுதுமே நாராயணன் வீட்டில்தான் இருப்பது வழக்கம். ஆனால், சங்கரனின் வீடும் அதற்கு நல்ல பழக்கம். நாராயணன் ஏதாவது சங்கரனுக்குத் தகவல் சொல்லி அனுப்ப வேண்டும் என்று எண்ணினால், உடனே தான் நினைப்பதை ஒரு தாளில் எழுதிக் கடிதம் போல மடித்து மோகனிடம்

கொடுப்பான். மோகன் அர்த்த ராத்திரியானாலும் கூட ஆனந்தமாகக் கடிதத்தை வாயில் கடித்தபடியே சங்கரனின் வீட்டிற்குப் போய்க் கொடுத்து விட்டு வரும். சங்கரன் கொடுக்கும் பதிலையும் நாராயணனிடம் கொண்டு வந்து சேர்த்துவிடும். இப்படி நண்பர்களுக்கு ஏற்ற தோழனாக மோகன் இருந்து வந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. நண்பர்கள் இருவருக்கும் பொழுதே போகவில்லை. என்ன செய்யலாம் என்று யோசனை செய்தார்கள்.

நாராயணன் 'டேய், கிண்டியில் குதிரைப் பந்தயம் நடக்கிறதாமே, வருகிறாயா? பார்த்துவிட்டு வரலாம்'' என்றான்.

"களவானாலும் கற்று மற என்பார்கள். அதனாலே வா, பந்தயம் எப்படித்தான் நடக்கிறதென்று பார்த்துவிட்டு வரலாம்'' என்று சங்கரனும் சம்மதித்து விட்டான்.

நண்பர்கள் இருவரும் கிண்டியை நோக்கிக் கிளம்பி விட்டனர், போகவர 'டிக்கெட்' வாங்கிக்கொண்டு. பந்தயத்திடலில் ஏராளமான கூட்டம். தள்ளி முள்ளிக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக நண்பர்கள் இருவரும் கலந்து விட்டனர். அங்குள்ள ஒவ்வொருவரின் முகத்தையும் உற்சாகத்தையும் பார்த்துப் பார்த்துப் பரவசமாகி விட்டனர். சின்ன வயதிலிருந்து கிழட்டுப் பருவம் வரை வகை வகையான மக்கள் நின்று கொண்டிருந்தனர். எல்லோருடைய பார்வையும் குதிரைகளின் மேல் பதிந்திருந்தன.

நாராயணனுக்கு இலேசாகச் சபலம் தட்டியது. "டேய், நாமும் பந்தயம் கட்டலாமா?'' என்று சங்கரனைக் கேட்டான். சங்கரன் முதலில் 'வேண்டாம்' என்று தடை செய்தான். சிறிது நேரங் கழித்து 'ஒரே ஒரு முறை மட்டும் விளையாடலாமே!' என்றான், நாராயணன்.

தொந்தரவு பொறுக்க முடியாமல், "சரி, விளையாடுவதானால் ஐந்து ரூபாய்க்கு மட்டுமே விளையாட வேண்டும். நட்டமோ லாபமோ அதற்குமேல் விளையாடவேண்டாம்'' என்றான், சங்கரன். சம்மதித்து விட்டான், நாராயணன்.

இருவருமாகப் பந்தயச்சீட்டு விற்குமிடத்திற்குச் சென்றனர். எந்தக் குதிரைக்குச்சீட்டு வாங்கினால் நல்லது என்றான் நாராயணன். சங்கரன், "என் பெயருடைய ஒருவர் (சங்கர்) ஓட்டுகிறாரே, அந்தக் குதிரைக்கே வாங்கு'' என்றான். நாராயணன் சீட்டுடன் வெளியே வந்தான்.

குதிரைகள் ஓட ஆரம்பித்தன. நண்பர்கள் எவ்வி எவ்விக் குதிரைகளையே பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரின் மனமும் கொந்தளித்துக் கொண்டே இருந்தது. அப்பாடா! சங்கர் ஓட்டிய குதிரைதான் முதலில் வந்தது. நாராயணனுக்கு ரூபாய் 100 கிடைத்தது. அவன் பணத்தை வாங்கிக் கொண்டு திரும்பினான்.

சங்கரன் அந்தப் பணத்தில் சரிபாதியான ரூபாய் ஐம்பது தனக்குச் சேர வேண்டுமென்று சொல்லிக் கேட்டான். அவன் சொன்ன குதிரைதானே ஜெயித்தது? அதற்காக!

நாராயணன், "போடா போ, அதெல்லாம் முடியாது. பந்தயம் கட்டிய பணம் யாருடையது? என்னுடையதுதானே! விளையாட வேண்டும் என்று விருப்பப் பட்டதும் நான்தான். ஆகையால், நான் அரைப் பைசாக் கூடத் தர மாட்டேன்" என்று சொல்லி விட்டான்.

அன்றோடு நண்பர்களின் நட்பு முறிந்தது. ஒருவரோடு ஒருவர் பேசுவதுமில்லை; ஒருவரை ஒருவர் பார்ப்பதுமில்லை. பகைவர்களாகவே வாழ்ந்து வந்தனர். மூன்று மாதங்கள் பறந்து விட்டன. கையில் உள்ள பணத்தை யெல்லாம் 'கன்னாப்பின்னா' வென்று செலவு செய்து விட்டான், நாராயணன்.

ராமு: டேய் மணி, நீ அனுப்பின கதை நேற்று எதிலேயோ வந்ததென்று சொன்னாயே; எதிலேடா வந்தது?

மணி: ஆமாம்: நேற்று 'புக் போஸ்டி'லே திரும்பிவந்தது!

—சன்மார்க்கி

கையில் இருந்த பணமெல்லாம் செலவான பிறகுதான், அவனுக்கு சங்கரன் ஞாபகம் வந்தது. தன்னுடைய முட்டாள்தனத்தைக் குறித்து வருந்தினான். சங்கரனின் நட்பை விரோதித்துக் கொண்டது குறித்து மிகவும் துயரப் பட்டான். அற்பப் பணத்துக்காக நாராயணனோடு சண்டை போட்டிருக்க வேண்டாம் என்று சங்கரனும் எண்ணினான். இப்படியாகவே இருவரும் வருத்தத்தோடு சில காலம் வாழ்ந்து வந்தனர்.

அன்று பிற்பகல் மணி மூன்று இருக்கும். நாராயணன் தன் அறையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். கதவை யாரோ தட்டுகிற சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தான். ஆச்சரியம் தாங்கவில்லை. அவனால் அவன் கண்களை நம்பவும் முடியவில்லை. காரணம்? கதவைத் தட்டிய பேர்வழி யார் தெரியுமா? சாட்சாத் சங்கரன்தான்!

நாராயணன், "ஓ! சங்கரனு! வாப்பா வா" என்று சங்கரனை அழைத்து உள்ளே சென்றான்.

சங்கரன், நாராயணனைப் பார்த்து, "என்னை ஏன் இன்று கட்டாயம் வரும்படி கடிதம் எழுதி அனுப்பினாய்?" என்று கேட்டான்.

நாராயணன் விஷயம் விளங்காமல் பேந்தப் பேந்த விழித்தான். "யார் அனுப்பியது? யார் மூலம் கடிதம் உனக்கு வந்தது?" என்றான் நாராயணன்.

சங்கரன், கையில் மடித்து வைத்திருந்த கடிதத்தை எடுத்துக்காட்டி, 'இதுதான் அந்தக் கடிதம். கொண்டு வந்தது நம் மோகன்!' என்றான்.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான், நாராயணன். அது நாராயணன் எழுதிய கடிதம்தான். ஆனால், பல நாட்களுக்கு முன்னால் அவன் எழுதிய கடிதம்! சங்கரனும் நாராயணனும் நேர்மையாக நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த காலத்தில் நாராயணன், சங்கரனை அவசரமாக வரும்படி எழுதி அனுப்பிய கடிதம் தான் அது!

அது எப்படி அங்கே வந்தது?

அன்று காலையில் வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரி, அலமாரிக்கு அடியில் கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்து நாராயணனின் மேஜை மேல் வைத்து விட்டுச் சென்றாள். அப்போது நாராயணன் வீட்டில் இல்லை. மேஜை மீது இருந்த கடிதம் காற்றிலே பறந்து தரையில் விழுந்து விட்டது. அதை அப்போது, அங்கு வந்த மோகன் எடுத்துக் கொண்டு போய்ச் சங்கரனிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டது!

இதைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். இனி என்ன செய்ய முடியும்? மோகன் செய்த வேலையால் அவர்கள் இருவரும் திரும்பவும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர்!

'மோகன் வாழ்க!' என்றான், சங்கரன். 'ஆமாம்! அப்போது தான் நாமும் நண்பர்களாக வாழ முடியும்!' என்றான் நாராயணன்.○

மாதவனின் மகிழ்ச்சி

ஜோதிர்லதா கிரிஜா

●

அன்றுமாதவன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே மணி ஏழாகி விட்டது. அவசர அவசரமாகப் பல் துலக்கிவிட்டு, கணக்கு வாத்தியார் கொடுத்த வீட்டுக் கணக்குகளைப் போடலானன்.

மாதவன் கணக்குகளைப் போட்டு முடிப்பதற்கும் கடிகாரம் மணி எட்டு அடிப்பதற்கும் சரியாக இருந்தது. ஒன்பது மணிக்கெல்லாம் அவன் பள்ளிக்கூடத்தில் இருந்தாக வேண்டும். இடையிலுள்ள ஒரு மணி நேரத்துக்குள், குளித்தாக வேண்டும்; உடை மாற்றிக் கொள்ளவேண்டும்; தலை வாரிக் கொள்ளவேண்டும்; சாப்பிட வேண்டும்; கால அட்டவணையைப் பார்த்துப் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்!

முதலில் கால அட்டவணையைப் பார்த்துத் தன் புத்தகங்களை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டான், மாதவன். குளித்துச் சாப்பிட்டு விட்டுத் தலையை வாரிக்கொண்டு உடை மாற்றிக் கொள்ளுவதற்குள் மணி எட்டே முக்கால் ஆகிவிட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் மாதவனை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போவதற்காக வந்தான் கோபாலன்.

பள்ளிக்கூடம் செல்லுவதற்காகக் கால்களில் செருப்பைத் திணித்துக் கொண்டிருந்த மாதவனிடம் அவன் அம்மா வந்து, "டேய், மாது! நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்டுவிட்டுப் போயேன்! நல்லெண்ணெய் தீர்ந்து விட்டது! ரூபாய் தருகிறேன்; பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும்போது அரைப்படி நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டு வந்துவிடு!" என்று கூறியபடியே ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை மாதவனிடம் கொடுத்தாள்.

"சரி, இது வேறே வேலை வைத்துவிட்டாயா எனக்கு?" என்று முணு முணுத்துக் கொண்டே, அம்மா தந்த ஐந்து ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு நல்லெண்ணெய்ப் பாத்திரத்தோடு

கோபாலனை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கிப் புறப்பட்டான், மாதவன்.

பள்ளிக் கூடம் முடிந்ததும் நல்லெண்ணெய்ப் பாத்திரத்துடன் பலசரக்குக் கடையை நோக்கிக் கிளம்பினான், மாதவன். கோபாலனும் நண்பனைப் பின் தொடர்ந்தான்.

பாத்திரத்தில் எண்ணெயை வாங்கிக்கொண்டு விலைச் சீட்டைப் பார்த்தான், மாதவன். மூன்று ரூபாய் என்று போடப்பட்டிருந்தது. சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டை வெளியே எடுத்துக் கடைக்காரப் பையனிடம் நீட்டினான், மாதவன்.

ஐந்து ரூபாய் நோட்டை வாங்கி அருகே வைக்கப்பட்டிருந்த மரப் பெட்டியில் போட்டுவிட்டு மீதிப் பணத்தை மாதவனிடம் கொடுத்தான்,கடைப்பையன். கையிலே வாங்கிய ரூபாயைப் பார்த்த மாதவன் திடுக்கிட்டான். இரண்டு ரூபாய் கொடுப்பதற்குப் பதில், மூன்று முழு ரூபாய்களை ஞாபகப்பிசகாகவோ அல்லது கணக்கைச் சரியாகக் கவனிக்காமலோ மாதவனிடம் கொடுத்துவிட்டிருந்தான், கடைக்காரப் பையன். பணத்தை வாங்கித் தன் கால் சட்டைப்பையினுள் போட்டுக் கொள்ளுவதற்குப் பிடித்த ஒரு நிமிஷ நேரத்திற்குள் மாதவனின் மனத்தில் எண்ணற்ற சிந்தனைச் சுழல்கள் குமிழியிட்டு விட்டன. அவனுடைய சின்ன உள்ளத்தில் ஒரு பெரிய போராட்டமே சீறி எழுந்தது.

'கைத் தவறுதலாகக் கடைக்காரப் பையன் கொடுத்துவிட்ட இந்த முழு ரூபாயை, அவனிடமே கணக்கை ஞாபகப்படுத்தித் திருப்பிக் கொடுத்து விடலாமா?... இந்த ஒரு ரூபாய்க்கு என்னென்ன சாமான்களெல்லாம் வாங்கலாம்?...வலுவிலே வந்த பணத்தை எதற்காக முட்டாள்தனமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும்? நான் என்ன திருடியா எடுத்துக் கொண்டேன்?'—இப்படி நினைத்தது, அவன் மனம்.

'வலுவிலே கிடைத்த காசுதான். என்றாலும் நியாயமான முறையில் கிடைக்கவில்லையே! தெருவிலே கண்டெடுத்த காசா, நீயே வைத்துக் கொள்வதற்கு? அப்படியே கேட்பார் இன்றி நடுத்தெருவில் கிடக்கும் காசாகவே இருந்தாலும்கூட, 'அந்தப் பணம் இன்னாருடையதுதான்' என்று உறுதியாகத் தெரிந்தால், அதை உரியவரிடம் திருப்பிக்கொடுத்துவிட

வேண்டியதல்லவா முறை? கடைக்காரன் கவனக்குறைவு காரணமாக உன்னிடம் கொடுத்த காசு, வலுவிலே உன்னைத் தேடிவந்த பணமாக எப்படி ஆகமுடியும்! உள்ளதைத் தெரிவித்துக் காசைத் திருப்பிக்கொடுத்துவிடு. அநியாயமாகச் சம்பாதிக்கப்படும் காசு நிலைக்காது!' என்று கடுமையாக உத்திரவு இட்டது, அவனுடைய மனச்சாட்சி.

ஆனால், மாதவன் அதை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. இல்லாவிட்டால், காசைத் தன் சட்டைப்பையினுள் வைத்தபடியே வீட்டை நோக்கி அவன் நடைபோடத் தொடங்கியிருப்பானா? அதுவும், கடைக்காரன் தன்னிடம் அதிகப்படியாக ஒரு முழு ரூபாய் நாணயத்தைக் கொடுத்துவிட்டான் என்பதைத் தன் நண்பன் கோபாலன் கூடக் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்த பிறகா, அவன் திருப்பிக்கொடுப்பான்? ஏற்கெனவே அவன் முக்கால் ரூபாய் சேர்த்து வைத்திருந்தான். அத்துடன் எதிர்பாராமல் அவனை நாடி வந்த அந்த ரூபாயையும் சேர்த்து மொத்தப் பணத்திற்கு என்னென்ன வாங்கலாம் என்ற கற்பனை யுணர்ச்சியில் மெய் மறந்தபடியே, நண்பன் சகிதம் தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் மாதவன்!



அம்மா: ஏண்டா, இந்த நேரத்திலேபோய் 'நான் அப்பாகிட்டே ரிஸ்ட் வாட்ச் வாங்கப் பணம் கேட்கப் போகிறேன்' என்கிருயே! அதுக்கு ஒரு நேரங்காலம் தெரியவேண்டாமா?

பையன்: அந்த நேரங்காலம் தெரிகிறதுக்குத்தானே இப்பொழுது நான் 'ரிஸ்ட் வாட்ச்' வாங்கித்தரச் சொல்லப்போகிறேன்.

—என். தேவாம்சம்

* * *

அன்று மாலை பள்ளிக்கூடம் விட்டதும் வெளியே வந்தான், மாதவன். அவனுடன் கைகோத்தபடியே வெளி வந்த கோபாலன், "மாதவா! தயவுசெய்து என் புத்தகப் பையை வைத்துக் கொண்டு இங்கேயே நின்று கொண்டிரு! ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன், என் அம்மாவுக்கு!" என்று

மாதவனிடம் கூறித் தன் புத்தகப் பையை அவனிடம் கொடுத்துவிட்டுப் பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றான்.

'கோபாலன் வரும்வரை கால்கள் கடுக்க நின்றுகொண்டிருப்பானேன்?' என்று எண்ணிய மாதவன், பள்ளிக்கூடத்துச் சுற்றுச் சுவருக்கு அருகேயிருந்த அரசமரத்தின் அடியில் கிடந்த கல்லின்மேல் உட்கார்ந்துகொண்டான், புத்தகப் பைகளுடன். தன்னுடைய சட்டைப் பையில் ஒன்றே முக்கால் ரூபாய் இருக்கும் பெருமையில் மாதவனுடைய வாயிலிருந்து என்றுமில்லாதபடி பாட்டுக்கூடக் கிளம்பியது!

தன் அருகில் பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான், மாதவன். பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் வழக்கமாக உட்கார்ந்து கடலை வியாபாரம் செய்யும் முத்தம்மாவும், இன்னொரு ஸ்திரீயும்தான் அங்கு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவல் மாதவனின் உள்ளத்தில் எழவில்லை. என்றாலும், அவர்களுடைய சம்பாஷணை மாதவனின் செவிகளுக்குத் தெளிவாகக் கேட்கத்தான் செய்தது.

"ஏன் முத்தம்மா, மணி ஐந்தாகி விட்டதே! தினமும் நாலரை மணிக் கெல்லாம் கடையைக் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்படத் தயாராகி விடுவாயே! இன்றைக்கு ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிறாய்?"

"என்னவோ, பிச்சம்மா! இன்றைக்குப் படுக்கையிலிருந்து விழித்தெழுந்ததும் யாருடைய முகத்தில் விழித்தேனோ, தெரியவில்லை! என்றைக்கும் போல் இன்றைக்கு வேர்க் கடலை விற்கவேயில்லை! காலை பத்து மணியிலிருந்து இதுவரை இரண்டு அணுவுக்குத்தான் வேர்க் கடலை விற்பனையாகி யிருக்கிறது. கடவுள் என்னைச் சோதனை செய்கிறார்!"

"என்றைக்குத்தான் நமக்கெல்லாம் நல்ல காலம் வருமோ, தெரியவில்லை!... உம்... அதுசரி; உன் மூத்த பெண் கமலத்திற்கு உடம்பு சரியில்லை என்று நேற்றுச் சொன்னாயே; இப்பொழுது எப்படி இருக்கிறது? கொஞ்சமாவது தேவலையா?"

"ஜுரம் கொஞ்சமாவது தணிந்திருந்தால்தான் எவ்வளவோ தேவலையே! நேற்றைவிட இன்று காய்ச்சலின் தீவிரம் அதிகமாக அல்லவா ஆகி இருக்கிறது? என் வீட்டுக்காரர் வேறு இந்தச்

சமயம் பார்த்துக் கடன் தொல்லை பொறுக்கமுடியாமல், வேறு ஊருக்கு ஓடிவிட்டார்! கடன்காரர் தொந்தரவு ஒருபக்கம்! சோற்றுக் கவலை ஒருபக்கம்! இந்த லட்சணத்தில் கமலம் வேறு காயலாகப் படுத்துவிட்டாள்! ஜவ்வரிசி வாங்கிக் கஞ்சிவைப்பதற்குக் கூடக் கையிலே துட்டு இல்லை! இன்னும் இரண்டணாவாவது கிடைத்தால் பரவாயில்லை!"

"ஏகப்பட்ட சொத்துகளை வைத்துக்கொண்டு, அவற்றுக்கெல்லாம் வாரிசாகத் தனக்கு ஒரு பிள்ளை யில்லையே என்று ஏங்குகிற பணக்காரர்களையெல்லாம் கடவுள் கண் திறந்து பார்க்கக் காணோம்! வயிற்றுக் கச்சேரிக்குப் பக்க வாத்தியம் அடிக்கும் நம்மைப் போன்ற ஏழைகளுக்கெல்லாம் கடவுள் டஜன் கணக்கில் ஏனோ குழந்தைகளைக் கொடுத்துத் தொலைக்கிறார்!"

—மேற்படி சம்பாஷணையைக் கேட்ட மாதவனின் மனத்தில் சற்று இரக்கம் உற்பத்தியாகியது.

உடனே, எழுந்தான்; அவர்

கள் அருகே சென்றான். தன் கால்சட்டைப் பையிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்துக் கடலைக்காரியிடம் நீட்டிய படியே, "இந்த நாலணாவை வாங்கிக்கொண்டு, இரண் டணாவுக்குக் கடலை கொடு! பாக்கி இரண்டணாவைக் கொடு!" என்றான் மாதவன்.

'கால் ரூபாய் நாணயம்' என்று கூறி மாதவன் கொடுத்த நாணயம் உண்மை யில் கால்ரூபாய் நாணயமல்ல; அது எட்டணா நாணயம்! இதை மாதவன் சரியாகக் கவ னிக்காத போனாலும், கடலைக் காரியின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. ஆனாலும், அவள் மாதவனை ஏமாற்றி நால ணாவை அடையவிரும்ப வில்லை.

"என்ன தம்பி இது! எட் டணாவைக் கொடுத்துவிட்டு நாலணா என்கிறாயே! அது சரி, என்னிடம் மீதி கொடுப் பதற்கு ஆறணா இல்லையே, தம்பி? இரண்டணாத்தானே இருக்கிறது?" என்றாள், கட லைக்காரி. உடனே, வியப்புடன் தான் கொடுத்த நாணயத் தைப் பார்த்தான், மாதவன். பிறகு, கடலைக்காரியை நிமிர்ந்து பார்த்தான்.

'கேவலம், மிகவும் ஏழை யான கடலைக்காரியிடம் காணப்படும் நாணயம்கூட நம்மிடம் அஸ்தமித்துப் போய்விட்டதே! காய்ச்ச லாய்க் கிடக்கும் மகளுக்குக் கஞ்சி காய்ச்ச வழியில்லையே என்று ஏங்கும் நிலையில் இருக் கிறாள், இந்தக் கடலைக்காரி. ஆனாலும், அவள் அக்கிரமக் காசுக்கு ஆசைப்பட வில்லை! ஆனால், நல்ல நிலையிலுள்ள பெற்றோரின் பிள்ளையாய்ப் பிறந்திருக்கிறேன், நான். எனக்கு மட்டும் ஆசையை அடக்க வழி தெரியவில்லை! நாணயம் என்னிடம் கொஞ்ச மும் இல்லை!... சே! எத்த கைய வெட்கக்கேடு!'—இப் படி நினைத்த மாதவன், "சரி, மீதி கொடுக்க ஆறணா இல்லா விட்டால், எட்டணா விற்குமே கடலை கொடுத்து விடு" என்று சொன்னான். மனதார வாழ்த்தியபடியே, அவனிடம் கடலையை அளந்து கொடுத்தாள், கடலைக்காரி. பிறகு, எதிர்பாராது நிகழ்ந்த பேரத்தினால் கிடைத்த எட் டணாவைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்த கோபாலனிடம் கொஞ்சம் கடலையைக் கொடுத்த மாதவன், "கோபு, இன்று மத்தியானம் கடை யில் எண்ணெய் வாங்கி னேனே இல்லையோ! அப் போது கடைக்காரப் பையன் தவறுதலாக என்னிடம் அதிக மாக ஒரு ரூபாய் கொடுத்து

விட்டான்! அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வரலாம், வா!" என்று கூறிக் கடையை நோக்கிப் புறப்பட்டான். அவனை மெளனமாகப் பின்பற்றினான், கோபாலன். செயற்கரிய செயல் ஒன்றை வெற்றிகரமாகச் செய்து முடித்த ஒரு வீரன் எப்படி மன மகிழ்ச்சி அடைவானோ, அதேபோல்தான் அப்போது மாதவனும் மகிழ்ச்சி அடைந்தான்.

'கிழவியிடம் எட்டணுவுக்குக் கடலை வாங்கினேன்; அதனால், அவளுக்கு என் உதவி கிடைத்தது. கடைக்காரருக்குச் சேர வேண்டிய ரூபாயை அவரிடமே திருப்பிக் கொடுக்கப் போகிறேன்; அதனால், என் நாணயம் காப்பாற்றப்படப் போகிறது' —இந்த இரண்டையும் நினைத்து, நினைத்து மகிழ்ச்சி அடைந்தவாறே நடந்தான், மாதவன்.

○

வெள்ளைக்காரர் வெட்கினார்!

மகாத்மா காந்தி ஒரு சமயம் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதே கப்பலில் ஒரு வெள்ளைக்காரரும் பிரயாணம் செய்தார்.

வெள்ளைக்காரருக்குக் காந்திஜியைப் பார்க்கும் போதெல்லாம் வேடிக்கையாக இருக்கும். அடிக்கடி அவர் காந்திஜியைக் கேலி செய்வார். காந்திஜி தான் பொறுமையின் இருப்பிடமாயிற்றே! அவர் கோபமே கொள்ளமாட்டார்.



ஒருநாள் அந்த வெள்ளைக்காரர் காந்திஜியைக் கேலி செய்து நீளமான பாட்டு ஒன்றை நாலைந்து காகிதங்களில் எழுதினார்; அந்தக் காகிதங்களை ஒரு குண்டூசியால் பிணைத்து, காந்திஜியிடம் எடுத்துவந்து கொடுத்துப் படித்துப்பார்க்கச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் காந்திஜியிடம் அவர் வந்து, 'நான் நேற்றுக் கொடுத்தேனே, அதில் சாரமே இல்லையா?' என்று கேட்டார்.

"ஓ! அதிலுள்ள சாரத்தைத்தான் நான் எடுத்து வைத்திருக்கிறேனே!" என்று கூறித் தனியாகப் பத்திரமாக எடுத்து வைத்திருந்த குண்டூசியைக் காட்டினார், காந்திஜி. வெள்ளைக்காரர் வெட்கித் தலை குனிந்தார்.

இளிச்சவாயன் எழுதுகிறான்!

சொற்பொழிவுக்கு அழைக்காதீர்கள்!

"யாரை?" என்று கேட்கிறீர்களா? சாட்சாத் என்னைத் தான்! இந்த இளிச்சவாயனைத் தான்!

பல மேடைகளில் பேசஅழைப்பு வந்து சமாளிக்க முடியாமல் போனதால் சொல்லவில்லை. உங்கள் சௌகரியத்துக்காகத்தான் சொன்னேன். என் பேச்சைக் கேட்டுச் சகித்துக் கொள்ளக் கூடிய பொறுமை உங்களுக்கு இருந்தால், நான் தாராளமாகப் பேசத் தயார். அப்புறம் பேசக் கூப்பிட்டு விட்டு, 'அடடா, 'அமிர்தாஞ்சனம்' கொண்டு வராமல்-போய்விட்டோமே! 'டைகர் பாம்' கொண்டு வராமல் போய்விட்டோமே!' என்று வருத்தப்படுவதில் பிரயோசனமே இல்லை!



பள்ளிக்கூடங்களில் கோடை விடுமுறைவிட்டாலும்விட்டார்கள். இந்தச் சிறுவர்கள்—அதாவது என் மதிப்புக்குரிய பள்ளித் தோழர்கள் வீட்டுக்கொரு சிறுவர் சங்கம் வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்! ஆளுக்கு ஓரணா இரண்டணாப் போட்டு, சகல சிறுவர் பத்திரிகைகளையும் வாங்கிப் படிப்பதில் முனைந்துவிட்டார்கள். அத்துடன் அவர்கள் நின்றுவிடக் கூடாதா?

ஒருநாள் எங்கள் தெருக்கோடியிலுள்ள ஒரு வீட்டு வாசலில் ஒரு சின்ன அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. அந்த அட்டையில், 'சி.மு.கழகம்' என்று எழுதியிருந்தது. 'இது என்னடா, சி. மு. கழகம்?' என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அந்த வீட்டுக்குள்ளிருந்து ஒரு சின்னப் பையன் வெளியே வந்தான். அவன் கையில் கிழிந்து கந்தல் கந்தலாய்ப்போன ஒரு சிறுவர் பத்திரிகை இருந்தது.

"என்ன தம்பி இது, சி. மு. கழகம்!" என்று அவனைக் கேட்டேன். "சிறுவர் முன்னேற்றக் கழகம்" என்று பதில் அளித்தான், அவன்.

பரவாயில்லையே! இந்தச் சங்கத்தாரை ஒரு விதத்தில் பாராட்டத்தான் வேண்டும். இதிலாவது சிக்கனத்தைக் கையாண்டு சிறுவர் முன்னேற்றக் கழகத்தை,'சி.மு. கழகம்' என்று போட்டார்களே! அவர்கள் வாழ்க! அவர்கள் சங்கம் எவ்வளவு நாட்கள் இருக்கின்றதோ அதுவரையில் நீடூழி வாழ்க!

இரண்டு நாட்கள் கழிந்தன. இரண்டு மூன்று பையன்கள் என் வீட்டின்மேல் படையெடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

வெளியே திண்ணைமேல் உட்கார்ந்திருந்த எங்கள் தாத்தா அவர்களை நோக்கி "யார் வேண்டும்?" என்று கேட்டார்.

அதில் ஒரு பையன் தன்னுடன் வந்திருந்த இன்னொருவன் தோளில் இடித்து, "நீதான் சொல்லுடா!" என்றான்.

அவனோ, "நீயே சொல்லுடா" என்று கொஞ்சம் பின்வாங்கி நகர்ந்து விட்டான். கடைசியில் ஒருவரும் விஷயத்தைச் சொல்லவில்லை.

பொறுமை இழந்த என் தாத்தாவோ "டேய், இளிச்சவாயா! இங்கே வந்து இவர்கள் யார் என்று பார்" என்று என்னைக் கூப்பிட்டார்.

நான் வெளியே வந்து பார்த்தேன். எனக்கு முன்பின் தெரியாத சில சிறுவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக்கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா, பத்திரிகைகளில் ஒருத்தன் 'இளிச்சவாயன்' என்று எழுதுகிறானே, அவனாக இருக்குமோ?" என்று ஒருவன் தன் பக்கத்திலிருந்தவனைப் பார்த்துக் கேட்டான்.

"சே, சே! அந்த மடையனாக இருக்காதுடா" என்றான், இன்னொருவன்.

அவனுக்கு என் பெயரில் என்ன வெறுப்போ அதை ஆண்டவனே அறிவார்!



இந்தச் சமயத்தில் எங்கள் தாத்தா சும்மா இருக்கக்கூடாதா?

"ஆமாம், ஆமாம்! நீங்கள் சொன்ன அந்த மடப் பயல்தான் இந்த இளிச்சவாயன்" என்றார்.

சேச்சே! இந்தத் தாத்தாவுக்குக் கொஞ்சம்கூட இங்கிதம் தெரியவில்லை. இப்படியா நாலு பேர் எதிரில் என்னை அவமானப்படுத்துவது!

"மன்னிக்கணும். நீதான் அந்த இளிச்சவாயன் என்று தெரியாது" என்று பல்லைக் காட்டினான், அந்த 'அவசரக் குடுக்கை'.

"சரி, சரி. என்ன சமாசாரம்? எதற்கு வந்தீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"நாங்கள் ஒரு சங்கம் ஆரம்பித்திருக்கிறோம்........" என்று சொல்லிவிட்டு ஒருவன் நிறுத்தினான். உடனே பக்கத்திலிருந்த

பையன், பெயர் “சிறுவர் முன்னேற்றக் கழகம்......”

“சிறுவர்களுக்காக......”

“டேய், அளக்காமல் விஷயத்தைமட்டும் சொல்......”

“எங்கள் கழகத்தில் உன்னை......”

“இல்லை, உங்களை......”

“ஓர் அங்கத்தினராகச் சேர்க்கலாம் என்று வந்தோம்......”

“இப்பொழுது அந்த எண்ணத்தை விட்டு விட்டோம்......”

“ஏன் என்றால், பிரபல எழுத்தாளர் இளிச்சவாயன் எங்கள் கழகத்தில் இருப்பது எங்களுக்குப் பெருமை அல்லவா......”



“அதனால் உன்னை—இல்லை உங்களை......”

“எங்கள் கழகத்தின் கௌரவ அங்கத்தினராகச்சேர்த்துக்கொண்டோம். சந்தா எதுவும் கொடுக்க வேண்டாம்”— மூன்று பேரும் ஆளுக்குக் கொஞ்சமாக விஷயத்தைச் சொல்லி முடித்தார்கள்.

அதற்குப் பிறகு நான் அந்தக் கழகத்திற்கு விஜயம் செய்த கதையெல்லாம் வேண்டாம். ஒருநாள் அந்தக் கழகத்தின் தலைவர், “இளிச்சவாயா, அடுத்த ஞாயிற்றுக்கிழமை நம் சங்கத்தில் ஒரு கூட்டம் போடப்போகிறோம். அதில் நீயும் பேசவேண்டும் என்று சொன்னார். தலைவர் அந்தஸ்தில் இருப்பதால் அந்தப் பையனை அவன் இவன் என்று சொல்லாமல் கௌரவமாகவே சொல்கிறேன்.

“ஐயையோ! வேண்டாம். நான் பேசவில்லை” என்றேன், நான்.

“ஒன்றும் பிரமாதமில்லை. நீ கட்டாயம் பேசித்தான் ஆகணும்.”

அதற்குமேல் மறுத்தால், அந்தப் பையன் அடித்துவிடுவான் போலிருந்தது. ‘சரி’ என்று ஒப்புக்கொண்டேன்,

‘பேசப் போனாயா? சாகப் போனாயா?’ என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை போவதற்காக என்னை நான் தயார் செய்துகொண்டேன். ‘பேசுவது எப்படி?’ ‘சிறந்த பேச்சாளனாவது எப்படி?’ ‘மேடைப் பேச்சு’ ‘பேச்சுக் கலை’—இந்தப் புத்தகங்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கி ஒரு தடவைக்கு இரு தடவையாகப் படித்தேன்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. சிறுவர் முன்னேற்றக் கழகத்தார் என்னை விடவில்லை, வீட்டிற்கே வந்துவிட்டார்கள். குண்டுக் கட்டாகத் தூக்கிக்கொண்டு போகாததுதான் பாக்கி!

சி. மு. கழகத்திற்கு விஜயம் செய்தேன். மேஜை நாற்காலியெல்லாம் போடப்பட்டிருந்தன. மேஜைமேல் சோடாப் புட்டியும் இருந்தது. ‘பரவாயில்லை, கூட்டத்தைப் பார்த்து மயக்கம் வந்து

விட்டால் முதல் சிகிச்சைக்காக 'சோடா' வெல்லாம் தயாராக வாங்கி வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டேன்.

ஐந்து மணிக்குக் கூட்டம் ஆரம்பமாக வேண்டும். பொது ஜனங்கள் ஒருவரைக் கூடக் காணோம்! நான், தலைவர், சி. மு. க. காரியதரிசி, இரண்டு மூன்று சி. மு. க. அங்கத்தினர்கள். இவ்வளவு பேர்களே அங்கு இருந்தோம்.

சோடா வாங்கி வைத்த அளவுக்காவது கூட்டம் கூட வேண்டாமா? 'சேச்சே! இங்கே பேச ஒப்புக்கொண்டதே நம் முட்டாள் தனம்' என்று நினைத்தேன். 'கூட்டமே வராமல், நான் பேசுவதற்கும் அவசியமே இல்லாமல் இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!' என்றுகூட நினைத்தேன்.



'கொஞ்ச நேரம் கழித்து சி. மு. க. தலைவர், கழகக் காரியதரிசியிடம் காதோடு காது வைத்தாற் போல் மெதுவாக ஏதோ சொன்னார். உடனே, கழகக் காரியதரிசி ஒரு பலகையில் என்னவோ எழுதி எடுத்துக்கொண்டு போய் வெளியே மாட்டினான்.

அந்தப் பலகை மாட்டிய கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சிறுவர்களின் கூட்டம் நிறைந்து விட்டது. ஒரே கூட்டம்! வீடே நிறைந்துவிட்டது! சிலர் உட்காருவதற்குக்கூட இடமில்லாமல் நின்றுகொண்டிருந்தார்கள்.

தலைவர் பேசினார். என்னைப் புகழ்ந்தார். பிறகு என்னைப் பேசச் சொன்னார். நான் எழுந்தேன். கூட்டத்தைப் பார்த்தேன்; கை, கால்கள் 'கட்டுக் கடகட கட்டுக் கட கட' என்று அடிக்க ஆரம்பித்துவிட்டன. மெல்லக் கனைத்துக்கொண்டேன். உருப்போட்டதை அப்படியே 'வாந்தி' எடுத்தேன்.

'பேரன்பு மிக்க தலைவர் அவர்களே! சகோதரர்களே! சகோதரிகளே! — (சிரிப்பு) சகோதரிகள் யாரும் இல்லையா? பரவாயில்லை''

காரியதரிசி சோடாவை உடைத்து நீட்டினார். ஒரு வாய் குடித்துவிட்டு மறுபடியும் ஆரம்பித்தேன்.

''எனக்கு முன்பு பேசிய பலர் ...(சிரிப்பு) ஓஹோ! நான்தான் முதலாவதாகப் பேசுகிறேனா? எனக்குப் பின்னால் பலர் பேச இருக்கிறார்கள்...இல்லையா...? ஆமாம் ... வந்து ...'' — அதற்கு மேல் என்ன பேசவேண்டும் என்ற விஷயம் 'சட்' டென்று ஞாபகத்திற்கு வரவில்லை.

ஒரே கைதட்டல். 'பரவாயில்லையே! நாம் பேசுவதைக் கேட்டு ரசித்துக் கைதட்டுகிறார்களே!' என்று நினைத்தேன். அப்புறம் எவ்வளவு நேரம், 'ஆகையினால்...அதனால்' என்பதிலேயே சுழன்று

கொண்டிருந்தேன் என்பது எனக்குத் தெரியாது.

நான் கண்விழித்துப்பார்க்கும் போது ஒரு படுக்கையில் இருந்தேன். பேச்சைக் கேட்பதற்காக வந்த நாலைந்து சிறுவர்கள் சி. மு. க. தலைவரிடமும், காரியதரிசியிடமும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

"என்ன இது ஏமாற்றுவேலை? அயோக்கியப் பயல்களா, பேச்சு முடிந்ததும் மிட்டாய் தரப்படும் என்று 'போர்'டிலே எழுதி மாட்டியிருந்தீர்களே! எங்கே மிட்டாய்?" என்று சத்தம் போட்டார்கள்.

"ஆமாம், இளிச்சவாயனின் பேச்சு முடிந்ததும் மிட்டாய் தருவதாகத்தானே போட்டிருந்தோம்? பேச்சு இன்னும் முடியவில்லையே! இளிச்சவாயனின் மயக்கம் தெளிந்து மறுபடியும் பேசி முடிக்கட்டும். கடைசியில், மிட்டாய் தருகிறோம்" என்றார், சி. மு. க. தலைவர். இந்தப் பதிலைக்கேட்டதும், அவர்கள் அங்கு ஒரு கணம்கூட நிற்கவில்லை. என் பேச்சைக் கேட்க அவர்கள் தயாராக இல்லாததால் மிட்டாயைக்கூடப் பொருட்படுத்தாமல் எடுத்தார்கள், ஓட்டம்!

அன்றையத் தினத்திலிருந்து என்னைப் பேசச் சொல்லி 'விஷயமறிந்த வட்டாரத்தினர்' அழைக்க மாட்டார்கள். நீங்களும் அழைக்காதீர்கள்! அழைத்து என் மானத்தை வாங்காதீர்கள்! தலைவலியையும் வரவழைத்துக் கொள்ளாதீர்கள்!



படக் குறிப்பு :—எஸ். சங்கரநாராயணன்.

பளிங்கு மண்டபம்

நெ. சி. தெய்வசிகாமணி

11-சுண்டல் வியாபாரம்

குடிசைக்குள் நுழைந்ததும், "பாட்டி, பாட்டி! என்ன பாட்டி, ஏதோ சப்தம் கேட்டதே! என்ன ஆபத்து!" என்று கேட்டுக் கொண்டே வெங்குப் பாட்டியை நெருங்கினான், மாதவன். அப்போது பாட்டியைச் சுற்றிலும் மேலே அடுக்கியிருந்த பாத்திரங்கள் விழுந்து கிடந்தன.

"ஒன்றுமில்லையடா, குழந்தை! குழந்தைகள் வந்திருக்கிறீர்களே, ஏதோ இருப்பதைக் கொண்டு சாதம் சமைத்துப் போடலாம் என்ற எண்ணத்துடன் சாதமெல்லாம் சமைத்து விட்டேன். அப்புறமாக ஊறுகாய் ஜாடியிலிருந்து கொஞ்சம் ஊறுகாய் எடுப்போம் என்ற எண்ணத்துடன் ஊறுகாய் ஜாடியின்மேலிருந்த மூடியைக் கழற்றினேன். அப்போது ஒரு தேள் கொடுக்கை நீட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. உடனே, பதற்றத்தில் ஊறுகாய் ஜாடியின் மூடி பக்கத்திலிருந்த பாத்திரங்களின் மேல் விழுந்துவிட்டது. வேறு ஒன்றுமில்லை" என்றாள், வெங்குப் பாட்டி.

"தள்ளுபாட்டி, அந்தத் தேளைச் சும்மா விடக்கூடாது" என்று கூறிக்கொண்டே கீழே கிடந்த பாத்திரங்களை விலக்கிக் கொண்டு தேடினான், மாதவன். மனோஹரனும் கூடவே தேடினான்.

"ஆ! அதோ பார், அந்த மூலையில்!" என்று கூறி மூலையில் நின்ற தேளைச் சுட்டிக் காட்டினான், மனோஹர். ஆனாலும், அவனுக்குத் தேளை நெருங்கப் பயம்!

மாதவன் தேளைப் பார்த்ததும், தடியை எடுத்துக்கொண்டோ அல்லது கனத்த சாமான் எதையும் எடுத்துக்கொண்டோ அதை அடிக்கப் போகவில்லை. பேசாமல் வெறும் கையுடன் தேளின் அருகே

சென்றான். தூக்கிக் கொண்டிருந்த தேளின் கொடுக்கை 'லபக்' கென்று விரல்களால் பிடித்தான். பிடித்த படியே அதைச் சுழற்ற ஆரம்பித்தான். மனோஹரனும், பாட்டியும் பயத்துடனும், வியப்புடனும் அவனைப் பார்த்தனர்.

"தம்பி, வேண்டாமப்பா. அதைத் தடியால் அடித்துக் கொல்வதை விட்டுவிட்டு, என் இந்த வேலையெல்லாம்?" என்றாள் பாட்டி.

"பேசாமல் இரு பாட்டி. என்னைத் தேள் ஒன்றும் செய்யாது. கொடுக்கால்தானே அது நம்மைக் கொட்டுகிறது. அதுதான் என் கைக்குள்ளே சிக்கிக் கொண்டிருக்கிறதே!" என்றான்.

"சரி சரி, விளையாட்டு வேண்டாம். நேரமாகிறது. சாப்பிட வேண்டாமா? தேளை அடித்துக்

கொன்று போட்டுவிட்டு வா; சாப்பிடலாம்'' என்றான், மனோஹரன்.

உடனே மாதவன், ''மனோஹர், நான் ஒன்று சொல்லுகிறேன். அதன்படி செய்வாயா? கொஞ்சம் நெருப்பு எடுத்துவா. அதைச் சுற்றிலும் வட்டமாக வைத்து நடுவே தேளை விட்டுப் பார்ப்போம்'' என்றான்.

''என், அப்படிச் செய்தால் தேள் என்ன செய்யுமாம்?''

''என்ன செய்யுமா? பாரேன்.''

மனோஹரன் நெருப்பு எடுத்து வந்து வட்டமாக வைத்தான். நடுவே மாதவன் தேளை வைத்தான். தேள் தப்பி ஓடப்பார்த்தது. சுற்றிலும் நெருப்பு இருந்ததால், அது தன் கொடுக்கால் தன்னைத் தானே கொட்டிக் கொண்டது. இப்படிப் பல தடவைகள் கொட்டிக்கொண்டு அது இறந்துவிட்டது. அதாவது தற்கொலை செய்துகொண்டு விட்டது!

உடனே மாதவன், ''மனோஹர், பார்த்தாயா? நானு இதைக்கொன்றேன்! அதுவே தற்கொலை செய்துகொண்டு விட்டது!'' என்றான்.

''அடே! இப்படி அது செய்துகொள்ளும் என்பது உனக்கு முன்பே தெரியுமா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான், மனோஹரன்.

''ஆமாம், ஒரு புத்தகத்தில் படித்தேன்'' என்றான், மாதவன்.

பிறகு, மாதவன் தேளைத் தூக்கி வெளியில் எறிந்துவிட்டு வந்து கையைக் கழுவினான்.

அப்போது வெங்குப் பாட்டி, ''குழந்தைகளா, நீங்கள் மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள். முகம், கைகாலெல்லாம் அலம்பிக்கொண்டு வாருங்கள்; சாப்பிடலாம்'' என்றாள்.

''என்ன பாட்டி, சாப்பாடு தயாராகி விட்டதா! அதற்காகத் தானே அரிசி யெல்லாம் வாங்கி வரக் கடைத் தெருவுக்குப் போனோம்'' என்றான் மாதவன்.

நீங்கள் அரிசி வாங்கி வந்து அப்புறம் சமையல் செய்து எந்நேரத்துக்குச் சாப்பிடுவது? பாவம், முகமெல்லாம் சோர்ந்து போயிருக்கிறதே! பொய் பேசாமல் சொல். ''மத்தியானம் நீ சாப்பிடவில்லையே!'' என்று மாதவனைப் பார்த்துக் கேட்டாள், வெங்குப் பாட்டி.

''நானா? சாப்பிட்டேனே!'' என்று மழுப்பினான், மாதவன்.

''மாதவா, ஏன் பொய் பேசுகிறாய்? போலிக்கௌரவம் கூடாது என்று சொல்லிவிட்டுஇப்பொழுது நீயே பாட்டியிடம் புளுகுகிறாயே!'' என்றான், மனோஹரன்.

''உனக்குத் தெரியாது மனோஹர்! நீ சும்மா இரு! நான் பட்டினி இருந்தேன் என்றால் இந்தப் பாட்டி எவ்வளவு வருத்தப்படுவாள்? அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்!'' என்று மெதுவாகக் கூறினான், மாதவன்.

''இதோ பார், குழந்தை! இனிமேல் நீ யார், நான் யார்? என்னிடம் உண்மையைச் சொன்னால் ஒன்றும் தவறில்லை. அதற்காக அனாவசியமாகப் பொய் பேசாதே!'' என்றாள், வெங்குப் பாட்டி.

''அப்பொழுது அவசியமானால் மட்டும் பொய் பேச வேண்டுமா?''

என்று பாட்டியைத் திருப்பிக் கேட்டான், மாதவன்.

"தலை போகிற காரியமாயிருந்தாலும் பொய் பேசாதே! உண்மைக்கும் சத்தியத்திற்கும்தான் மதிப்பு அதிகம்; சோதனையும் அதிகம்தான். சரி, சரி. நேரமாகிவிட்டது. சாப்பிட வாருங்கள்" என்று இருவரையும் அழைத்துச் சென்று சாப்பாடு போட்டாள், வெங்குப் பாட்டி.

இலையில் சுடச்சுடச் சாதத்தைப் பரிமாறி அதன்மேல் சாம்பாரை ஊற்றினாள். அந்தச் சாம்பாரின் மணம் மூக்கைத் துளைத்தது. தொட்டுக் கொள்ள ஊறுகாய் எடுத்து வந்து இருவர் இலைகளிலும் வைத்தாள், வெங்குப் பாட்டி.

சாப்பிட்டுக் கொண்டேயிருந்த மாதவன் பாட்டியை நோக்கி, "பாட்டி, அந்தப் பையிலிருக்கிற பகோடா பொட்டலத்தை எடுத்துப் பிரித்து, மூன்று பாகங்களாக்கி உனக்கு ஒரு பங்கை வைத்துக் கொண்டு, மீதியை எங்கள் இரண்டு பேருக்கும் வை" என்றான்.

வெங்குப் பாட்டியும், மாதவன் வாங்கி வந்திருந்த பகோடா பொட்டலத்தைப் பிரித்து இரண்டு பேருக்கும் ஆளுக்குப் பாதியாக வைத்து விட்டாள்.

"என்ன பாட்டி இது! உனக்கு வைத்துக்கொள்ள வில்லையே! எங்கள் இரண்டு பேருக்குமே வைத்துவிட்டாயே!" என்றான், மாதவன்.

"குழந்தைகள் சாப்பிடுவதை விட்டுவிட்டு எனக்கெதற்கு அது?" என்று சொன்னாள், வெங்குப் பாட்டி.

சாப்பிட்டு முடிந்ததும் மாதவனும் மனோஹரனும் அங்கேயே படுத்துக்கொண்டனர். மனோஹரன் படுத்தவுடனேயே தூங்கிவிட்டான். மாதவன் மட்டும் வெகுநேரம் வரை தூங்கவேயில்லை. கண்களை மூடிக் கொண்டு என்னென்னவோ திட்டங்கள் போட்டுக்கொண்டிருந்தான்.

'வால் போஸ்டர்'களை ஒட்டித் 'துண்டு நோட்டீஸ்'களையும் விநியோகித்துவிட்டால், மீதிக் கூலி ரூபாய் இரண்டரை கிடைக்கும். அதை என்ன செய்யலாம்? 'வீட்டுக்குத் தேவையான சாமான்கள் வாங்கிப் போட்டு, மீதியுள்ள பணத்திற்கு அரைப் படி கடலை வாங்கிப் பாட்டியிடம் கொடுத்துச் சுண்டல் செய்து கொடுக்கச் சொல்லவேண்டும். பிறகு அந்தச் சுண்டலை எடுத்துச் சென்று விற்று வரவேண்டும்!'—இந்த முடிவுக்கு வந்ததும் மாதவன் தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக மனோஹரன் துண்டு 'நோட்டீஸ்'களை எடுத்துக் கொண்டான்; மாதவன் 'வால்போஸ்டர்'களையும் கூழ் காய்ச்சிய வாளியையும் எடுத்துக்கொண்டான். பிறகு புழக்கடைக்குப் போனான். அங்கிருந்த ஏணியை எடுத்துக் கொண்டு, "பாட்டி, போய் வருகிறோம். ஜாக்கிரதையாக இரு. சீக்கிரமாகவே வந்துவிடுகிறோம்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

மாதவன் 'வால்போஸ்டர்'களைத் தெருச் சுவர்களில் ஒட்டினான். மனோஹர் துண்டு நோட்டீஸ்களை வீதியில் போவோர் வருவோரிட

மெல்லாம் கொடுத்தான். சுறு சுறுப்பாக வேலை பார்த்ததால், மூன்று மணிக்குள் வேலை முடிந்து விட்டது.

பிறகு, மனோஹரனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மாதவன் மட்டும் நேராக சங்கத்துக்குப் போனான். மீதம் வரவேண்டிய கூலியைப் பெற்றுக்கொண்டு கடைவீதிக்குச் சென்றான். வாங்க வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அவன் தோளிலும் கையிலும் சிறு சிறு மூட்டைகள் இருந்தன.

"என்ன மாதவா! என்ன இது, மூட்டைகளெல்லாம் பலமாக இருக்கிறதே!" என்று சிரித்த படியே கேட்டாள், வெங்குப் பாட்டி.

"இதுவா, வீட்டுக்கு வேண்டிய அரிசி, உப்பு, புளி, மிளகாய் இவைகள். இதோ இந்த மூட்டை யில் என்ன இருக்கிறது, தெரி யுமா பாட்டி?"

"எனக்கென்ன ஜோசியமா தெரியும்?" என்றாள், வெங்குப் பாட்டி.

"கடலை!"

"கடலையா! என்ன கடலை? வேர்க்கடலையா, இல்லை......" என்று இழுத்தாள் வெங்குப்பாட்டி.

"வேர்க்கடலை இல்லை பாட்டி. சுண்டல் கடலை! இதோ பார்" என்று சொல்லிக்கொண்டே மூட்டையைப் பிரித்துக் கடலை யைக் காட்டினான், மாதவன்.

"இது எதுக்கு?" என்று கேட் டாள், வெங்குப் பாட்டி.

"சுண்டல் செய்து விற்பதற் குத்தான் வாங்கி வந்தேன். நீ இன்றைக்குச் சுண்டல் செய்து கொடு. பக்கத்து ஊரிலே ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிப்ப தற்காகக் கட்டிடம் கட்டுகிறார்கள். அங்கே கொண்டுபோய் விற்று வருகிறேன்" என்றான், மாதவன்.

மாதவனுடைய சொற்படியே பாட்டியும் சுண்டல் செய்து அவ னிடம் கொடுத்தாள். அவனும் சாப்பிட்டானதும் சுண்டல் கூடையை எடுத்துக்கொண்டு கிளம் பினான். அந்தச் சமயம் பார்த்து

ருசியை அறிவது நாக்கு அல்ல!

உன் நண்பனின் கண்கள் இரண்டையும் கட்டிவிடு. அவ னுடைய நாக்கை நன்றாக வெளியே நீட்டச் சொல். நாக் கின் நுனியில் கொஞ்சம் மிள காய்ப் பொடியையோ அல்லது சர்க்கரையையோ வை. அப் போது அவன் நாக்கில் நீ வைத் திருப்பது என்ன என்பதை அவ னால் அறிய முடியுமா?

முடியாது!

என்? நாக்குமட்டும் தனியாகச் சுவையை அறிய முடியாது. உமிழ் நீரும் கூடச் சேர்ந்தால் தான் அறிய முடியும்!

மனோஹரன் அவனிடம் ஓடிவந்து, "என்ன மாதவா, என்னை மட்டும் தனியாக விட்டுச் செல்கிறாயே! நானும் வருகிறேனே!" என்றான்.

"வேண்டாம். நீ இங்கேயே இரு. ஒரு முக்கியமான சேதி சொல்ல மறந்து விட்டேனே! உனக்கும் ஒரு வேலை பார்த்திருக்கிறேன்" என்று மாதவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மனோஹரன் குறுக்கிட்டு, "எங்கே, எங்கே? எவ்வளவு சம்பளம் தருவார்கள்?" என்று கேட்டான்.

"வேறு எங்கேயும் இல்லை. சொந்த வேலைதான். அதிலும் உனக்குத் தகுந்த வேலைதான் அது! நீ எவ்வளவுக் கெவ்வளவு கஷ்டப்படுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு லாபம் அதிகம் கிடைக்கும்" என்றான், மாதவன்.

"அப்படியா? அது என்ன வேலை?" என்றான், மனோஹரன்.

"வெளியூர்களிலிருந்து வரும் சகல பத்திரிகைகளையும் வரவழைத்து இந்த ஊரில் விற்பனை செய்யலாமென நினைக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?" என்றான், மாதவன்.

"செய்யலாம். இந்த ஊரில் ஒரு பத்திரிகை விற்பனையாளரைக் கூடக்காணோமே! இந்த ஊர் ஜனங்கள் ஏதாவது பத்திரிகையோ புத்தகமோ வாங்கவேண்டி இருந்தால் பட்டணத்திலிருந்துதான் எல்லாப் பத்திரிகைகளையும் வாங்கி வருகிறார்கள். நாமே வரவழைத்து இங்கே விற்பனை செய்யலாம். ஆனால், முன் பணம் கட்டப் பணம் வேண்டுமே! என்ன செய்வது?" என்று கேட்டான், மனோஹரன்.

"அதைப் பற்றி நீ கவலைப் படாதே! நான் எப்படியாவது சமாளித்து உனக்குப் பணம் தருகிறேன். நீ உன் பேரிலேயே பத்திரிகைகளை வரவழைத்து விற்பனை செய்" என்றான், மாதவன்.

"சரி" என்று தலையாட்டினான், மனோஹரன்.

மாதவன் சுண்டல் கூடையை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். அவனை வழியனுப்புவதற்காக அவனுடன் வெளியே வந்தான், மனோஹரன்.

"மனோஹர், நான் போய் வரட்டுமா? பத்திரமாக இரு! எங்கேயும் போய்விடாதே!" என்று சொல்லிக்கொண்டே வெளியே போகத் தொடங்கினான்.

அந்தச்சமயம் பார்த்து 'மாதவா! மாதவா!' என்று மனோஹர் கூறிக்கொண்டே அவன் சட்டையின் பின்புறத்தைப் பிடித்துத் தரதரவென்று குடிசைக்குள் இழுத்தான்!

மாதவன் எதிர்பாராது நேர்ந்த இந்தச் சம்பவத்தால் பெரிதும் திடுக்கிட்டுப் போய்விட்டான்.

(தொடரும்)

★

அட்டைப் படம்

தொடர் கதையில் ஒரு காட்சி

கலைவாணியின் கருணை

ரா. லக்ஷ்மி

"மாமி, எனக்குக் கணக்குப் புத்தகம் வாங்க வேண்டும். இரண்டு ரூபாய் தருகிறீர்களா?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டாள் வனஜா.

"இரண்டு ரூபாயா! இப்பொழுது ஒரு பைசாக்கூடக் கிடையாது. போய்விட்டு வா" என்று எரிந்து விழுந்தாள், வனஜாவின் மாமி.

"இல்லை மாமி! நாளைக்கு எங்கள் பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வரப்போகிறார்......"

"அதற்கு மஹாராணி சிங்காரித்துக்கொண்டு, எல்லாப் புத்தகங்களையும் அடுக்கிக் கொண்டு போக வேண்டுமாக்கும்! சீ நாயே! ரூபாய் இல்லையென்றால் ஏன் தொந்தரவு செய்கிறாய்?"

"என்ன மாமி, இப்பொழுது கூட ரேணுகாவைக் கடைக்கு அழைத்துக்கொண்டு போவதாகச் சொன்னீர்களே! பணம் இல்லாமலா கடைக்குப் போகப் போகிறீர்கள்?" என்று வனஜா கேட்டுவிட்டாள்.

அவ்வளவுதான்! மறுகணம் வனஜாவின் பிஞ்சுக் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது. "சீ, மூதேவி! எதிர்த்து வேறு பேசுகிறாய்? அவ்வளவு தூரத்திற்குத் தைரியம் வந்து விட்டதா? ஊம்..." என்று உறுமினாள், வனஜாவின் 'அருமை' மாமி!

வனஜா வலி பொறுக்க முடியாமல் கன்னத்தைப் பிடித்துக் கொண்டே உள்ளே ஓடிவிட்டாள்.

ஏதோ இரைச்சல் கேட்கவே வனஜாவின் அம்மா சமையல் அறையிலிருந்து எட்டிப் பார்த்தாள். வனஜா அழுதுகொண்டு வருவதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். "வனஜா, ஏனம்மா அழுகிறாய்?" என்று அன்புடன் மகளை அணைத்துக் கொண்டு கேட்டாள்.

வனஜா நடந்ததைக் கூறியதும் வனஜாவின் அம்மா விசாலாட்சி ஒரு சோகச் சிரிப்புச் சிரித்தாள். "சீ பைத்தியமே! இதற்காகவா அழுவார்கள்? மாமியின் சுபாவம் உனக்குத்

தெரியாததா என்ன ?" என்று கேட்டாள்.

அம்மாவின் சமாதானம் வனஜாவுக்குப் பிடிக்கவில்லை. "போ அம்மா ! நீ எப்பொழுதும் இப்படித்தான் சொல்லுகிருய். ரேணுகாவிற்குமட்டும் மாமி கேட்டதெல்லாம் வாங்கித் தருகிருளே ? நீயும் என் அம்மா தானே ! நீ ஏன் எனக்கு ஒன்றும் வாங்கித் தருவதில்லை ?" என்று கேட்டாள்.

வனஜா இப்படிக் கேட்டதும் அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஆருய்ப் பெருகியது. "அம்மா, அம்மா! ஏனம்மா அழுகிருய் ? நான் என்ன சொன்னேன் ?" என்று அம்மாவின் கண்ணீரைத் தன் சின்னப் பாவாடையால் துடைத்தாள், வனஜா.

"வனஜா ! உனக்குக் கணக்குப் புத்தகம்தானே வேண்டும்? சரஸ்வதி தேவியை வேண்டிக் கொள். உனக்கு நிச்சயமாகக் கிடைத்துவிடும்" என்று கூறிளுள் அம்மா.

'சரி அம்மா' என்று சொல்லி விட்டு வனஜா பூஜை அறைக்குச் சென்ருள். அங்கே கலைவாணியின் படத்திற்கு எதிரே மண்டியிட்டு அமர்ந்தாள்.

வனஜா போவதையே பார்த்துக்கொண்டு நின்ருள், அம்மா.

* * *

வனஜா பிறக்கும் பொழுது மிகுந்த செல்வமுள்ளவளாகத்தான் பிறந்தாள். வனஜாவின் அப்பா வேணுகோபால் பெரிய உத்தியோகத்தில் இருந்தார். மகன் பாலுவிற்குப் பிறகு வெகுநாட்கள் கழித்துப் பிறந்த தம் ஒரே மகள் வனஜாவிடம் அவருக்கு அளவற்ற அன்பு. வேணுகோபாலும், விசாலாட்சியும் போட்டி போட்டுக்கொண்டு அவளைச் சீராட்டினர். அவள் கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தனர்.

வனஜாவிற்கு வயது ஐந்து. அவளை 'கான்வெண்ட்'டிலே சேர்த்திருந்தார்கள். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்க்கைப் போக்கையே மாற்றிய அச்சம்பவம் நிகழ்ந்தது.

வனஜாவின் அண்ணு பாலு எப்பொழுதுமே ஒரு மாதிரி. பி. ஏ. படித்துவிட்டு வீட்டி



மாமா: (பெருமையாக) டேய் மாணிக்கம், நான் வாங்கிக்கொடுத்த சைக்கிள் எப்படி இருக்கிறது ? ஜோராக இல்லையா ?

மாணிக்கம்: ஆஹா! அதில் 'பெல்' லைத்தவிர பாக்கி யெல்லாம் சத்தம் செய்கிறது, மாமா !

லேயே உட்கார்ந்திருந்தான். அவனுக்கு இல்லாத துஷ்ட சுபாவம் கிடையாது. அவனுக்கென்றே பல நண்பர்கள் ஏற்பட்டிருந்தனர். வேணுகோபாலிற்கு முதலிலிருந்தே பாலுவின் போக்கு ஆத்திரத்தைத்தான் மூட்டியது.

அன்று காலையிலிருந்தே பாலு வீட்டிற்கு வரவில்லை. போதும்போதாததற்குப்பாலுவுக்கு வெளியிலே நூறுரூபாய் வரையிலும் கடன் வேறு இருக்கிறது என்று அன்றுதான் கேள்விப்பட்டார். எல்லாம் சேர்ந்து அவருக்கு அடக்க முடியாத கோபத்தை உண்டு பண்ணின.

பாலு இரவு வீட்டிற்கு வந்ததும் பிடித்துக் கொண்டார். "இன்னும் எவ்வளவு நாள் தான் வேலை வெட்டி யில்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருப்பது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று வேணுகோபால் ஆரம்பித்த வாக்குவாதம் கடைசியில் கைகலப்பிலே முடிந்தது. சண்டையின் முடிவில் பாலு வீட்டை விட்டு வெளியேறினான்.

வேணுகோபால், பாலு சீக்கிரமே வீட்டிற்குத் திரும்பி விடுவான் என்றுதான் நினைத்தார். ஆனால், ஒரு மாதமாகியும் அவன் திரும்பி வராமல் போகவே அவர் ஏக்கமும் கவலையும் கொண்டார். பத்திரிகைகளின்மூலம் அவன் எங்கே யிருந்தாலும் திரும்பி வந்து விடும்படி விளம்பரப் படுத்தினர். ஆனால், பாலு ஏனோ திரும்பி வரவில்லை. வேணுகோபால் அதே ஏக்கத்தில் படுத்த படுக்கையாகிக் கடைசியில் இறந்துவிட்டார்.

வேணுகோபால் நல்ல உத்தியோகத்தில் இருந்தாலும் ஆடம்பரமாகவாழ்க்கை நடத்தியதால் அவர் இறந்தபொழுது சொத்து என்று ஒன்றுமே மிஞ்சவில்லை! கடைசியில்நடுத்தெருவிலே விடப்பட்ட விசாலாட்சியையும், வனஜாவையும் வனஜாவின் மாமா தன் ஊருக்கு அழைத்துச்சென்றார்.

விசாலாட்சி வனஜாவுடன் தன் அண்ணன் வீட்டிற்குப் போனபொழுது, அவளுடைய மன்னிக்கு அவர்கள் வருகையிலே கொஞ்சம்கூட விருப்பம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். அவர்கள் வந்த மறுநாளே மாமி,வீட்டுவேலைக்காரியையும் சமையல்காரியையும் நிறுத்திவிட்டாள். வீட்டு வேலை யாவும் விசாலாட்சியின் தலையில் வந்து விழுந்தன. உழைத்து உழைத்து ஓடாகப் போனாள், விசாலாட்சி.

வனஜாவை எப்படியோ பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார், மாமா. மாமியின் பெண் தான் ரேணுகா. அவள் கேட்டதெல்லாம் தட்டாமல் வாங்கிக் கொடுத்த மாமி, வனஜாவிற்கு உடுக்க உடைகூட வாங்கித் தர மறுத்தாள். வனஜா அவர்கள் வீட்டில்ஒருவேலைக்காரப்பெண்ணைப்போல்தான் இருந்தாள். மாமா தானுண்டு, தன் வேலை

யுண்டு என்று செல்லுபவர். மாமிக்குத்தான் அந்த வீட்டிலே எல்லா அதிகாரமும்!

* * *

"கலைவாணி! ரேணுகா என்ன கேட்டாலும் மாமி வாங்கித் தருகிறளே, நான் கேட்டால்மட்டும் ஏன் வாங்கித் தருவதில்லை? நான் என்ன குற்றம் செய்தேன்? நான் நன்ருகப் படிக்கவில்லையா? பள்ளிக்கூடத்திலே என்னை மிகவும் கெட்டிக்காரி என்று சொல்லுகிருர்களே! வாணி! நான் மாமியை என்ன கேட்டேன்? ரேணுகாவைப்போல் பட்டுப் பாவாடை கேட்டேனு? பட்டுச் சொக்காய் கேட்டேனு? புத்தகம்தானே கேட்டேன்! அதற்கு என்னை நன்ருக அடித்துவிட்டாளே! வாணி! உன்னை வேண்டிக்கொண்டால் புத்தகம் கிடைக்கும் என்று அம்மா சொல்கிருளே? நிஜமாகவா?" என்று என்ன வெல்லாமோ கேட்டாள், வனஜா. அவளுடைய குழந்தை உள்ளத்தில் அம்மாவின் வார்த்தையிலும், கலைவாணியின் கருணையிலும் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. நிச்சயமாகத் தனக்குப் புத்தகம் கிடைத்து விடும் என்று நம்பினுள்.

* * *

இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவரையும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அப்பொழுது கணித வகுப்பு நடந்து கொண்டிருந்ததால் கணக்குப் புத்தகத்தில் ஒரு பக்கத்தின் எண்ணைக் கூறி, அப்பக்கத்திலிருந்து ஒரு கணக்கைப் போடும்படி சொன்னர்.

வனஜாவிடம் புத்தகம் இல்லாததால் அவள் அக்கணக்கைப் போடவில்லை. அருகிலிருந்த பெண்கள் புத்தகம் காட்ட மறுத்துவிட்டதால் அவள் அழுதுகொண்டிருந்தாள்.

ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டு வந்த இன்ஸ்பெக்டர் வனஜாவிடம் வந்ததும் அவள் தலையைக் குனிந்து அழுது கொண்டிருக்கவே, 'இவள் ஏன் அழுகிருள்?' என்று பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டார்.

அவர்கள் காரணத்தைச் சொன்னவுடன், "இதோ பார், இதற்காகவா அழுகிருய்? ஏன், புத்தகம் வாங்கவில்லை?" என்று பரிவுடன் கேட்டார்.

வனஜா பதில் சொல்லுவதற்காகத் தலையைத் தூக்கியதும் இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார். "உன்பெயர்—வனஜாதானே!" என்று திடீரென்று வினவினுர்.

வனஜா "ஆமாம்" என்று கூறியபொழுது அவருடைய வியப்பு மேலும் அதிகரித்தது. "உன் அப்பாவின் பெயர்...?" என்று கேட்டார் சந்தேகத்துடன்.

"வேணுகோபால்"

"வேணுகோபால் இந்த ஊரில்தான் இருக்கிருரா இப்பொழுது?"

"அப்பாதான் இறந்துபோய்

விட்டாரே, ஸார்!" என்றாள் வனஜா வியப்புடன்.

இதைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் பேயறைந்ததுபோல் ஆனார். "என்ன! என்ன! அப்பா இறந்து விட்டாரா?" என்று திணறினார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. சில நிமிஷ நேரங்களுக்கெல்லாம் அந்த அறையை விட்டுப் போய்விட்டார்.

வனஜா திகைத்து நின்றாள். மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

* * *

பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிய வனஜா வாசல் அறையிலே மாமாவும், அன்று பாடசாலைக்கு வந்த இன்ஸ்பெக்டரும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சர்யமுற்றாள்.

உள்ளேயிருந்து அம்மா ஓடி வந்து அவளைக் கட்டிக்கொண்டாள். "வனஜா, வனஜா! உன் அண்ணா வந்திருக்கிறான், பாரடி!" என்று அவளைப் பிடித்து இழுத்தாள்.

இன்ஸ்பெக்டர் அவளை அணைத்துக்கொண்டு, "வனஜா! என்னைத் தெரியவில்லை? நான்தான் உன் அண்ணா, பாலு! என்ன வனஜா, புத்தகம் இல்லை என்று அப்படி அழுதாயே! இதோ பார், உனக்குக் கணக்குப் புத்தகம்! இந்தப் பை நிறைய உனக்குப் பட்டுப் பாவாடைகள், சொக்காய்கள், கதைப் புத்தகங்கள் எல்லாம் இருக்கின்றன. எடுத்துக் கொள்" என்று அன்புடன் கூறினார்.

வனஜாவிற்கு ஒருகணம் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. ஆனால், மறுகணம் அவள் பூஜை அறைக்கு ஓடினாள். கலைவாணியின் படத்திற்கு எதிரே மண்டியிட்டு அமர்ந்தாள்.

"வாணீ! நீ எவ்வளவு நல்லவள்! நான் உன்னிடம் கணக்குப் புத்தகம் கேட்டேன். நீ அதை மட்டுமா எனக்களித்தாய்? அருமை அண்ணாவையும், நீடித்த ஆனந்தத்தையும்கூட அளித்துவிட்டாயே! வாணீ! உன் கருணையே கருணை" என்று கூறி ஆனந்த வணக்கம் செலுத்தினாள். ஆனந்த மிகுதியில் அவளால் பேசக்கூட முடியவில்லை. அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கலைவாணி புன்னகை பூத்தது போன்ற பிரமை ஏற்பட்டது.

அவளைப் பின் தொடர்ந்து வந்த அம்மாவும், அண்ணாவும் கூடக் கண்ணீர் விட்டனர். எல்லாம் ஆனந்தக் கண்ணீர் தான்!

★

கி...கி...கீ!

விஜயவன்

"கி...! கி...! கீ...!"

இந்தக் குரலைக் கேட்டதும், இது ஏதோ ஒரு கிளியின் குரல் என்று நினைத்துவிடாதீர்கள்!

என் நண்பன் கண்ணனின் குரலேதான் அப்படிக் கேட்கிறது! ஆம், அவன் என்னை அழைப்பதற்குக் கிளிக் குரலில்தான் கத்துவான். எவ்வளவு தத்ரூபமாகக் கிளியைப்போலவே கத்துவதற்கு அவன் பழகியிருக்கிறான், தெரியுமா? அவன் குரலைப் புதிதாக யாராவது கேட்டால் கிளியேதான் கத்துகிறது என்று ஒரேயடியாகச் சாதிப்பார்கள். கடைசியில், ஏமாந்த சோணகிரியாகி விடுவார்கள்!

என் வீட்டிற்கு வந்தால் அவன் என் பெயரை அழைத்துக் கூப்பிடவே மாட்டான். 'கி...!கி...கீ.!' என்றே கத்துவான். அதுவே போதும்; நான் வீட்டின் கடைசிக் கோடியில் இருந்தால்கூட இந்தக் குரல் கோயில் மணிபோல் 'கணீர்' என்று கேட்கும். நான் ஓடோடியும் வருவேன்.

அது மட்டுமல்ல; எங்கேயாவது நான் வழியில் போவதைப் பார்த்துவிட்டால், உடனே 'டேய்...! டேய்...!!' என்று தொண்டை கிழிய அவன் கூப்பிடமாட்டான்; மண்டை வீங்க என் பெயரை உச்சரிக்கவும் மாட்டான்; கைநோவக் கைகளைத் தட்டவும் மாட்டான்.

பின்னே?

'கி...!கி...கீ....!'என்றுதான் கத்துவான்! அந்தச் சப்தம்தான் ஒரு மைல் தூரத்தில் போய்க்கொண்டிருந்தால்கூடக் கேட்குமே!

இப்பொழுது அவன்தான் வந்திருக்கிறான். நான் மாடியைவிட்டு இறங்கி அவனிடம் சென்றேன். "வாடா உள்ளே" என்று கூப்பிட்டு, மாடிக்கு அழைத்துக் கொண்டு போனேன்.

எனக்கு அவன் குரலைக் கேட்கக் கேட்க ஆனந்தம்: எப்படித்தான் இப்படிக் கத்துகிறானோ என்பதை நினைக்க நினைக்க ஆச்சரியம்.

காது குளிர அவனது கிளிக் குரலைக் கேட்க வேண்டுமென்று எனக்கு அளவுகடந்த ஆசை. உங்களுக்கும் ஒருமுறை அந்தக் குரலைக் கேட்கவேண்டுமென்ற ஆசை இருக்கிறதல்லவா? ஆதலால், அவனைக் கத்தச் சொல்கிறேன்; கேளுங்கள்.

"டேய், எங்கே ஒரு தடவை கத்து!"

"கி...!கி...! கீ...!"

* * *

"கி...!கி...கீ...!"

யாரது? கண்ணனா இப்படிக் கத்துகிறான்?

ஆமாம், இவன் எங்கே இங்கு வந்தான்?

'சைக்கி'ளில் சென்றுகொண்டிருந்த நான் திகைப்புடன் நின்றேன். சுற்று முற்றும் பார்த்தேன். அந்த நீண்ட பாதையில் எவரையும் காணோம்! ஊருக்கு ஒதுப்புறமாக இருக்கும் அந்தப் பாதையில் ஆட்கள் நடமாட்டம் எப்படி அதிகமாக இருக்கும்? முதலில், அப்படிப்பட்ட இடத்திற்கு நான் எப்படி வந்தேன்?

என் அருமைத் தங்கை கமலாவைக் காலையிலிருந்து காணவில்லை. ஆம், காலையில் பக்கத்து வீட்டுப் பாப்பா பத்மினியோடு தெரு மூலைக்கு விளையாடச் சென்றாள், அவள். கழுத்தில் தங்கச் சங்கிலியும், காதில் கால்பவுன் லோலக்கும், கைகளில் தங்க வளையல்களும், கால்களில் வெள்ளிக் கொலுசுகளும் அணிந்திருந்தாள். சாப்பாட்டு வேளையானதும் பத்மினி மட்டும் தான் வீடுதிரும்பினாள். அவளுடன் விளையாடச் சென்ற என் தங்கை திரும்பி வரவில்லை! பத்மினியைக் கேட்டதற்கு அவள் திருதிருவென்று விழித்தாள். வேறு ஒன்றும் சொல்லவில்லை. அவளும் சின்னப் பாப்பாதானே! எப்படி அறிவாள்?

கமலா காணமற்போன செய்தியைக் கேட்டு அப்பா பதறலானார்; அம்மா கலங்கி விட்டாள்; பாட்டி பயந்து போனாள்; நான் அழுது விட்டேன்.

அப்பா, அம்மா, பாட்டி ஆகிய மூவரும் சொன்னதைக் கேட்கக் கேட்க எனக்குத் துக்கம் துக்கமாக வந்தது. நான் என்ன செய்வது?

"எவனோ நகைகளுக்காகத்தான் கமலாவைத் திருடிக் கொண்டு போயிருக்க வேண்டும். இதில் சந்தேகமேயில்லை!"— இப்படி அப்பா சொல்லிவிட்டு 'போலீஸ் ஸ்டேஷனு'க்கு 'ரிப்போர்ட்' கொடுக்கப் போய்விட்டார்.

"என்கண்மணி வழி தெரியாமல் எங்குபோய்த் தவிக்கிறாளோ! பட்டினியோடு பாழும் வெய்யிலில் எங்கு அலைகிறாளோ! யார் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்களோ!..."—இப்படித் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே ஊர் முன்சீபிடம் முறையிடச் சென்றாள், அம்மா.

"எவனோ கமலாவைச் சொக்குப் பொடி போட்டு அழைத்துக் கொண்டு போய்விட்டானே! கணபதி, நீதான் என் பேத்தியைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். உனக்கு நூறு சதுர்த்தித்தேங்காய் உடைக்கிறேன்......"—இப்படித் தெய்வத்தை வேண்டிப் புலம்பினாள், பாட்டி.

ஆனால், நான் எதுவுமே கூறவில்லை. 'சைக்கிளை' எடுத்துக் கொண்டு என் அருமைத் தங்கையை தேட நானே கிளம்பிவிட்டேன்.

"என் தங்கை கிடைக்காமல் போனால்...?என் தங்கையை நான் பார்க்க முடியாமலே போய்விட்டால்...?யாராவது நகைக்காக அவளைக்கொன்றுபோட்டுவிட்டால்...? நான் உயிரோடு இருக்கவே மாட்டேன்! என் தங்கையைப் பிரிந்து நான் இருக்கவே மாட்டேன்! என் அழகுத் தங்கை—அன்புத் தங்கை—ஆசைத் தங்கை—உயிர்த் தங்கையைக் காணமல் ஒரு கணமும்



இருக்க மாட்டேன்; முடியவே முடியாது. அவள் அன்பு குழைந்து சிரிக்கும் சிங்கார முகத்தை ஒவ்வொரு வினாடியும் நினைத்து நினைத்து உருகியே இறந்துவிடுவேன்! ஐயோ, தெய்வமே! என் கண்ணை செல்லக் கட்டியைப் பிரிந்து எப்படி இருப்பேன்...!" --இந்தப் பயங்கர எண்ணங்களில் சஞ்சரித்துக் கொண்டேதான், 'சைக்கிளை' அந்த நீண்ட பாதையில் செலுத்திக்கொண் டிருந்தேன்.

இந்தச் சமயத்தில்தான் என் நண்பனின் 'கி...!கி...!கீ...!' குரல் கேட்டது. அவன் எங்கு இங்கு வந்தான், எப்படி வந்தான் என்று ஆச்சரியப்பட்டேன். ஒரு சமயம், நான் வந்த பிறகு என் தங்கை காணாமல் போன செய்தியைக் கேட்டு அவனும் அவளைத் தேடிக்கொண்டு இங்கு ஓடி வந்திருப்பானேன்? இருந்தாலும் இருக்கலாம். நான் 'சைக்கிளை' விட்டு இறங்கிப் பாதையின் ஓரமாக நின்று கொண்டு பார்த்தேன். ஆளைக் காணோம்! ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண் டிருந்தேன்.

திரும்பவும் அதே சப்தம்.

'கி...! கி......கீ...!'

உற்றுக் கேட்டேன். சிறிது தூரத்திலிருந்துதான் அந்தக் குரல் வந்தது. அவனைக் காணவில்லை! சாலைக்குச் சிறிது தூரத்தில் ஒரு தென்னந்தோப்புத்தான் காட்சி அளித்தது. அதற்கு முன்னால்— பாதையின் ஓரமாக ஒரு வயல் இருந்தது. அந்தத் தோப்பில்கூட ஒருவரையும் காணோம்!

'சரி, வருவான், வருவான்' என்று தென்னந்தோப்பையே விழி அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றேன். எவரையுமே காணோம்! 'இவன் என்ன இப்பொழுது வந்து விளையாடுகிறான்?' என்று ஆத்திரப்பட்டேன்.

அப்பொழுது மறுபடியும், 'கி...! கி...!கீ...!' என்ற சப்தம்கேட்டது. 'சரிதான், நம்மையே அங்கு அழைக்கிறான். ஒரு வேளை அவனுக்கு ஏதாவது ஆபத்தோ! இல்லையேல், ஒரு தடவை கத்தி அழைத்துவிட்டு

வந்திருப்பானே!' எனக்குத் திகிலாய்ப் போய்விட்டது. அவசரமாக சாலையைவிட்டு சைக்கிளுடன் இறங்கினேன்.

முன்னால் இருந்த வயலைத் தாண்டித்தான் அந்தத் தென்னந் தோப்பிற்குச் செல்ல வேண்டும். அந்த முள் நிறைந்த வயலில் ஓர் ஒற்றடிப் பாதை மட்டும்தான் இருந்தது. அதன் வழியாக 'சைக்கி'ளைத் தள்ளிக்கொண்டு வயலுக்குள் நுழைந்தேன். வயலில் நான்கு ஐந்து குடியானவர்களின் குடிசைகள் இருந்தன. அதைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றேன். தென்னந் தோப்பின் ஆரம்பத்திற்கு வந்துவிட்டேன்.

அப்பொழுதும் தோப்பில் ஒருவரையும் காணவில்லை! சிறிது நேரம் தயங்கி நின்றேன்.

"இ...!இ...!ஈ...!'—கொஞ்ச நேரத்தில் மறுபடியும் குரல் கேட்டது.

அப்பொழுதுதான் அந்தக் குரல் தோப்பின் கடைசியில் இருந்து வருகிறது என்று தெரிந்துகொண்டேன். பின் 'விறு விறு' என்று நடந்தேன்.

அங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அங்குதான் கண்ணன் இருப்பான் என்று ஊகம் செய்துகொண்டு வேகமாக ஆலமரத்தை நெருங்கினேன்.

அங்கே—

ஆயிரம் விஷப் பாம்புகள்—கொடும் கரு நாகங்கள் ஒன்றாகப் படையெடுத்து வருவதைப் பார்த்துக் குலை நடுங்கிவிட்டவன் போல் நின்றுவிட்டேன்! என்னை அறியாமல் என் கைகளிலிருந்த 'சைக்கிள்' நழுவி 'தொப்'பென்று கீழே சாய்ந்தது.

முறுக்கு மீசையுடன் கூடிய ஓர் ஒற்றை நாடி ஆசாமி என் தங்கையின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை மெதுவாகக் கழற்றிக்கொண்டிருந்தான்.

'சைக்கிள்' விழுந்த சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான், அவன். என்னைக் கண்டவுடன் ஓட ஓரடி எடுத்து வைத்தான்.

"திருடன்! திருடன்!!" என்று நான் பலமாகக் கத்திக்கொண்டே ஒரே ஓட்டமாக ஓடி அவனைப் பிடித்தேன். பிடித்துக்கொண்டே கத்தினேன், 'திருடன்! திருடன்!' என்று.

என் கூக் குரலைக் கேட்டுக் குடிசையில் இருந்த குடியானவர்கள் குண்டாந் தடியுடன் ஓடோடியும் வந்துவிட்டார்கள். விஷயத்தை அவர்களிடம் கூறினேன். அப்புறம் நடக்க வேண்டிய சம்பிரதாய முறைகள் நடந்தன. ஆமாம், அவனை எப்படி எப்படி உருட்ட வேண்டுமோ, எப்படி எப்படி மிரட்ட வேண்டுமோ அதன்படி செய்துகொண்டிருந்தார்கள், அந்தக் குடியானவர்கள்.

அதன் பயனாய் இந்த விஷயம்

கிடைத்தது: மத்தியானம் சுமார் மூன்று மணிக்கு, வழி தெரியாமல் அலைந்துகொண்டிருந்த என் தங்கையை ஆற்றங்கரை ஓரமாகக் கண்டானும், அந்த ஆசாமி. உடனே அவளுக்கு ரொட்டி, மிட்டாய் எல்லாம் வாங்கிக் கொடுத்து ஊருக்கு ஒதுப் புறமான அந்த இடத்திற்குக் கொண்டுவந்து விட்டானும்.

இதைக் கேட்டதும் எனக்கு நண்பன் கண்ணனின் ஞாபகம் வந்தது. 'கி...!கி...கீ!' என்று கத்தி அழைத்துவந்து, என் தங்கையைத் தேடித் தந்த என் நண்பன் எங்கே என்று அப்பொழுதுதான் தேடினேன். சுற்றுமுற்றும் பார்த்தேன். எங்கேயும் அவன் தென்படவில்லை.

ஆனல்—?

"கி...! கி...! கீ... !" —ஆலமரத்தின் உச்சியிலிருந்து இந்தக் குரல் திரும்பவும் கேட்டது. தலையைத் தூக்கி உச்சியைப் பார்த்தேன். அங்கே என் நண்பனு இருந்தான்?

இல்லை! இல்லை!!

அங்கே ஒரு கிளி—பச்சைக் கிளி, 'கி...! கி...! கீ...!' என்று கத்திக்கொண்டே 'விருட்'டென்று பறந்து போனது.

கிளியின் குரலைக் கேட்டு என் நண்பன்தான் என்று எண்ணி நான் ஏமாந்து விட்டேன். ஆனலும் என் அருமைத் தங்கை என் உயிர்த் தங்கை கிடைத்துவிட்டாள். எல்லாம் யாரால்? என் நண்பனல் தானே! இல்லை, இல்லை! அவனல் கூட அல்ல! அவன் குரலால்தான்!

அடங்காத ஆனந்தத்தில் அந்தக் குரலைப்போல் நாமும் உச்சரிக்க வேண்டும் என்று எனக்குத்தோன்றியது. உடனே, உச்சரித்தேன்.

"கி...! கி...! கீ !"

* * *

"கி...! கி...! கீ...!"

யாரது கண்ணனு?

வாசலில் நின்று கூவி அழைத்த அவனை வேகமாக வீட்டிற்குள் அழைத்துச் சென்றேன். அப்பொழுது அப்பாவும், அம்மாவும், பாட்டியும் அவனுக்கு அளித்த உபசாரத்தைப் பார்க்கவேண்டுமே!

அவன் திணறிப் போய்விட்டான். விஷயம் தெரியாமல், லட்டையும், லவாலாடையும், ஜீராவோடு ஜிலேபியையும், பாலுடன் பால்கோவாவையும் விடாமல் திணித்துக் கொண்டே இருந்தோம். பாவம்! அவனல் மூச்சுவிடக் கூட முடியவில்லை!

கடைசியாக, அவனை மாடி அறைக்கு அழைத்துச் சென்றேன்.

அவன், "டேய்! கடைந்தெடுத்த கஞ்சப்பிரபுவான உனக்கு இந்த ஏழையின் மீது ஏனே இத்துணை இரக்கம்!" என்று கூறி, தான் ஓர் எழுத்தாளன் என்பதைக் காட்டிக் கொண்டான்.

நான் விஷயம் எல்லாவற்றையும் விவரித்தேன். அப்பொழுதுதான் அவனுக்கு எல்லாம் விளங்கியது.

கடைசியில் நான், கண்ணனைப் பார்த்துவேடிக்கையாக, "கிளியே, கிளியே! எங்கே கொஞ்சம் கத்து. காதாரக் கேட்கலாம்" என்றேன்.

கமலாவை மடியில் வைத்துக் கொஞ்சியவண்ணம் கண்ணன் கத்தினுன்:

"கி...! கி...! கீ...!"

கோழை

'பூவண்ணன்'

1. சுப்பையனின் சவால்

அடிவானத்தில், சிவந்த சூரியன் மறையும் நேரம். 'வீரன் வெள்ளைச்சாமி', தன் நண்பன் வேலனோடு ஆற்றங்கரையின் ஓரமாகச் சென்று கொண்டிருந்தான்.

"ஐயோ! அடிக்காதே! அடிக்காதே!" என்ற கூக்குரலைக் கேட்டு இருவரும் சுற்றும் முற்றும் பார்த்தனர். சிறிது தூரத்தில மரத்தடியில், அக் கிராமப் பண்ணைக்காரரின் சின்ன மகன் முத்துவும், அடுத்த கிராமத்தின் பெரிய பணக்காரர் மகன் சுப்பையனும் மற்றும் சிலரும் இருந்தனர். சுப்பையன், சேரியைச் சேர்ந்த காத்தானை அடித்துக் கொண்டிருந்தான். வெள்ளைச்சாமி கேட்டது காத்தானின் கதறலைத்தான்.

உடனே, வேலனோடு வெள்ளைச்சாமி வேகமாக அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தான். சுப்பையன் அடிப்பதை இன்னும் நிறுத்தவில்லை. வெள்ளைச்சாமி, "நிறுத்து! சுப்பையா, நிறுத்து!" என்று கூச்சலிட்டான். சுப்பையன் அடிப்பதை ஒரு நிமிஷநேரம் நிறுத்தி விட்டு, வெள்ளைச்சாமியை ஏறிட்டு அலட்சியமாகப் பார்த்தான். பிறகு, காத்தானை முன்போலவே அடிக்க ஆரம்பித்தான்.

"நிறுத்து! அடிக்காதே! அடிக்காதே!"—வெள்ளைச்சாமி அடித்தொண்டையில் கத்தினான். ஆனால், சுப்பையனோ அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

வெள்ளைச்சாமிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. பொறுமையை இழந்து விட்டான். காத்தானை அடிக்க ஓங்கிய சுப்பையனின் கையைக் கெட்டியாக ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மறு கையால் காத்தானைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான். சுப்பையன் வெள்ளைச்சாமியின் மீது பாய்ந்தான். ஆனால், வெள்ளைச்சாமி ஒங்கி அவனைப் பிடித்துத் தன்

ளினான். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்தான், சுப்பையன். பண்ணைக்காரரின் மகன், அவன் எழுந்திருக்க உதவி செய்தான். வேலன் காத்தானின் கண்ணீரைத் துடைத்து, காயம் பட்டிருக்கிறதா என்று பார்த்தான்.

சுப்பையன் கோபத்தோடு எழுந்தான். அம்பால் தாக்குண்ட புலி வேடனைப் பார்ப்பது போல, வெள்ளைச்சாமியைக் கோரமாகப் பார்த்தான். அதைக் கண்டு அச்சமடையவில்லை, வெள்ளைச்சாமி.

"சுப்பையா! இந்தக் கிராமத்திற்கு நீ வந்து இன்னும் ஒரு வாரம் கூட முடியவில்லை. இதற்குள் காத்தானிடம் உன் கைவரிசையைக் காட்டுகிறாயே! அவன் என்ன குற்றம் செய்தான்? நோஞ்சானை அவனுடனா நீ சண்டை செய்வது?" என்று கேட்டான்.

"இதையெல்லாம் கேட்க நீ யார்?"—சுப்பையன் கேட்டான். அவன் குரலில் அதிகாரம் தொனித்தது.

"நான் அவன் நண்பன். அது கூட வேண்டாம். இக் கிராமத்தவன். வேறு கிராமத்தவன் என் சொந்தக் கிராமத்தானை மாட்டை விட மோசமாக மதித்து அடிப்பதைப் பொறுக்க மாட்டேன்"



சென்னை-600 008
1992

—உறுதியோடு பதிலளித்தான், வெள்ளைச்சாமி.

"இந்தக் கிராமத்தவரா நீங்கள்? எனக்குத் தெரியாதே! பழைய காலத்து ராஜாக்களுக்கு 'ஆபத்து உதவிகள்' என்று சிலர் இருந்தாராமே, அந்தப் பரம்பரையோ நீங்கள்!" என்று குள்ளநரிப் பார்வையோடு கேட்டான் சுப்பையன்.

வெள்ளைச்சாமி ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். அதற்குள் சுப்பையன், "நியாயம் கேட்க வந்த இந்தக் கிராமத்தவரே! காத்தானின் ஆபத்துதவியே! அவனை நான் ஏன் அடிக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டீரா? அவன் ஒன்றும் செய்யாமல் அவனை அடிப்பேனா? இத்தனை பேர்களையும் விட்டு விட்டு அவனை அடிக்க ஏதாவது காரணம் இருக்க வேண்டுமல்லவா? இக் கிராமத்தின் 'அறிவுச் சுடர்' என்று அழைக்கப்படும் தங்களுக்கு இது தெரியாததன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமோ?" என்று நீட்டி முழக்கி அபிநயத்தோடு கேட்

டான். சுப்பையனின் கிண்டலைக் கண்டு அவனைச் சார்ந்த சிலர் சிரித்தனர்.

"சுப்பையா, போதும் நிறுத்து! உன் நகைச்சுவையறிவை விளம்பரம் செய்தது போதும். நான்தான் முதலிலேயே கேட்டேனே, என்ன குற்றம் செய்தான் என்று. அதைக் கவனிக்காமல் கண்டபடி உளறுகிறாய். ஏன் அடித்தாய்? இப்போதுதான் சொல்லேன்" என்று கேட்டான்.

"ஏன் அடித்தேனா? கொஞ்சம் தவறி இருந்தால், உன் காத்தான் ஆடிய கிட்டிப்புள் என் தலையைப் பொத்துக் கொண்டு உள்ளே போயிருக்கும். நல்ல வேளை; தப்பி விட்டேன்" என்றான் சுப்பையன்.

"சுப்பையா! வேண்டுமென்றா உன்னைப் பார்த்து இவன் அடித்தான்? ஏதோ எதிர் பாராமல் நடந்து விட்டது. இனி இவன் இப்படி ஆடமாட்டான். பாவம், இவன் ஒருநோஞ்சான். இவனிடம் உன் கைவரிசையைக் காட்டுகிறாயே! யாராவது உன்னைப் போன்ற பலசாலியிடம் காட்டினாலும் பரவாயில்லை" என்றான்.

சுப்பையனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் "வெள்ளைச்சாமி! நாக்கை அடக்கிப் பேசு. காத்தானைவிட நீ பலசாலி என்றே நான் நினைக்கிறேன். உன்னிடம் என் கைவரிசையைக் காட்டலாமல்லவா?" என்று கேட்டான்.

"ஆ! தாராளமாய்! என்னிடம் காட்டிய பிறகு, நீ இனிமேல் இந்த வேலைக்கே வரமாட்டாய் என்று நினைக்கிறேன்" என்றான் வெள்ளைச்சாமி.

இருவரும் அப்போதே சண்டை போட இருந்தனர். ஆனால், முத்து குறுக்கிட்டு நாளை மாலை அதே இடத்தில் இருவரும் சண்டையிடலாம் என்று கூறினான். அதை அனைவரும் ஒத்துக் கொண்டனர். இந்தச் செய்தி காட்டுத்தீயை விட விரைவாக அக்கிராமம் முழுவதும் பரவி விட்டது.

2. யார் தடுத்தாலும் விடேன்!

வெள்ளைச்சாமி படித்த பையன். பட்டணத்திலிருக்கும் அவன் சித்தப்பா அவனுக்காக வாங்கியனுப்பும் ஏராளமான புத்தகங்களை அவன் எப்பொழுதும் படித்தவண்ணம் இருப்பான். அது மட்டுமல்ல, அவன் வீரன். நீதிக்குப் புறம்பாக எவராவது, ஏதாவது செய்தால் அவன் பொறுக்க மாட்டான். பண்ணைக்காரரின் சின்ன மகன் கூட முன்னொருமுறை, சுப்பையனைப் போல வெள்ளைச்சாமியைச் சண்டைக்கு அழைத்தான். ஆனால், அவனால் வெள்ளைச்சாமியுடன் சிறிது நேரம்கூடச் சண்டை போட முடியவில்லை. பயந்து போய் வெள்ளைச்சாமியின் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அத்துடன் வீண் வம்புக்குப் போவதில்லை என்றும் சத்தியம் செய்து கொடுத்தான்.

அதற்குப் பிறகுதான் வெள்ளைச்சாமிக்கு, 'வீரன் வெள்ளைச்சாமி' என்ற பட்டம் கிடைத்தது.

மறுநாள் சண்டையிடுவதாகக் கூறிச்சென்ற வெள்ளைச்சாமியைப் பல நண்பர்கள் தடுத்தார்கள். வெள்ளைச்சாமி, முத்துவோடு சண்டை செய்து வெற்றி பெற்ற போதே, பண்ணைக்காரர் அவனை ஒழித்து விட நினைத்தார். ஆனால், ஊரே அவனைப் புகழ்ந்து, அவன் பக்கம் இருந்ததால் அவர் ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார். இப்போது சுப்பையன் உதை வாங்கிக் கொண்டு சென்றால், வெள்ளைச்சாமிக்கு ஏதாவது அபாயம் நேரும் என்று அனைவரும் பயந்தனர். ஆனால், வெள்ளைச்சாமி யார் சொல்வதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. 'நாளைக்குச் சுப்பையனுடன் சண்டை போடத்தான் போகிறேன்' என்றான்.

"தந்தையோ இல்லை. தாயோ இருக்கிற நிலத்தில் விளைவதைக் கொண்டு இவனைக் காப்பாற்றி வருகிறாள். இவன் என்னடா வென்றால் யார் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறானே! பாம்பின் பகையை விடப் 'பெரிய இடத்துப் பகை' பொல்லாதது என்பது இந்தப் பிள்ளைக்குத் தெரியவில்லையே!" என்று பரிதாபப்பட்டனர், சில பெரியோர்கள்.

3. முத்துவின் பயம்

முத்துவிற்கு, வெள்ளைச்சாமியின் குத்துக்களைப் பற்றி நன்றாகத் தெரியும். சுப்பையன், கட்டாயம் வெள்ளைச்சாமியிடம் தோல்விதான் அடைவான் என்பதையும் அறிவான். அதனால்தான் அப்போதே சண்டையிடாமல் தடுத்தான்.

அவன் சுப்பையனைச் சண்டை போடாமல் கிராமத்திற்குப் போய்விடும்படி சொன்னான். சுப்பையனுக்கும் இலேசாகப் பயம் தோன்றியது. ஆனால், முத்துவின் யோசனைப்படி செய்தால் எல்லோரும் கேலி செய்வார்களே என்று நினைத்தான், அத்துடன் "நாமோ பணக்கார வீட்டுப் பையன். அந்த ஏழைப் பயல் நம்மிடமா முரட்டுத்தனத்தைக் காட்டப் போகிறான்? அப்புறம் அவன் கதி என்ன ஆகும்! பழிக்குப் பழி வாங்கி விடமாட்டோமா!" என்றும் முடிவு செய்து கொண்டான்.

4. கோழை!

மறுநாள் மாலை.

சுப்பையன், முத்து முதலியவர்கள் தயாராக இருந்தனர். வீரன் வெள்ளைச்சாமியின் சண்டையையும், வெற்றியையும் பார்க்கக் கிராமத்துச் சிறுவர்கள் ஒன்று திரண்டிருந்தனர். மணி நாலுக்கு மேலிருக்கும். ஆனால், இன்னும் வெள்ளைச்சாமி வரவில்லை.

எல்லோரும் வெள்ளைச்சாமியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கூட்டத்திலிருந்த ஒருவன், திடீரென்று "அதோ வெள்ளைச்சாமி! வேலனோடு வருகிறான்!"

என்று கத்தினன். மறுகணம், எல்லோருடைய கண்களும் அவன் சுட்டிக் காட்டிய திசையை நோக்கின.

வீரன் வெள்ளைச்சாமி, வேலனோடு வந்து கொண்டிருந்தான். ஆனல் அவன் நிலை? அவன் முகம் சோர்ந்திருந்தது. அவன் நடையில் கம்பீரம் இல்லை. ஒளியிழந்த கண்களோடு, வெறுப்பாகக் கூட்டத்தைப் பார்த்தவண்ணம் அங்கு வந்து சேர்ந்தான்.

வெள்ளைச்சாமி வந்ததும், கூட்டத்திலிருந்த ஒருவன், 'வீரன் வெள்ளைச்சாமிக்கு—' என்று குரல் கொடுத்தான். அதைத் தொடர்ந்து மற்றவர்கள், 'ஜே!' என்று கூவினர்.

அந்த ஒலி வெள்ளைச்சாமியின் காதில் பாய்ந்து சென்று மனத்தைத் தொட்டது. அவன் கண்கள் ஏனே கலங்கின. ஆனந்த வெள்ளத்தில் நீந்தச் செய்யவேண்டிய அந்த ஒலி, துன்பக் கிணற்றில் அவனை வீழச் செய்ததன் காரணம் புரியவில்லை. கூட்டத்தின் கூப்பாடும், ஆர்ப்பாட்டமும் சுப்பையனைக் கலக்கிவிட்டன. அவன் மனத்தில் இலேசாகப் பயம் புகுந்துகொண்டு, சிறுகச் சிறுக வளர்ந்துகொண்டே வந்தது.

அந்த இடத்தில் அமைதி நிலவப் பல நிமிடங்கள் ஆயின. வெள்ளைச்சாமி, 'சுப்பையா!' என்று அழைத்தான். சுப்பையன் அவனை நோக்கி அச்சத்தின் ஆட்சியில் சிக்கியவண்ணம் சென்றான்.

"சுப்பையா! கடைசி எச்சரிக்கை! என்னிடமும் கூட்டத்தினரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஓடுகிருயா? அல்லது சண்டை போட்டு உடம்பைப் புண்ணாக்கிக்கொள்ள விரும்புகிருயா?" என்று மிடுக்குடன் கம்பீரமான குரலில், சுப்பையனைப் பார்த்து வெள்ளைச்சாமி கேட்பான் என்றே கூட்டத்திலிருந்த பலர் எதிர்பார்த்தனர். ஆனல், அவன் சுப்பையனிடம் சொன்னது......?

"சுப்பையா! உன் சவாலை நேற்று நான் ஏற்றுக்கொண்டேன். இன்று என்னுடன் நீ சண்டை செய்ய வந்திருக்கிருய். ஆனல், நான் உன்னிடம் சண்டை செய்யப் போவதில்லை. இதைச் சமாதானமாக வேண்டுமானுலும் எடுத்துக்கொள். அல்லது, உன்னிடம் நான் தோற்றதாக வேண்டுமானுலும் எடுத்துக்கொள். இதைத் தெரிவிக்கவே வந்தேன். ஏன், எதற்காக என்று கேட்காதே! நீயும் அதைப்பற்றி நினைத்து, வீண் கற்பனை உலகில் சஞ்சரிக்காதே! உன்னிடம் நான் சண்டை செய்ய விரும்பவில்லை"—இதைச் சொல்லி முடிப்பதற்குள், வெள்ளைச்சாமிக்கு வியர்த்துவிட்டது. தட்டுத் தடுமாறி, நாக் குழறக் கூறி முடித்தான்.

சுப்பையன், 'மெய்யாகவா?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான். வெள்ளைச்சாமி தலையைமட்டும் அசைத்தான். அங்கிருந்த கூட்டத்தில் 'கச முச' என்று ஆரம்பித்த சப்தம் கடல் ஒலியையும் மிஞ்சிவிட்டது.

கூட்டத்திலிருந்த சிலர் வெள்ளைச்சாமியைச் சண்டையிடும்படி வற்புறுத்தினர். ஆனல், அவன் கண்டிப்பாக மறுத்துவிட்டான். அவனது இந்த முடிவுக்குக் காரணம் தெரியாமல் எல்லோரும் திகைத்தனர்.

'டேய்! இவன் சுப்பையனிடம் பணம் வாங்கிக்கொண்டு இப்படிச் செய்திருப்பான்' என்றான், ஒருவன். 'பண்ணைக்காரர் இவன் எலும்பை நொறுக்கி விடுவார் என்ற பயம்' என்றான், மற்றொருவன். 'இல்லை, சுப்பையனிடம் இவனுக்குப் பயம்!' என்றான், வேறொருவன். 'ஆம்! ஆம்! உண்மைதான். இவன் வீரன் இல்லை; பயங்கொள்ளி! கோழை! கோழை!' என்றனர், சிலர். அவ்வளவுதான்! அங்கிருந்த அனைவரும் அவனை வெறுப்புடன் பார்த்தனர். 'கோழை! கோழை!' என்று கூச்சலிட்டனர்.

மனம் வெதும்பிய வெள்ளைச்சாமியால் நிற்க முடியவில்லை. அருகிலிருந்த வேலனைப் பிடித்துக் கொண்டான். இருவரும் அங்கிருந்து மெல்ல நகர்ந்து சென்றனர். கூட்டத்தினரின் வார்த்தைகள் அவன் காதில் விழுந்து கொண்டே இருந்தன. வெறும் வார்த்தைகளா அவைகள்? இல்லை, இல்லை! இல்லவே இல்லை! அவை ஒவ்வொன்றும் அவனது இதயத்தைப் பிளக்கும் ஈட்டி! உடலைச் சுட்டுப் பொசுக்கும் தீவட்டி! எலும்புகளைச் சுக்கு நூறாக்கும் சம்மட்டி!

அவன் கூட்டத்தைவிட்டுவிலகிச் சிறிது தூரம் வந்துவிட்டான். ஆனால், 'கோழை' என்று அவர்கள் கத்துவது அவன் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. மேலும் நடக்கமுடியாத அவன் அருகிலிருந்த மரத்தடியில் உட்கார்ந்தான். அவனருகில் நின்றான் வேலன்.

வெள்ளைச்சாமி அருகிலிருந்த மரங்களைப் பார்த்தான். காற்றில் மரங்கள் அசைந்தன. அந்தச் சப்தம் 'கோழை' என்று கூறுவது போலிருந்தது, அவனுக்கு. அருகிலே ஒரு கால்வாய் சென்றது. அதில் ஓடும் தண்ணீரில் எழும்பும் ஒலி 'கோழை' என்று அழைப்பது போல் தோன்றியது. மரத்திலிருந்த பறவைகள் கத்தின. ஒவ்வொரு பறவையும் 'கோழை, கோழை' என்று கூப்பிடுவதுபோலவே இருந்தது.

'கோழை! யார் கோழை? நானா கோழை! நானா கோழை!'—வெறி பிடித்தவனைப் போலக் கத்திக் கொண்டே எழுந்தான், வெள்ளைச்சாமி! வேலன் அவனைப் பிடித்து உட்காரவைத்தான். வெள்ளைச்சாமியின் காதில் 'கோழை, கோழை' என்று யாரோ ஓயாமல் கூச்சல் போடுவதுபோல் இருந்தது. அவன் மெல்லக் கண்களை மூடிக்கொண்டான். நீர்த் துளிகள் முத்து முத்தாக வழிந்தன.

அப்போது, நேற்றுச் சுப்பையனிடம் சவால்விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றபின், அவனுக்கும் அவன் அம்மாவுக்கும் நடந்த உரையாடல் திரைப்படம்போல் தெரிந்தது, அவன் மனக் கண்முன்.

5. நேற்றிரவு நடந்த கதை

"வெள்ளைச்சாமி! உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியதற்கு இந்த ஒரே ஒரு காரியத்தைக் கூடவா செய்யக்கூடாது?"

"அம்மா! நீ எதைச் சொன்னாலும் நான் செய்யத் தயங்கமாட்டேன். கொழுந்துவிட்டு எரியும் தீயிலே குதிக்கச் சொன்னாலும், எண்ண முடியாத முதலைகள் வாழும் குளத்தில் இறங்கச் சொன்னாலும், பல நாள் உண்ணாமல் பட்டினி கிடக்கும் சிங்கத்திற்குப் பலியாகச் சொன்னாலும் தயங்க மாட்டேன்! தயாராக இருக்கிறேன்! ஆனால் அம்மா, சுப்பையனிடம் சண்டை செய்யவேண்டாம் என்று மட்டும் சொல்லாதே! அவன் என்னைக் கிண்டல் செய்ததை நீ கேட்டிருந்தால்கூடப் பொறுத்திருக்க மாட்டாயம்மா! நாளை நான் போரிடாமல் புறமுதுகிட்டால், இந்தக் கிராமத்தில் இனித் தலைத்தூக்க முடியுமா? என் பெயரின் முன்னால் இருக்கும் 'வீரன்' என்ற பட்டத்திற்கு என்ன மதிப்பு?"

"உன் நிலைமை எனக்குப் புரிகிறதடா! ஆனாலும் வேண்டாம்! உனக்கு நேரும் அவமானம் எனக்கும்தானே! என்றாலும், நான் உன்னைத் தடுக்கிறேன் என்றால் அதற்குத் தகுந்த காரணம் இல்லாமலிருக்குமா? உனக்குத் தெரியாதடா, பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். அப்போது நீ சின்னப் பையன். நான்கு ஐந்து வயது தான் உனக்கு இருக்கும்."

"என்னம்மா நடந்தது? அதற்கும், நான் சண்டை போடுவதற்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கிறது மகனே! இல்லாவிட்டால், இத்தனை ஆண்டுகளாகச் சொல்லாத சம்பவத்தை இன்றைக்கு ஏன் உனக்குச் சொல்லப் போகிறேன்? கவனமாகக் கேள், நான் சொல்லப் போவதை!

அப்போது நீ சிறு குழந்தை. நாமெல்லோரும் இந்தக் கிராமத்திலிருந்து அறுபது எழுபது மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு குக்கிராமத்தில் வசித்து வந்தோம். நல்ல படியாகத்தான் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. உன் தந்தை அந்தக் கிராமப் பண்ணைக்காரரிடம் சண்டை போட்டுக் கொண்டார். பண்ணைக்காரர், வேலையாட்களை மிகக் கீழ்த்தரமாக நடத்துவதாக எல்லோரிடமும் புகார் செய்தார். அதுமட்டுமல்லாமல், வேலையாட்களையே அவருக்கு விரோதமாகத் தூண்டி விட்டதாக வேறு கூறப்பட்டது. அதனால் கோபம் கொண்ட பண்ணைக்காரர் உன் தந்தையைக் குடும்பத்தோடு ஒழித்துவிடத் திட்டமிட்டார். அது எங்களுக்குத் தெரியாது. அப்போது அப் பண்ணைக்காரர் வீட்டிற்கு ஒருவர் வந்திருந்தார். அவரும் ஒரு கிராமத்தில் பெரிய பண்ணைக்காரராம்.

அவர் ஒருநாள் நம் தெருவழியே போகும்போது, நீ திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டிருந்தாய். அவர் நம் வீட்டை நெருங்கும் போது, நீ தவறிக் கீழே விழுந்து விட்டாய். வழியே சென்ற அவர் உன் குரலைக் கேட்டு ஓடிவந்து உன்னைத் தூக்கினார். அப்போது நான் உள்ளே யிருந்தேன். அவர் உன்னைத் தூக்கிக்கொண்ட பிறகே நான் வந்தேன். உன் சின்னஞ் சிறிய அழகிய முகம் அவரை வசீகரித்துவிட்டது. அவர் வெகு நேரம் உன்னுடன் கொஞ்சி விளை

யாடினர். உன் தந்தையைப் பார்த்தும் சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்றார்.

அதற்கு அடுத்தநாள் இரவு! தூங்கிக்கொண்டிருந்த என்னை உன் அப்பா தட்டி எழுப்பினர். திடுக்கிட்டெழுந்த நான் திகைத்துவிட்டேன். நம் வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. நீயோ தூங்கிக் கொண்டிருந்தாய். தீ அப்போது தான் பற்ற ஆரம்பித்திருந்தது. நாங்கள் தப்பிச் செல்ல நினைத்தோம். ஆனல் வெளிப் பக்கம் கதவு பூட்டப்பட்டிருந்தது. செய்வதறியாது திகைத்த அந்த நேரத்திலே கதவு திறக்கும் சப்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தோம். கதவு மெல்லத் திறக்கப்பட்டது. ஓர் உருவம் உள்ளே நுழைந்து உன் தந்தையிடம், 'சீக்கிரம் வெளியே வாருங்கள்' என்று கூறிவிட்டு என்னிடம் இருந்த உன்னைத் தூக்கிக்கொண்டு முன்னல் சென்றது. நான் பின்னல் ஓடினேன். சிறிது நேரத்தில் உன் தந்தையும் ஒரு சில முக்கியமான சாமான்களுடன் வெளியே வந்தார். உடனே, அந்த உருவம் கதவை முன் போல் மூடி வெளிப் பக்கம் பூட்டுப் போட்டது.

மறு நிமிடம் அவ்வுருவம் காட்டிய வழியே சென்றோம். அந்த உருவம் முதல் நாள் உன்னைத் தூக்கிக் கொஞ்சி மகிழ்ந்த வேறு ஊர்ப் பண்ணைக்காரர்தான்! சிறிது தூரம் சென்றதும் சாலையில் ஒரு வண்டி நின்றது. அதில் உன் தந்தையை ஏற்றினர். நானும் ஏறிக் கொண்டேன். நீ மட்டும் அவர் கையிலேயே இருந்தாய்.

அவர் உன் தந்தையிடம் "அந்த சுவாமி! அந்தப் படுபாவி பண்ணைக்காரன் தான் உன் வீட்டைக் கொளுத்தினன். அந்தத் திட்டத்தை என்னிடம் கூறினன். அவன் உன்மீது அளவு கடந்த கோபம் கொண்டிருந்தான். அதனல் அப்போது நான் தடுத்தால் கேட்கமாட்டான் என்பதும் எனக்குத் தெரியும். அத்துடன், அவன் நினைத்தபடி செய்வானு என்றும் சந்தேகப்பட்டேன். ஆயினும், அந்தத் திட்டத்தைக் கேட்டதும் என் கண் முன் இதோ இந்தக் குழந்தை வெள்ளைச்சாமிதான் தோன்றினன். நானும் ஏழைகளைக் கசக்கிப் பிழியும் இனத்தவன்தான். என்றாலும், இந்தக் குழந்தையின் முகம் அந்த நேரத்தில் என் இதயத்தை மெழுகாக்கியது. எனக்கும் இதைப்போல ஒரு குழந்தை இருக்கிறது. பெற்றோர் உள்ளத்தையும் நான் அறிவேன். அதனல் குழந்தையோடு உங்களையும் காக்கத் திட்டமிட்டேன். அது எனக்கும் என் வண்டிக்காரனுக்கும் தவிர யாருக்கும் தெரியாது. இனிமேல் நீங்கள் இந்தக் கிராமத்தில் வாழ முடியாது. எந்த வழியிலாவது உன்னைத் தொலைத்து விடுவான், அவன். ஆகையால் எனக்குத் தெரிந்த ஊருக்கு அழைத்துப் போகும்படி வண்டிக்காரனிடம் கூறியிருக்கிறேன். என் கிராமத்திற்கு அடுத்த கிராமந்தான் அது. நீங்கள் அங்கேயே வசித்து வரலாம். தேவையான போது என்னை வந்து பாருங்கள். நான் இப்போது போகிறேன்" என்று கூறிவிட்டு, உன்னை என்னிடம் கொடுத்துவிட்டுச்சென்றார்.

இந்தக் கிராமத்திற்கு வந்ததும் கையிலிருந்த பணத்தில் கொஞ்சம் நிலம் வாங்கினோம். அதில் விளை வதைக் கொண்டு வாழ்ந்தோம். ஆனால், இரண்டு வருடங்களுக்குப் பிறகு உன் அப்பா இறந்து விட்டார். அதற்கிடையில் நம் குடும்பத்தைக் காப்பாற்றிய புண்ணியவானைப் பலமுறை உன் தந்தை சென்று பார்த்து, நன்றியும் தெரிவித்திருக்கிறார். உன் தந்தை இறந்த மறுவருஷத்தில் அவரும் இறந்துவிட்டார்.

அவர் எங்களைக் காப்பாற்றியதை அவர் வாக்கின்படி யாரிடமும் நாங்கள் இதுவரை சொல்லவில்லை. இப்போதுதான் முதல் முறையாக உன்னிடம் கூறுகிறேன். அவர் யார் என்று நீ தெரிந்து கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். அவர்தான் நாளைக்கு நீ சண்டையில் உதைத்துத் தோற்கடிக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறாயே, அந்தச் சுப்பையனின் தந்தை!''

"அம்மா இது............!''

"கதையல்ல கண்ணே! உண்மையாக நடந்தது. இப்போது சொல். உன்னையும், என்னையும், உன் தந்தையையும் காப்பாற்றியவரின் ஒரே புதல்வனுடன் நீ சண்டையிடப் போகிறாயா? உன் பெயருக்கு இழுக்கு நேர்ந்தாலும், உனக்கு அவமானம் நேர்ந்தாலும் அதைச் செய்யலாமா? சொல்லடா, சொல்லு!''

அம்மாவின் கேள்விக்குப் பதில் கூறாமல் சிந்தனையில் ஆழ்ந்தான் வெள்ளைச்சாமி. 'நான் உன்னுடன் சண்டையிட மாட்டேன்' என்று நாளைக்



அடடே! ராஜாஜி என்ன செய்கிறார்? அந்தப் பைக்குள் இருப்பது மிளகாய்ப் பொடியா, அல்லது மஞ்சள் பொடியா அல்லது கோதுமை மாவா என்று மோப்பத்தினால் கண்டுபிடிக்கப் பார்க்கிறாரோ? ஆம், அவர் கவர்னர் ஜெனரலாக இருந்த போது, அவரது மாளிகையில் குழந்தைகளுக்காக நடந்த போட்டி ஒன்றில் அவரும் கலந்து கொள்ளும் காட்சிதான் இது!

குச் சுப்பையனிடம் சொன்னால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், என்ன கூறுவார்கள், எப்படிக் கிண்டல் செய்வார்கள் என்றெல்லாம் யோசித்துப் பார்த்தான். ஆனால், அதே நேரத்தில் அவன் கண்முன், பல நாள் உண்ணாமல் பசியுடன் தான் இருந்த போதிலும், காலில் தைத்திருந்த முள்ளை எடுத்த ஒரே காரணத்திற்காகத் தனமுன் உணவாக நிறுத்தப்பட்ட அண்ட்ரோகிளஸைக் கொன்று தின்னாத சிங்கத்தின் உருவம் தோன்றியது.

உடனே, 'அம்மா! அம்மா! நீ சொன்னபடி செய்கிறேன். செய்த உதவியை மறக்கமாட்டேன். நான் என்ன நேர்ந்தாலும் சுப்பையனிடம் சண்டை செய்ய மாட்டேன்! அவன் என்னை அடித்தாலும், உதைத்தாலும் நான் அவனைத் தொடமாட்டேன்!' என்று கூறினான்.

6. அவன் கோழையா?

மரத்தடியில் உட்கார்ந்திருந்த வெள்ளைச்சாமி பெருமூச்சு விட்டான். அவன் கண்முன் காட்சி அளித்த 'நேற்றிரவு நடந்த கதை' யாருக்குத் தெரியும், வேலனைத் தவிர? உதவி செய்தது சுப்பையனுடைய அப்பாதான்; சுப்பையன் அல்ல. ஆனாலும், வெள்ளைச்சாமி சுப்பையனுடன் சண்டை செய்யவில்லை. தந்தை செய்த உதவிக்குப் பதில் மகனை—அவன் கொடியவனாக, தனக்குத் தீமை செய்யும் பகைவனாக இருந்தும் மன்னித்து விட்டான். அதனால் நேரும் அவமானங்களைக்கூட ஏற்றுக் கொண்டான்.!

மரத்தடியில் அவனிருந்த நேரத்தில் சுப்பையனுக்கு மற்றவர்கள் மாலை போட்டு 'வெற்றிவீரன்! வீரனை வென்ற தீரன்!' என்று போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

வேலன் வெள்ளைச்சாமியை அழைத்துக்கொண்டு, அவன் வீட்டிற்குச் சென்றான். வழியில் அவனைக் கண்டவர்கள் 'கோழை' என்று கூறினார்கள். ஆனால், அவர்களுக்குத் தெரியாது, வெள்ளைச்சாமி செய்த தியாகம்.

வீட்டையடைந்த வெள்ளைச்சாமி தன் தந்தையின் படத்தின் முன் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

"அப்பா! நம் குடும்பம் பட்ட கடனை நான் தீர்த்து விட்டேன்!" என்று கூறிக் கைகூப்பினான். அவன் கண்களில் நீர் நிறைந்தது. அதே சமயம் யாரோ வீதியில் 'கோழை!' என்று உரக்கக்கூறிச் சிரிப்பது அவன் செவியில் விழுந்தது.

அவன் கோழையா? நீங்களே கூறுங்கள்.

★

வம்புத் தம்பி

○ குழந்தைகளுக்காக சினிமாப் படம் தயாரிக்க மத்திய சர்க்கார் ஏற்பாடு.

—புது டில்லிச் செய்தி.

‘பெரியவர்களுக்காக வெளியாகும் சில படங்களைச் சிறுவர்கள் பார்க்கக்கூடாதெனத் தடை விதிக்கிறார்களே, அதேபோல சிறுவர் படங்களைப் பெரியவர்கள் பார்க்கக் கூடாதெனத் தடைவிதித்து அவர்களைப் பழி வாங்கவேண்டும்’ என்கிறான், ஒரு முந்திரிக் கொட்டை.

○ மிளகாய் ஏற்றுமதித் தொழிலாளர் மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

—செய்தி

எல்லாம் காரசாரமான தீர்மானங்களாயிருக்குமென நம்புகிறேன்.

○ ஒரு பெண் சிறையிலே குழந்தை பெற்றாள்.

—செய்தி

பாவம், பிறக்கும்போதே அக்குழந்தை கைதி போலவா பிறக்க வேண்டும்!

○ பிள்ளையார் உடைப்புப் போராட்டம் துவங்க பெரியார் ஈ. வே. ரா. தீர்மானித்திருக்கிறார்.

—சென்னைச் செய்தி

பரீட்சையில் தேறிய மாணவர்கள் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறார்கள். தேறாத மாணவர்கள் தங்களைக் கைவிட்ட பிள்ளையாரையே உடைக்கத் தீர்மானித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவிடுவார்களோ என்று அஞ்சுகின்றேன்.

○ ட்ரான்ஸ்வால் நகரப்பள்ளி ஒன்றுக்கு மாணவர்கள் தீ வைத்துவிட்டனர்.

—ஆப்பிரிக்கச் செய்தி

சரிதான்! அந்த மாணவர்கள் பெரிய **வால்***களாக இருப்பார்கள் போலிருக்கிறது!*

○ வாடகை சைக்கிளை விற்றவருக்கு சிறை. —செய்தி

பலே! அவருக்கு வாடகை இல்லாமலே வசிக்க இடம் கிடைத்துவிட்டதே!

○ பாதி நேரம் கல்வியையும், பாதி நேரம் பெற்றோர் செய்யும் தொழிலையும் கற்றுக் கொண்டால் பிற்காலத்துக்குப் பேருதவியாயிருக்கும். —ஒரு பிரசங்கி

‘ஐயோ! இது என்ன யோசனை! அப்படியானால், கள்ளனின் மகன், கறுப்புச்சந்தை வியாபாரி மகன், கள் விற்பவர் மகன் முதலியோருக்கு மிகுந்த கஷ்டமாயிராதா!” என்று குறுக்கிடுகிறார், ஓர் அதிகப் பிரசங்கி.

○ தங்கள் ஊரிலுள்ள நூல் நிலையத்தை நடத்துவதற்காக ஒருவருஷம் வரை சினிமாப் பார்ப்பதில்லையென்றும், சினிமாவுக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு புத்தகங்கள் வாங்கி வைப்பதென்றும் மால்வான் என்ற நகர மாணவர்கள் முடிவு செய்திருக்கின்றனர். —பரோடா செய்தி

நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களைத் திருடி விற்றுவிட்டு சினிமாவுக்குச் செல்லும் சிலருக்கு இது தலைகீழ்ப் பாடமாகத் தோன்றலாம்!

—EYEGOD



புத்தகம் எங்கே?

'நான்'

காட்சி - 1

இடம்: 'போர்டு எலிமென்டரி ஸ்கூல்.' நான்காம் வகுப்பு.

நேரம்: இரண்டாம் 'பீரியட்' ஆரம்பம்.

(பூகோள வாத்தியார் கோபமாக வகுப்பிற்குள் நுழைகிறார்)

கிட்டு: (ரகசியமாக) ஏய் சோமு! 'ஹெட்மாஸ்டர்' 'டோஸ்' கொடுத்திருப்பார் போல் தெரிகிறதே!

(சோமு அதை ஆமோதித்து விட்டுச் சிரிக்கிறான். பூகோள வாத்தியார் அதைக் கவனித்து விடுகிறார். ஆனால், கவனிக்காதது போல் பாவனை செய்கிறார்).

பூ. வா: (புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு)

டேய் கிட்டு! உலகத்திலேயே பெரிய கண்டம் எது?

கிட்டு: (பளிச்சென்று) வட அமெரிக்கா சார்!

சோமு: (அவசரமாக) இல்லை சார்! ஆஸ்திரேலியா சார்!

(பூகோள வாத்தியார் கைகள் இரண்டையும் உஷ்ணம் பறக்கத் தேய்த்துக் கொண்டு அவர்கள் அருகே வருகிறார். அடுத்த நிமிஷம் சோமுவின் கன்னத்தையும், கிட்டுவின் கன்னத்தையும் அவர் கைகள் பதம் பார்க்கின்றன).

பூ. வா: ஏய் மணி, நீ சொல்லு.

மணி: ஆசியா சார்!

பூ. வா: வெரிகுட்! அந்த இரண்டு கழுதைகள் தலையிலேயும் இரண்டு குட்டு வை.

(மணி குட்டுவதற்கு நெருங்குகிறான். மெதுவாய்க் குட்டுமாறு சமிக்ஞை செய்கின்றனர், சோமுவும், கிட்டுவும். மணி ஓங்கிக் குட்டுகிறான்.

வகுப்பில் எல்லோரும் சிரிக்கிறார்கள்).

பூ. வா: நீங்கள் இரண்டு பேரும் இந்தப் 'பீரியட்' முழுவதும் பெஞ்சி மேலே நில்லுங்கள்.

(வகுப்பு சில நாழிகைக்குப் பின்னர் கலைகிறது)

காட்சி-2

இடம்: பள்ளிக்கூடம்.

நேரம்: மறு நாள் காலை மணி 9 சோமுவும், கிட்டுவும் சீக்கிரமே வந்திருக்கின்றனர்.

சோமு: ஏய் கிட்டு! இந்த மணி நம்மை எப்படிக் குட்டினான் பார்த்தாயா?

கிட்டு: ஆமாண்டா, ரொம்ப கர்வம் அவனுக்கு.

சோமு: அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். என்ன சொல்கிறாய்?

கிட்டு: (சிறிது நேரம் யோசித்துவிட்டு) ஏய்! நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதை மத்தியானம் நடத்திவிட வேண்டும். (காதோடு காதாக ஏதோ கூறுகிறான். சோமுவின் முகம் பிரகாசம் அடைகிறது).

காட்சி-3

இடம்; பள்ளிக்கூடம்; நான்காம் வகுப்பு அறை.

நேரம்: மத்தியானம் இடைவேளை. மணி $1\frac{1}{2}$. சோமு மட்டும் வகுப்பில் இருக்கிறான். மற்ற எல்லோரும் சாப்பாட்டுக்குப் போயிருக்கின்றனர்.

(கிட்டு நுழைகிறான்)

சோமு: ஏய் கிட்டு! ஆரம்பிக்கலாமா!

கிட்டு: (மணியின் இடத்தைப் பார்க்கிறான். மணி வழக்கம் போல் தன் புத்தகப் பையைத் தன்னிடத்தில் வைத்து விட்டுப் போயிருக்கிறான்) உம், சீக்கிரம்!

(சோமு தன் பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுக்கிறான். பரபர வென்று அதை மணியின் பையில் திணித்து வைத்துவிட்டுக் கிட்டுவுடன் வெளியேறுகிறான். சிறிது நேரத்தில் பாலுவும், மணியும்



மணி: டேய் பாலு! இதைப் பாரடா. இது யார் புத்தகம்?

பாலு: (புத்தகத்தில் உள்ள பெயரைப் படிக்கிறான்) R. சோமசுந்தரம், நான்காம் வகுப்பு, தமிழ்ப் புத்தகம்! டேய், எப்படியடா இது உன் பைக்குள்ளே வந்தது?

மணி: அதுதான் எனக்கும் புரியவில்லை. பேசாமல் அவன் பையிலேயே கொண்டு போய் வைத்து விடுகிறேன்.

(மணி அப் புத்தகத்தைச் சோமுவின் பைக்குள் வைத்து விட்டு, பாலுவுக்குக் கணக்கு நோட்டை எடுத்துக் கொடுக்கிறான். இருவரும் வெளியேறுகின்றனர்.)

வகுப்பிற்குள் நுழைகின்றனர்).

பாலு: மணி, உன் கணக்கு நோட்டுப்புத்தகத்தைத் தருவாயா?

மணி: உனக்கில்லாமலா! கட்டாயம் தருகிறேன்.

(மணி தன் பைக்குள் கையை விட்டு மேலே இருந்த புத்தகத்தை எடுக்கிறான். அதைப் பார்த்ததும் திடுக்கிடுகிறான்)

காட்சி - 4

இடம்: பள்ளிக்கூடம். நான்காம் வகுப்பு அறை.

நேரம்: மத்தியானம் முதல் 'பீரியட்'. தமிழ் வாத்தியார் (அது சிறிய பள்ளிக்கூட மாதலால் அவரேதான் பூஞ்சோலை பூகோள வாத்தியாரும்) வகுப்பிற்குள் வருகிறார்.

த. வா: எல்லோரும் தமிழ்ப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

சோமு: ஸார்! என்

தமிழ்ப் புத்தகத்தைக் காணோம், ஸார்!

த. வா: நன்றாய்ப் பார்! உன் பையிலே தான் இருக்கும்.

சோமு: இல்லவே யில்லை, ஸார்!

த. வா: சரி, எல்லாருடைய பையையும் போய்ப் பார்.

(சோமு ஒவ்வொருவருடைய பையையும் பார்ப்பது போல் பாசாங்கு செய்கிறான். மணிக்கு, சோமுவின் சூழ்ச்சி புரிகிறது. நல்ல வேளையாய்த் தான் தப்பித்துக் கொண்டதை நினைத்து சந்தோஷமடைகிறான்).

சோமு: மணி, உன் பையைக் கொடு. நீதான் கடைசி. உன் பையையும் பார்த்து விடுகிறேன்.

(மணி தைரியமாய்ப் பையைக் கொடுக்கிறான். சோமு எல்லாப் புத்தகங்களையும் கொட்டிப் பார்க்கிறான். அவனுடைய தமிழ்ப் புத்தகத்தைக் காணவில்லை. உண்மையாகவே புத்தகம் போய்விட்டதோ என்று திகிலடைகிறான்.)

த. வா: ஏய் சோமு! எவ்வளவு நேரமாகிறது? இன்றைக்கு உன்னாலே பாடம் நடத்த முடியாது போய் விட்டது.

சோமு: (அழாக்குறையாக) ஸார்! என் புத்தகம் எங்கேயோ போய்விட்டது ஸார்.

த. வா: உன் பையையே நீ சரியாய்ப் பார்த்திருக்கமாட்டாய். இங்கே கொண்டு வா உன் பையை!

சோமு: (தன்பையில் புத்தகம் இல்லையென்ற அலட்சியத்துடன்) நீங்களே பாருங்கள், ஸார்.

த. வா: (பையை மேஜை மேல் கவிழ்க்கிறார். சோமுவின் தமிழ்ப் புத்தகம் மேஜை மேல் 'தொப்'பென்று கீழே விழுகிறது. சோமுவுக்குத் தூக்கிவாரிப் போடுகிறது) டேய் திருட்டுக்கழுதை! உன் பையிலேயே வைத்துக் கொண்டு காணோம் என்று பொய்தானே சொன்னாய்? நேற்றுக் காலையில் பூகோள வகுப்பிலே வாலாட்டினாய். இப்பொழுதும் தமிழ்ப்பாடத்தைக் கெடுத்து விட்டாய். நாளைக்கு நாலணா அபராதத்துடன் வகுப்புக்கு வா. இல்லாவிட்டால் உள்ளே நுழையக் கூடாது. ஆமாம், கண்டிப்பாகக் கூறி விட்டேன்.

(மணி புன்னகையுடன் சோமுவைப் பார்க்கிறான். சோமு பரிதாபமாகத் தரையைப் பார்க்கிறான்)

காப்பாற்றினன்!

பி. நாராயணன்

ராஜாவும், சீமாவும் மாலை சுமார் ஆறு மணிக்குக் கடற் கரையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அடுக்களை விஷயம்முதல் அரசியல் விஷயம் வரை அவர்கள் பேச்சில் அடிபட்டன.

"அடே ராஜா, வேகமாக நட! எனக்குப் பசிக்கிறது. வீட்டுக்குப் போகவேண்டும்" என்ருன் சீமா.

"போடா, சாப்பாட்டு ராமா! உனக்கு எப்போதும் பசிதானு?" என்று பதில் சொன்னுன் ராஜா.

இப்படிப் பேசிக்கொண்டே இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது ராஜாவின் காலில் ஏதோ ஒரு வஸ்து தட்டுப் பட்டது. அவன் குனிந்து அதை எடுத்தான். அது என்ன வென்று நினைக்கிறீர்கள்?

ஓர் அழகான புத்தம் புதிய 'மணி பர்ஸ்!' சீமாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

"பலே, நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! சீக்கிரம் அதைத் திறந்து பாரடா!" என்று குதித்துக் கொண்டே சொன்னுன், சீமா.

ராஜா அதைத் திறந்து பார்த்தான். அதற்குள்ளே ஒரு பத்து ரூபாய் நோட்டும், கொஞ்சம் சில்லறையும், ஒரு காகிதமும் இருந்தன.

"இன்றைக்கு நாம் நரி முகத்தில்தான் விழித்திருக்கிருேம். அந்த ரூபாயையும், சில்லறையையும், பர்ஸையும் எடுத்துக் கொண்டு, மற்றதையெல்லாம் குப்பையிலே எறி! 'கணேச பவான்' மசால் தோசை இப்போது என் கண் முன்னே நிற்கிறதடா!" என்று ஆனந்தமாகத் துள்ளிக் குதித்துக் கொண்டே ராஜாவின் கையைப்பிடித்து இழுத்தான், சீமா.

ராஜா சீமாவை ஒரு மாதிரியாகப் பார்த்தான். "அட, இவனொருத்தன்! இந்தப் 'பர்ஸை'த் தொலைத்தவர் என்ன பாடுபடுகிருரோ! இந்தக் காகிதத்தில் என்னென்னவோ முக்கியமான விஷயமெல்லாம் இருப்பதுபோல் தெரிகிறது. இதன் சொந்தக்காரரைக்

கண்டு பிடித்து, அவரிடம் இதைக் கொடுப்பதை விட்டு விட்டு, மசால்தோசை தின்ன வேண்டுமாம், மசால் தோசை!" என்று சிறினுன் ராஜா.

சீமா ஒன்றும் பேசாமல் முகத்தைச் சுளித்துக் கொண்டான். ராஜா இன்னும்'பர்ஸின்' பலபாகங்களைப் பரிசோதித்தான். அப்போது ஒரு 'பில்' கிடைத்தது. அந்தப் 'பர்ஸி'ன் சொந்தக்காரர் அப்போதுதான் 'பர்ஸ்' வாங்கியிருக்கிருர். 'பர்ஸ்' வாங்கிய 'பில்'தான் அது.

"சீமா! இந்த 'பில்'லில் 'கோவிந்த் அன் கோ' என்றல்லவா பெயர் போட்டிருக்கிறது! அந்தக் கடைக்குப் போய் இதை வாங்கியவர் யார் என்று கேட்போம், வா. வாங்கினதுகூட இன்றுதான் போலிருக்கிறது. இதோ இன்றையத் தேதி போட்டிருக்கிறது!" என்று ஆச்சரியமாக 'பில்'லை நோக்கிக் கொண்டே கூறினுன், ராஜா.

"அரிச்சந்திர மகாராஜாவே! தர்மப் பிரபுவே! தாங்களே அந்தக் கடைக்கு எழுந்து அருளுங்கள்! இந்த வீண் வேலையை அடியேன் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று கோபமும் கேலியும் நிறைந்த சொற்களை வீசிவிட்டு வீட்டை நோக்கி 'விர்'ரென்று நடந்தான், சீமா.

* * *

சீமா நேராக வீட்டை அடையும் போது, என்றும் போல் அன்று வீட்டில் ரேடியோ அலறவில்லை. சின்னப் பாப்பா முகாரி ராகம் பாடவில்லை. அம்மா அப்பாவின் சப்தமும் கேட்கவில்லை. நேராக சமையலறைக்குச் சென்ருன். அம்மா கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். கூடத்தில் அப்பா கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தார். அவர் முகம் வெளிறிக் கிடந்தது. சீமா அம்மாவிடம் விஷயத்தைக் கேட்டான். முக்கி முனகி அம்மா பதில் சொன்னுள்.

"சீமா, உன் அப்பா இன்று ஒரு புது 'மணி பர்ஸ்' வாங்கினுர். அதில் கொஞ்சம் ரூபாயும், ஒரு முக்கியமான காகிதமும் வைத்திருந்தார். வீட்டுக்கு வந்தால் 'பர்ஸை'க் காணேம்! அதிலிருந்த காகிதம், ஆபீஸ் விஷயத்தில் மிக முக்கியமானதாம்! அது கிடைக்காவிட்டால் அப்பாவுக்கு வேலையே போய் விடுமாம்!"

இதைக் கேட்ட சீமா யோசனையிலாழ்ந்தான். பெரிய துப்பறியும் நிபுணனைப்

போல் மூக்கின் மேல் விரலை வைத்தபடி யோசித்தான்.

சிறிது நேரம் சென்றது. "அடே, சீமா!" என்ற குரல் கேட்டது. சீமா வெளியே வந்தான். ராஜா, கையில் 'பர்ஸு'டன் நின்றுகொண்டிருந்தான்.

"இந்தாடா அப்பனே! உன் அப்பாவின் பர்ஸ்!" என்று கூறிக்கொண்டே 'பர்ஸை'க் கொடுத்தான் ராஜா.



சீமாவும் ராஜாவும் தெருவில் கண்ட அதே 'பர்ஸ்' தான்! இதற்குள் பேச்சுக் குரல் கேட்டு விஷயமறிந்த அம்மாவும், அப்பாவும் ஓடி வந்தார்கள். அப்பா பரபரப்புடன் 'பர்ஸை' வாங்கித் திறந்து பார்த்தார். அதில் 'ஆபீஸ்' சம்பந்தப்பட்ட காகிதம் பத்திரமாக இருந்தது.

"காப்பாற்றினாயடா, என் ராஜா!" என்று ராஜாவை அணைத்துக் கொண்டார், சீமாவின் அப்பா. 'பர்ஸ்' கிடைத்ததைப் பற்றியும், அவனுக்கும் சீமாவுக்கும் நடந்த சம்பாஷணை பற்றியும் முதலில் கூறினான், ராஜா. சீமாவின் முகத்தில் அப்போது அசடு வழிந்தது.

ராஜா சொன்னான்: "சீமா போன பிறகு நான் 'கோவிந்த் அன் கோ'வை அடைந்து 'பர்ஸ்' வாங்கியது யாரென்று விசாரித்தேன். அவர்கள் சொன்ன அடையாளங்களைக் கொண்டு நீங்கள் தான் என்று தெரிந்து இங்கு வந்தேன்" என்றான்.

"எப்படியோ, என் வேலை பிழைத்தது. எல்லாவற்றிற்கும் என் அஜாக்கிரதைதான் காரணம்" என்றார் அப்பா.

"இல்லை, இல்லை, காரணம் உங்கள் கோட்டு! வாருங்கள், சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு அப்பாவின் கோட்டை எடுத்து வந்து பைக்குள் கையை விட்டான், சீமா. அதிலிருந்த ஓட்டை வழியாக அவன் விரல்கள் வெளியேவந்தன



ராட்டினம், ராட்டினம்,
ரங்க ராட்டினம்.
நாங்கள் ஏறிச் சுற்றுகின்ற
ரங்க ராட்டினம் !

○

கேளுங்கள்: பதில் சொல்லுகிறோம்

○ என் பெயர் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவவேண்டும். அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

—C. காந்தன், விழுப்புரம்

உன் பெயர் பரவவேண்டுமா? அல்லது, உன் புகழ் பரவவேண்டுமா? பெயர் பரவ வேண்டுமானால் அதற்கு எத்தனையோ குறுக்கு வழிகள் இருக்கின்றன. ஆனால், புகழ் பரவ வேண்டுமானால் நல்ல எண்ணத்துடன் இடைவிடாது உழைப்பதைத் தவிர வேறு வழியே இல்லை!

○ ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற அம்மையாரைப் பற்றி நான் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். விவரமாக 'பூஞ்சோலை'யில் வெளியிடுவீர்களா? அந்த அம்மையார் பிறந்த தேசம் எது?

—பி. கோமதி, சென்னை-2

ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் இத்தாலியில் பிறந்தவர். போரில் காயமடைந்தோருக்குச் சிகிச்சை செய்யும் வேலையை மேற்கொண்டவர். நோயாளிகளுக்கு உதவுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இரவு பகலாக உழைத்தவர். உன் யோசனைப்படி அந்த அம்மையாரைப் பற்றிப் பூஞ்சோலையில் விரிவாக விரைவில் எழுதுவோம்.

○ விஞ்ஞானத்தைப் பற்றி எங்களுக்குப் புரியும்படியாகத் தமிழில் எழுதக் கூடியவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

—எஸ். பி. ராமநாதன், காரைக்குடி

ஏன் இல்லை? பெ. நா. அப்புசாமி, ஜெ. பி. மாணிக்கம், நா. கி. நாகராசன் போன்ற அறிஞர்கள் எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகளை நீ படித்ததில்லை போலிருக்கிறது. கதைபோல எளிய தமிழில் விஞ்ஞான விஷயங்களை விளக்கிக் கூறுவதில் அவர்கள் மிகவும் கைதேர்ந்தவர்கள்.

○ இந்தியாவில் மொத்தம் எட்டு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன என்கிறார்கள். அந்தக் கணக்குப்படி நம் சென்னை மாகாணத்தில் மட்டும் எத்தனை கிராமங்கள் இருக்கும்?

—கே. கோபாலன், சென்னை-4

என்ன தம்பி, தப்புக் கணக்குக் கொடுக்கிறீரே! ஏழு லட்சம் என்பதற்குப் பதிலாக எட்டு லட்சம் என்று கூறிவிட்டீரே! சரி, போகட்டும். இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களில், நம் சென்னை மாகாணத்தில்மட்டும்சுமார் 36,000 கிராமங்கள் இருக்கின்றன.

○ 'சர்க்கா' என்று இராட்டினத்தைச் சிலர் கூறுகிறார்கள். 'சர்க்கா' என்பது சரியா?

—மே. நீலகண்டன், கோவை

'சர்க்கா' என்பது தமிழல்ல. அது ஒரு ஹிந்திச் சொல். 'சக்ரா' என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து அது வந்ததாகக் கூறுகிறார்கள். 'சக்ரா' என்றால் சக்கரம் என்று பொருள். இராட்டினம் சக்கரம்போல் இருப்பதால், அதற்கு அந்தப் பெயரையே வைத்துவிட்டார்கள் போலிருக்கிறது.

○ வெளி நாட்டு நண்பர்களுக்குக் கடிதம் எழுத நினைக்கிறோம். ஆங்கிலத்தில் எழுதினால் போதுமா?

—எம். முத்துசாமி, எஸ்.கே.ரத்னம், ஆர். சீனுவாசன், சி. நடராஜன், சூலூர்

தாராளமாக எழுதுங்கள். அவர்களின் தாய்மொழி நமக்குத் தெரியாதபோது, அகில மெல்லாம் பரவியுள்ள ஆங்கிலத்தில்தானே எழுதவேண்டி யிருக்கிறது!

○ பூஞ்சோலையின் பின்பக்கத்து அட்டையில் Regd. No. M. 5771 என்று போடுவதில் 'M' என்பதன் விளக்கம் என்ன? சொல்லுவீர்களா?

—வா. அனந்தகிருஷ்ணன், ஆற்காடு

'M' என்பது சென்னையில் (Madras) தபால் சலுகைக்காகப் பதிவு செய்துகொள்ளப் பட்டது என்பதைக் குறிக்கிறது. இதே போல்தான் பம்பாயில் பதிவு செய்தால் 'B' என்றும், கல்கத்தாவில் பதிவு செய்தால் 'C' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

○ இளம் நடிகர் சுதாகரின் வீட்டு விலாசம் என்ன? நான் கடிதம் போட்டால் பதில் கிடைக்குமா?

—பி. வி. குமாரசாமி, மதுரை

M. சுதாகர், 11, ராமலிங்கேஸ்வரர் கோயில் தெரு, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை.

பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயில்

பிரபல சினிமா நக்ஷத்திர நடிகை ஸ்ரீமதி T. R. ராஜகுமாரி கூறுவது: "நான் பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயில் உபயோகித்ததில் அது கேசத்திற்கு சிறந்த கூந்தல் தைலம் என்பதை அறியலானேன். இது கேச வளர்ச்சியை அபாரமாக அளிப்பதுமட்டுமின்றி தேகத்திற்குக் குளிர்ச்சியையும்அளிக்கிறது"

தயாரிப்பவர்கள்:

ரத்தோட் டிரேடிங் கம்பெனி

மதராஸ் – 1

○ பாகிஸ்தானில் மொத்தம் எவ்வளவு ஜனங்கள் இருக்கிருர்கள்?

—டி. ஹரி, சேலம்

கிட்டத்தட்ட 6 கோடி 56 லட்சம்.

○ குயிலின் கீதத்தைக் கேட்க வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாயிருக்கிறது. அது எப்போது பாடும்?

—என். ஞானம், திருப்பத்தூர்

அதிகாலையில் பாடும்.

○ எண்ணெய் ஸ்நானம் செய்த பிறகு பால் சாப்பிடக்கூடாது என்கிருர்களே; சாப்பிட்டால் என்னவாம்?

—பி. மனோஹரன், திருச்சி

நன்ருகச் சாப்பிடலாம். எந்த விதமான கெடுதலும் இல்லை.

○ ஜப்பானுக்கும், சைனுவுக்கும், அமெரிக்காவுக்கும் நம் நேருஜி யானைகளை அனுப்பி வைக்கிருரே, அங்கே யானையே கிடையாதா?

—என். சோமன், சென்னை-3

யானைகள் அங்கு இருந்தால் இவ்வளவு தூரத்துக்குக் கப்பலில் ஏன் யானைகளை ஏற்றி அனுப்ப வேண்டும்? யானைகள் நம் தேசத்திலும், பர்மா, சிலோன், சையாம், மலேயா முதலிய இடங்களிலும், ஆப்பிரிக்காவிலும்தான் வாழ்கின்றன.

○ குதிரையின் இரண்டு கண்களுக்கும் கண்மூடி போட்டு வண்டியில் ஓட்டுகிருர்களே, அது ஏன்?

—வி. கே. பரமசிவம், மதுரை

குதிரை, வண்டியிழுத்துச் செல்லும்போது, இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்க்காமல் நேராகச் செல்லவேண்டும் என்பதற்காகவே அப்படிக் கண்மூடி போட்டிருக்கிருர்கள். குதிரை மிகவும் பயந்த மிருகம். அதனுல், பக்கத்துப் பார்வை இருந்தால் எதையாவது பார்த்துப் பயந்துபோய் வண்டியைக் கவிழ்த்துவிடுமாம்!

○ மனிதர்களுள் சிறந்தவர் யார்?

—எஸ். நவாப்ஜான், காரைக்குடி

உள்ளும் புறமும் தீமையில்லாதவரே மனிதர்களுள் சிறந்தவர்.

○ பாம்புகள் குளிர் காலத்தில், இரை எடுப்பதில்லை என்கிருர்களே, இது உண்மையா?

—N. முத்து, சென்னை-1

ஆமாம், கோடை காலத்தில் பாம்பு நன்ருகத் தின்று கொழுத்து விடுகிறது. குளிர்காலத்தில் அது இரை எடுப்பதில்லை. உடம்பிலுள்ள கொழுப்பையே தின்று காலம் தள்ளுகிறது. கோடை முடிவில் கொழு கொழு என்று புடலங்காயைப் போல் இருக்கும் பாம்பு, குளிர் காலத்தில் முருங்கைக்காயைப்போல் இளைத்துப் போய்விடுகிறது!

○ யானை எத்தனை வருஷங்கள் உயிரோடிருக்கும்?

—K. காமாட்சி, விழுப்புரம்

சுமார் 50 வருஷங்கள்.

★

எல்லாம்

எ. ந.



அவரிடம் சென்ற சங்கரனும்
அவசர மாகப் பெட்டியினைக்

கையில் கொடுத்து அதைப்பெற்ற
கதையைச் சொன்னான், விவரமுடன்.

அந்தப் பெட்டியின் பூட்டினையே,
அடித்து உடைத்துத் திறந்ததன்பின்

உள்ளே பார்த்தார், இன்ஸ்பெக்டர்;
உவகை கொண்டார்; வியந்திட்டார்.

கனவான் வீட்டில் சிலநாள்முன்
களவு போன நகைகளெலாம்

அந்தப் பெட்டியில் இருந்ததுதான்
அவரது வியப்பின் காரணமாம்!

சங்கரன் முதுகினில் மெதுவாகத்
தட்டிக் கொடுத்தார்; புகழ்ந்திட்டார்.

குப்பன் தந்தையை விடுவித்தார்.
குற்றம் அற்றவர் எனச்சொன்னார்.

அந்தச் சமயம் சங்கரனின்
அப்பா முகத்தில் வருத்தமுடன்,

உள்ளே நுழைந்தார்; அடுத்தகணம்
ஓடிச் சென்று சங்கரனைக்

கட்டிக் கொண்டு கண்களிலே
கண்ணீர் மல்கக் கூறிடுவார்:

"உயிருடன் என்றன் கண்மணியை
உலகில் இனியும் காண்பேனோ?

நன்மைக்கே!

கணபதி

என்றே வருந்திப் போலீஸில்
எழுதி வைத்திட வந்திட்டேன்

இங்கே உன்னை—'என் வாழ்வை'
இனிதே கண்டேன்; மகிழ்கின்றேன்!"



சங்கரன் தனது கதையினையே
தன்னுடை அருமைத் தந்தையிடம்

ஆற்றில் குதித்தது முதலாக
அனைத்தும் கூறினன், விவரமுடன்.

கூறிய வற்றைக் கேட்டதுமே
குப்பனை அவர்மிகப் போற்றினரே.

எல்லாம் கேட்ட இன்ஸ்பெக்டர்
இரண்டு பேரையும் புகழ்ந்தனரே.

"அங்கே வீட்டில் உன் அன்னை
அழுது புலம்பிக் கிடக்கின்றாள்.

சீக்கிர மாக வீட்டிற்குச்
சென்றிட வேண்டும், இப்போதே"



என்றே சங்கரன் தந்தையவர்,
இன்ஸ்பெக் டரிடம் விடைபெற்று

குப்பனை அவனது தந்தையுடன்
கூட்டிக் கொண்டு வெளிவந்தார்.

"ஆற்றில் குதித்தது பெருந்தவறு.
அதுவும் நன்மையில் முடிந்ததனல்,

எல்லாம் உலகில் நன்மைக்கே!"
என்றே சங்கரன் மகிழ்ந்தனனே!

(முற்றும்)

கமலத்தின் பரிசு

'ராசு'

வாசல் திண்ணையில் மேளகாரர் ஜமாய்த்துக் கொண்டிருந்தனர். எழெட்டுச் சிறுவர்கள் அவர்களைச் சுற்றி உட்கார்ந்து தலையை ஆட்டிக் கொண்டிருந்தனர். உறவினர்களும், நண்பர்களும் போவோரும் வருவோருமாய் இருந்தனர்.

கூடத்து மத்தியில் போடப் பட்டிருந்த ஆசனத்தில், அப்பாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள், மைதிலி. ஜரிகைக் கோடுகள் பளபள வென்று ஒளிவீச, பட்டுப் பாவாடை அணிந்திருந்தாள், அவள். பாவாடையின் பச்சைக் கலருக்குத் தகுந்தாற்போல் உடம்போடு ஒட்டிய சொக்காய். சட்டையின் வெளியே தெரியும்படியாக இரண்டு வடம் சங்கிலி போட்டுக் கொண்டிருந்தாள். தலை வாரிப் பின்னப்பட்டு, கட்டுக் கதம்பம் சூட்டப் பட்டிருந்தது.

அன்று மைதிலியின் ஏழாவது பிறந்த நாள்.

எல்லாம் முடிந்து வந்திருக்கும் உறவினர்களும், நண்பர்களும் தங்கள் தங்கள் பரிசுகளைக் கொடுத்தனர். வெள்ளி டம்ளர், டவரா, வெள்ளித் தட்டு, அழகிய பட்டுப் பாவாடைகள், சொக்காய்கள், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுக்கள், வேடிக்கைப் படங்கள் நிரம்பிய புத்தகங்கள்! மைதிலி மகிழ்ச்சி பொங்க ஒவ்வொன்றையும் வாங்கிவாங்கி மடியில் குவித்துக் கொண்டாள். அருகில் உட்கார்ந்திருந்த சிறுமிகள் ஆவலோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"மைதிலி, இந்தச் சொக்காய் அழகா யிருக்கே!" என்றாள் ஒரு சிறுமி.

"இந்தப் புஸ்தகத்தைக் கொடேன். பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்றாள் மற்றொருத்தி. அப்போது யாரோ ரேழியில் ஓடி வரும் சப்தம் கேட்டது. மைதிலியும் அவள் தோழிகளும் வாசல் புறம் பார்த்தனர்.

"ஊமைச்சி வந்துட்டாடி!" என்றாள் சுந்தரி.

அவ்வளவுதான்! மற்ற சிறுமிகள் மெல்லத் தங்கள் தங்கள் பெற்றோர்கள் இருக்குமிடத்துக்கு நழுவி விட்டனர். அவளிடம் அவர்களுக்கு அவ்வளவு பயம்!

ஏன்? அந்தத் தெருவிலிருக்கும் பெரியவர்கள்கூட 'ஊமைச்சி' என்றால் சிறிது யோசனை செய்வார்கள்.

கமலம் பிறவி ஊமை. அவள் பெற்றோர்கள் செய்யாத வைத்தியம் இல்லை. ஒன்றும் பலன் தரவில்லை.

அவளும் சிறுமிதானே! 'மற்றவர்களைப் போல நாமும் எல்லோ

ருடனும் சேர்ந்து விளையாட வேண்டும்; சேர்ந்து குதிக்க வேண்டும்; கைகோத்து ஓட வேண்டும்' என்ற ஆசை இருக்காதா? ஆனால், மற்றப் பெண்கள் அவளை அருகில் நெருங்க விடுவதில்லை. அவளைக் கண்டாலே அவர்கள் ஓடி விடுவார்கள்! எவ்விதம் கமலம் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாட முடியும்?

'கமலம் துஷ்டக்காரி; அடிப்பாள்; கடிப்பாள்; கல்லெடுத்து அடித்து விடுவாள்' என்பது அவர்கள் அபிப்பிராயம். அதில் உண்மை இல்லாமலில்லை. இருந்தாலும் அதன் மூலகாரணம் என்ன?

அவளைக் கண்ட போதெல்லாம் ஊமை என்று கேலி செய்வார்கள். 'பே...பே...பே' என்று அவள் பேசுவதுபோலப் பேசிக்கேலிசெய்வார்கள். கமலம் ஊமையே தவிர, செவிடல்ல. அத்துடன் ஓரளவு படித்தும் இருக்கிறாள். மற்றவர்கள் தன்னைக் கேலி செய்வதை நன்றாக உணர்ந்து கொள்ளுவாள். மற்றவர்கள் தன்னைக் கேலி செய்வதை அவள் விரும்பவில்லை. தன்னையும் அவர்களுடன் ஒருத்தியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தான்விரும்பினாள். அப்படியில்லாமல் அவர்கள் கேலி செய்வதை எவ்விதம் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? அவள் என்ன நூற்றுக்கிழவியா, மனத்தில் எழும் கோபத்தை அடக்கிக்கொள்ள?

ஆரம்பத்தில் பேசாமலிருப்பாள். அளவு மீறி விட்டால் 'அவ், அவ், அவ்' என்று கையை மேலும் கீழும் ஆட்டித் திட்டுவாள். அடிக்க வருவதுபோல் கையை ஓங்குவாள். அவர்கள், அவள் கைக்கு அகப்படாமல் ஓடிப்போய்த் தூரத்தில் நின்று கொண்டு கேலிசெய்யும் போது கல்லைப் பொறுக்கி எறிவதுபோல் பயமுறுத்துவாள். இதனால் தெருவில் அவளுக்குத் துஷ்டக்காரி என்ற பெயர் ஏற்பட்டு விட்டது. பெரியவர்கள்கூட அவள் மன நிலையை உணராமல், தங்கள் குழந்தைகளை அவளுடன் சேரக் கூடாது என்று கண்டித்து வந்தனர். பயமுறுத்தி வைத்தனர்.



பாவம், கமலம்! அவள், மனத்தில் ஆசை அலைமோத, தன்னந்தனியாகத் திண்ணையில் அமர்ந்தவாறு மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டேயிருப்பாள். அது ஒன்றுதான் அவளால் செய்யக் கூடியது.

மைதிலி அந்தக் கும்பலுடன் சேர்க்கப் படாதவள். கமலத்திடம் அவளுக்கு அபார அன்பு. அவளும் மற்றவர்களைப் போலச் சிறுமிதானே என்ற கொள்கை உடையவள். அவளுடைய தோழிகள் 'ஊமைச்சி' என்று கமலத்தைக் கூப்பிடும்போது, "ஏண்டி, கமலம் என்று கூப்பிடுகிறதுதானே! ஊமைச்சியாவது?" என்று கடிந்து கொள்வாள்.

அவளைக் கண்டால், "இங்கே வா, கமலம்!" என்று கூப்பிடுவாள். தாய்ப் பசுவைக் கண்ட கன்றுக்குட்டியைப் போலத் தாவி ஓடி வருவாள், கமலம். அவள் கையைக் கோர்த்தபடி நடப்பாள், மைதிலி. தன்னிடமுள்ள அபூர்வ வஸ்துக்களையெல்லாம் அவளிடம் காட்டி மணிக் கணக்காக அவைகளைப்பற்றிப் பேசுவாள். தனக்குப் புதுப் பாவாடை, சொக்காய் தைத்தால் அதைக் கமலத்திடம் காட்டா விட்டால் அவள் மனத்தில் நிம்மதி ஏற்படாது.

இது மற்றப் பெண்களுக்குப் பிடிக்க வில்லை. "ஊமைச்சி பொல்லாதவள். அவளோடு சேராதேடி, மைதிலி. அடித்துப் பிடுங்கிவிடுவாள்" என்று சொல்லுவார்கள். அந்த வார்த்தைகளை மைதிலி லட்சியம் செய்யமாட்டாள்.

"ஏண்டி சாந்தா, நீயும் தோழி; கமலமும் தோழி. நீ அவளை 'ஊமைச்சி' என்று கூப்பிடுவது சுத்தத் தப்பு. அதனாலேதான் அவள் அடிக்க வருகிறாள். என்னை அடிக்க வருகிறாளா?" என்று சொல்லி விடுவாள்.

அவளிடம் தங்கள் வார்த்தைகள் பலிக்காததைக் கண்ட அந்தச் சிறுமிகள், மைதிலியின் தாயாரிடம் புகார் செய்தனர்.

"மாமி, உங்கள் மைதிலி ஊமைச்சியுடன் சேருகிறாள். நாங்கள் சொன்னால் கேட்க மாட்டேனென்கிறாள்."

மைதிலியின் தாயார் அவளைக் கண்டித்தாள்.

"ஊமைப் பெண்ணோடு உனக்கென்னடி விளையாட்டு? அவள் துஷ்டை. கண்டபடி அடித்து விடுவாள். சேராதே!" என்றாள்.

"அம்மா, கமலம் என்னை ஒன்றும் பண்ணுவதில்லை. அவர்கள் அவளை 'ஊமைச்சி' என்று கூப்பிட்டுக் கேலி செய்கிறார்கள். அதனால் தான் அவர்களைக் கமலம் அடிக்க வருகிறாள்" என்று சொல்லிவிட்டாள்.

ஒன்றிரண்டு சமயங்களில் மைதிலி தாயாரிடம் அடிகள் வாங்கியிருக்கிறாள். என்னதான் ஆகட்டும். அவளுக்குக் கமலத்திடமிருந்த பிடிமானம் போகவில்லை. மற்றவர்களால் அதை அசைக்க முடிய வில்லை.

'ஊமைச்சி வருகிறாள்' என்று சாந்தா சொன்னதும் மகிழ்ச்சியோடு வாசலைப் பார்த்தாள், மைதிலி.

கமலம் குளித்து விட்டுப் புதிய 'கவுன்' அணிந்தபடி வந்து

கொண்டிருந்தாள். அவள் கையில் துணிப்பை ஒன்றிருந்தது.

"கமலம்! இங்கே வா!" என்று அன்பு ததும்பக் கூப்பிட்டாள், மைதிலி.

"ஹூம்..." என்று அவள் கையில் பையைக் கொடுத்து விட்டு ஓடிவிட்டாள், கமலம். பையைத் திறந்து உள்ளிருந்த பொருளை வெளியே எடுத்தாள், மைதிலி. அழகிய பட்டுப் பாவாடை!

அதைப் பிரித்ததும் உள்ளிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. எடுத்துப் படித்தாள்.

"மைதிலி,

எல்லோரும் என்னை ஊமைச்சி, பொல்லாதவள் என்று ஒதுக்கித் தள்ளும் போது, நீ ஒருத்திதான் என்னிடம் அன்பு செலுத்துகிறாய். உன்னைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது. உன் பிறந்த தினமான இன்று, பரிசுத்தமான மனத்துடன் உனக்கு அளிக்கும் இந்தப் பரிசைத் தட்டாமல் ஏற்றுக்கொள்.

அன்புள்ள, கமலம்"

பக்கத்திலிருந்த மைதிலியின் தாயார் கடிதத்தை வாங்கிப் படித்தாள். அவள் விழிகளில் நீர் தேங்கியது.

"மைதிலி, போய்க் கமலத்தை அழைத்துக் கொண்டு வா! இன்று நம் வீட்டில்தான் அவளுக்குச் சாப்பாடு" என்றாள், அம்மா.

உடனே மைதிலி எழுந்தாள். 'கமலம்! கமலம்!' என்று கத்திக் கொண்டே கமலத்தை அழைத்து வர ஓடினாள்.

நேருஜிக்கு நேரமே இல்லை!

ஒருநாள் நேருஜியின் காரியதரிசியிடம் ஒருவர் வந்தார். வந்தவர், "நான் நேருஜியைப் பார்த்துப் பேசவேண்டும். தயவுசெய்து அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

உடனே காரியதரிசி, "சரி, நீங்கள் யார்? எங்கு தங்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் நான்கு நாட்களாக நேருஜியின் வீட்டில்தான் தங்கியிருக்கிறேன். அவருடைய நெருங்கிய உறவினரில் நானும் ஒருவன்" என்றாராம், அவர்!

நான்கு நாட்களாக நேருஜியின் வீட்டிலேயே தங்கியிருந்தும், நேருஜியின் நெருங்கிய உறவினராக இருந்தும், நேருஜியைப் பார்த்துப்பேச அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை! ஆம், நேருஜிக்கு அவ்வளவு வேலை! இரவு ஒன்றரை மணிக்குத்தான் தினமும் படுக்கப் போகிறாராம்!

திருக்குறள் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

(கீழ்க்கண்ட 197 பேர்களுக்கும், 'ஈசாப் கதைப் பாடல்கள்' என்ற புத்தகம் பரிசாக அனுப்பப் பெற்றது. 'திருக்குறள் போட்டிப் பரிசு' என்ற முத்திரையுடனும், போட்டி ஆசிரியர் கையெழுத்துடனும் இப்புத்தகங்கள் அனுப்பப் பெற்றுள்ளன)

1. த. நாராயணசாமி, அரிச்சந்திரபுரம் 2. M. S. ராஜேஸ்வரி, பாண்டுச்சேரி 3. வி. ரா. மூர்த்தி, வேலூர் 4. M. A. ராஜமாணிக்கம், அருப்புக்கோட்டை 5. சு. மங்கபதி, திருநெல்வேலி ஜங்ஷன் 6. த. நாகராஜன், பாரூர் 7. அ. சுப்பிரமண்யன், ஆற்காடு 8. ரா. சாலம்மாள், புத்தூர், திருச்சி 9. S. அனந்தலட்சுமி, வேலூர் 10. V. கிருஷ்ணமூர்த்தி, வேலூர் 11. R. ராஜாம்பாள், செவ்வாய்பேட்டை சேலம் 12. R. N. ராஜன், சென்னை-13. 13. எம் ஜே. சித்திபாத்தும்மா, யாழ்ப்பாணம் 14. T. செந்தாமரைக் கண்ணன், சிதம்பரம் 15. P. ஞானசுந்தரம், பொள்ளாச்சி 16. T. மேரிதவமணி, ராமனுதபுரம், (கோவை) 17. எஸ். ஜெயலக்ஷ்மி, சென்னை-4. 18. ப. ரா. காசிநாதன், சென்னை-13 19. S. சோமு, பொள்ளாச்சி 20. ஜ. அ. சின்னையன், ஜம்பை 21. V. சந்திரசேகரன், ஆடுதுறை 22. ச. தர்மராஜன், விருதுநகர் 23. சு. கனகராசன், சின்னாளப்பட்டி 24. C. T. சுந்தரம், பன்ருட்டி 25. A. மேரி, திருச்சி 26. வே. வை. சுப்பையா, பொன்மலை 27 B. ராதாகிருஷ்ணன், கோவை 28. S. ஜெயலக்ஷிமி, வாலாஜாபாத் 29. K. A. தண்டபாணி, திருப்பாப்புலியூர் 30. ஆ. பாலசுப்பிரமணியன், திருப்பாப்புலியூர் 31. சுப. வெங்கடாசலம், தேவகோட்டை 32. புலியூர் நரசிம்மன், திருப்பாப்புலியூர் 33. C. V. S. ஜானகிராமன், உறையூர் 34. ஏ. டி. மயூரவல்லி. குடியேற்றம் 35. K. ராஜாசந்திரசேகர், குகை, சேலம் 36. ம, வெ. அரங்கபாடியம், சென்னை-17. 37. ரா. லக்ஷ்மி, கல்கத்தா 38. ர. பலராமன், குகை, சேலம் 39. எஸ். கோவிந்தராஜன், சென்னை-4 40. G. கிருஷ்ணஜி, திருச்சி 41. து. கி. சாமி, சின்னக் காஞ்சிபுரம் 42. S. ராமசாமி, சென்னை-5 43. C. K. இராமன், சின்னக் காஞ்சிபுரம் 44. C. K. அலர்மேலு, சின்னக் காஞ்சிபுரம் 45. N. சூரியன், எப்போதும்வென்றான் 46. N. சீதாலக்ஷ்மி, குகை, சேலம் 47. சு. வரதராஜன், சென்னை-1 48. N. A. பாலகிருஷ்ணன், ராசிபுரம் 49. D. E. T. ராஜன், மதுரை 50. N. தங்கராஜன், கும்பகோணம் 51. சு. ஸ்ரீனிவாசன், சென்னை-4 52. கி. ரா. சந்திரசேகரன், குகை, சேலம் 53. K.N. ராஜவேல், சின்னக் காஞ்சிபுரம் 54. S. மெய்யப்பன், வேந்தன்பட்டி 55. சொ. பழநியப்பன், ஆ. தெக்கூர் 56. S. பாண்டியன், சிறுகுடி 57. K. S. A. சாமி, சென்னை-6 58. அழ. பழனியப்பன், ஆ. தெக்கூர் 59. D. நாகராஜன், குகை,

சேலம் 60. எஸ். சின்னப்பா, கும்பகோணம் 61. S. ஜெயராமன், சைதாப்பேட்டை 62. E. S. S. குமார், தஞ்சை 63. C. S. தண்டபாணி, கும்பகோணம் 64. T. லெட்சுமணன், காரைக்குடி 65. KM. P. RM. வள்ளியம்மை, பொன்னமராவதி 66. M. வாசுதேவன், குளித்தலை 67. எஸ்.என். பழனிச்சாமி, உடுமலைப்பேட்டை 68. கு. வைத்திலிங்கம், மணக்கரை 69. மு. இராஜு, போடிதாசன்பட்டி 70. வீ. வ. ராசு. புதுவை 71. எஸ். கே. பழனிசாமி, சுண்டக்காமுத்தூர் 72. அ. அசன்முகம்மது, பெரியகுலையம் புத்தூர் 73. லெ. சேவுகன்செட்டி, சண்முகநாதபுரம் 74. N. பால்ஜெபதிலக், சேலம் 75 பு. இராசாமணி, விழுப்புரம் 76. M. ராதாகிருஷ்ணன், கோவை 77. M. சந்திரசேகரன், கோவை 78. மு. இராமசாமி, திருமங்கலம் 79. எஸ். வீரராகவன், சென்னை-17 80. அ. வே. சுந்தரம், சென்னை-2 81. V. D. சிவகுருநாதன், வெள்ளளூர் 82. என். பாலஜெயராமன், பொள்ளாச்சி 83. பழ. முத்து, R.C.புரம் 84. S. சுப்புலெக்ஷிமி, சைதாப்பேட்டை 85. D. பெருமாள், சோளம்பள்ளம் 86. க. கிருஷ்ணசாமி, பொள்ளாச்சி 87. G. சமயவல்லி, பண்ருட்டி 88. சி. அழகப்பன், குளித்தலை 89. S. R. கிருஷ்ணவேணி, குலூர் 90. எஸ். கண்ணன், பொன்னேரி 91. ரெகினு வெஸ்லி, சென்னை-17 92. V.சுந்தரேசன், சுவாமிமலை 93. N. மக்புல்பாஷா, திருச்சி 94. B. நவநீதம், தஞ்சை 95. R. V. சுந்தரராஜன், திருப்பதி 96. சொ. கோவிந்தராஜுலு, விருத்தாசலம் 97. எஸ். சுந்தரராஜன், சென்னை-17 98. க. சாமுண்டீஸ்வரி, சென்னை-1 99. எம். ஆர். அரங்கநாதன், சென்னை-11 100. மு. சிவசுப்பிரமணியன், உடுமலைப்பேட்டை 101. டி. எஸ். பாலசுந்தரம், திருநெல்வேலி 102. O. M. AR. முத்துவீரப்பன், இராமச்சந்திரபுரம் 103. M. கணபதி, சென்னை.24 104. P. முத்தையா, சேதுநாராயணபுரம், 105. சோ. சண்முகம், சின்னாளப்பட்டி 106. வை. ராஜகோபாலன், தஞ்சை 107. சே. கு. இராசகோபாலன், சேலம் 108. K. R. K. சந்திரன், உறையூர் 109. அழ. வயிரவன், தேவகோட்டை 110. P. R. ரங்கராஜு, சென்னை-16 111. K. பெரியசாமி, பதுளை, இலங்கை 112. ஜி. ராதா, சென்னை-1 113. இ. ச. மோகன், ஈரோடு 114. R. ஜானகிராமன், திருச்சி 115. T. திருநாவுக்காசு, சென்னை-14 116. R. கோபால்ராஜ், வண்ணாரப்பேட்டை, சென்னை 117. H. M. சர்க்கார், திருநெல்வேலி 118. சுப. முத்தையா, பூலாங்குறிச்சி 119. தே. கபாலி, சென்னை-14 120. R. வால்டர், சென்னை-10 121. P. கிருஷ்ணராஜன், குகை, சேலம் 122. தி. ரா. விசுவநாதன், திருப்பாலைவனம் 123. S. கோபாலன், மாயவரம் 124. மா. சின்னதுரை, உரிகம் மைனிங் (K. G. F.) 125. V. S. ஜெயராமன், மதுரை 126. அ. வீரப்பன். கொமாரபாளையம் 127. ந. தங்கவேலு, கொமாரபாளையம் 128. V. A. ரமணன், வில்லிவாக்கம் 129. வே. பா. மங்களம், வேலூர் 130. சித. அழகப்பன், சிறுவயல் 131. N. ஒ. வாசன், திருப்பரங்குன்றம் 132. இராம. அழகப்பன், அமராவதி புதூர்

133. மு. நடராஜன், புதுவை 134. மோ. நா. இராமமூர்த்தி. மோரூர் 135. அ. ம. சீனிவாசன், மோரூர் 136. ரா. லதாங்கி, சென்னை-17 137. வை. வாசுதேவன், திண்டுக்கல் 138. ச. தனபாலன், திருச்சி 139. S. காசிவிசுவநாதன், பாளையங்கோட்டை 140. தி. கி. லட்சுமிபதி, சென்னை-10 141. ஈ. வெ. இராசமாணிக்கம், ஈரோடு 142. ச. ஆறுமுகம், சிதம்பரம் 143. நா. மாரியப்பன் காரைக்கால் 144. R. கிருஷ்ணன், பெரம்பூர் 145. S. நடராஜன் திருப்பாதிரிப்புலியூர் 146. இ. இராஜேந்திரன், அருப்புக்கோட்டை 147. ச. கௌரிசங்கரன், சென்னை.1 148. வயி. இராமநாதன், இராங்கியம் 149. க. குமரேசன், திருநெல்வேலி சந்திப்பு 150. கரு. கணேசன், நாச்சியாபுரம் 151. அரு. இராமநாதன், தேவகோட்டை 152. பெ. நாகப்பன், பெரியநாய்க்கன்பாளையம், கோவை 153. பொ. சோமசுந்தரம், தேவகோட்டை 154. R. ராஜமாணிக்கம், குகை, சேலம் 155. K. V. நாராயணபாபு, பெரியமேடு, சென்னை 156. ச. முருகேசன், இராஜபாளையம் 157. சீ. சஞ்சீவிக்கனி, இராஜபாளையம் 158. டி. வி. கமலா, சென்னை-1 159. வி. இராசா, வேலூர் 160. முத்து எத்திராஜன், சென்னை-7 161. ஐ. வனஜா, பொன்மலை 162. பா. ராஜமாணிக்கம், இராஜபாளையம் 163. சி. அரிச்சந்திரன், இராஜபாளையம் 164. குறள்தாசன், பண்ணுருட்டி 165. லெ. சேவுகன், தேவகோட்டை 166. அரு. சிதம்பரம், காரைக்குடி 167. S. கிருஷ்ணன், மதுரை 168. வி. ராஜலக்ஷ்மி, குகை, சேலம் 169. R.சந்தானகிருஷ்ணன், சென்னை-2 170. கே. வி. ராமானுஜம், ஆத்தூர் 171. சீ. அரங்கபாஷ்யம், கும்பகோணம் 172. K. N. சந்திரசேகரன், குகை, சேலம் 173. இ. ராதாகிருஷ்ணன், குகை, சேலம் 174. A. பிலிப்பு ஜான்ஸ்றன், தூத்துக்குடி 175. எம். முத்துராமன், வம்பல் 176. P. ராமச்சந்திரன், குகை, சேலம் 177. த. ஆறுமுகம், காரைக்கால் 178. மோ. வெ. நிர்மலா, மோரூர் 179. M. S. ராமமூர்த்தி, திருவாரூர் 180. வெ. கமலா, குகை, சேலம் 181. மு. கணேசமூர்த்தி, சென்னை-7 182. தா. வெ. ரங்கசாமி, பெரியநாயக்கன்பாளையம் 183. கு. வே. நாகராஜன், நெற்குப்பை 184. தே. சுந்தரராஜன், செங்கற்பட்டு 185. கே. ராஜலக்ஷ்மி, இராஜபாளையம் 186. C. முத்துரத்னம், பொள்ளாச்சி 187. ரா. சிவலிங்கம், குகை, சேலம் 188. க. அ. அப்துல் ரஹ்மான், கனியூர் 189. K. R. கிருஷ்ணராஜ், குகை, சேலம் 190. க. சண்முகம், ஜம்பை 191. K. K. கோமளா, சென்னை-1 192. வெ. சண்முகசுந்தரம், மதுரை 193. V. தண்டபாணி, திருப்பாதிரிப்புலியூர் 194. வி. பத்மநாபன், சென்னை-5 195. வி. பி. சுப்பிரமணியன், மேல் ஆலத்தூர் 196. மோ. சு. பத்மநாபன், மோரூர் 197. S. மணி, சென்னை-3.

19925

Edited, Printed and Published by Rama. Arunachalam,
at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1.
Hon. Editor AL. Valliappa.